www.padippakam.com

அக்டோபர் 15
நவம்பர் 15

தமிழ் மாத இதழ்

# சங்கமம்

## ரஷ்யாவில் மாற்றம்

## மானிஷாவின் சாகசம்

## பஞ்சத்தை நோக்கி உலகம்

## தமிழ்மாகாண தேர்தல்



படிப்பகம்

www.padippakam.com


# சங்கமி

தனிச்சுற்றுக்கு மட்டும்
தமிழ் மாத வெளியீடு
அக்-15 நவ-15, 88

சங்கமி: 1

சந்திப்பு: 2

வெளியிடுபவர்
பாஸ்கரன். S.

ஆசிரியர்
வள்ளிநாயகம். A. P.

துணை ஆசிரியர்கள்!
தேசிகன். R. L.
சாம்ராட். C. A.
மோகன். V. C.
இளந்தமிழன். N. K.

ஓவியம்
சேகர். G.

அனைத்து
தொடர்புகளுக்கும்
''சங்கமி''
பாஸ்கரன். S.
3, 4வது குறுக்குத் தெரு
நியூ காலனி
சென்னை-600 044

தனி இதழுக்கு
நன் கொடை
ரூ. 2-00

அச்சிட்டவர்
தேவநேயன்
பிரிண்டர்ஸ் &
பப்ளிஷர்ஸ்
351, திருவல்லிக்கேணி
நெடுஞ்சாலை
சென்னை-600 005


## நாம்...நாம்...நாம்...

நம்மைச் சுற்றியுள்ள தனிமனிதரில், குடும்பத்தில், சமூகத்தில், அரசியலில் போலித்தனமும் நேர்மையின்மையுமே மிகுதியாகக் காணப்படுகிறது. ஒட்டுமொத்த சமூகம் முழுமையும் பத்தாம் பசலித்தனம், சாதியம், பெண்ணடிமைத்தனம், சுயநலம் ஆகியவைகளே முக்காட்டிருக்கிறது.

இந்த கேவலமான முக்காடுகளே காலம்தோறும் முகங்களாகி கவுரவம் கொண்டாடி வருகிறது. தற்போதைய சமூகச் சீரழிவுக்கு இவைகளே அடிப்படையாகி உள்ளன. சமூக மாற்றத்திற்கு இவைகளை சீண்டினாலொழிய நாம் வாழ்வின் எந்த அரங்கிலும் சிறப்புடன் சிறகடிக்க முடியாது.

அன்பை அகற்றிவிட்டு, பகுத்தறிவை தாழ்த்திவிட்டு நாம் மானுடத்தை கட்டி எழுப்பவே முடியாது. நம்மை நாமே பொய்யான பிரமைக்குள் அடைபட்டு பொழுது தீர்த்து வருகிறோம். உண்மையை அமுக்கி வைப்பதும், பொது நன்மைக்கான நாளை தள்ளிப் போடுவதும் மறைக்க, மறைக்க, மன்னிக்க முடியாத மனித விரோதங்களே ஆகும்

மக்கள் தந்திரத்தில் கட்டுண்டவர்களாக, கூட்டு வாழ்க்கைக்கு வேட்டு வைப்பவர்களாய் மதங்களையும்—சாதிகளையும் பிரகடனப் படுத்தி மனித மதிப்பு உயிரிழந்து நடைபிணங்களாகவே நடமாட்டம் செய்கின்றனர். மொத்த பெண்களையும் அடிமை சித்தம் கொண்ட ஆண் ஆதிக்க வீரர்கள், அரசியலில் ஒரு வேளை உணவிற்கு மட்டும் மீனைத் தருபவர்களாய், மீன்பிடிக்க கற்று கொடுத்து வாழ்க்கையை தருவதற்கு மனமில்லாமல் இருக்கிறார்கள்.

***இப்போதைய தனிமனித, சமூக, அரசியல் போக்குகளில் நம்பிக்கை கொள்வதற்கான தடயங்கள் ஏதும் தென்படவில்லை. பிரதிபலனை எதிர்பாராத அன்பு என்னும் அற்புதம் தன் ஆயுளை முடித்து நிற்கிறது.***

*நம் சூழல், மரபு, கலாச்சாரம், தேவைகள் இவைகளை சரியான முறையில் இனங்கண்டு, கணித்து நமக்கான புதுவாழ்விற்குரிய தத்துவம் இன்னும் முழுமை பெறாமல மூளியாகவே உள்ளது. அதுவரை மனித முண்டங்களே மனித அண்டங்களில் ஆக்ரமிப்பு செய்யும். அனைவருக்குமான வாழ்க்கையை அபகரித்துக் கொள்ளும் என்பது புலனாகி விட்டது.*

*சமூக தண்டனையாகவும், அங்கீகரித்துப்போன பழைய பழக்கமாகவும் உள்ள கடவுள்—மத மூட நம்பிக்கைகள், சாதியச் சச்சரவுகள், ஆணாதிக்க மேய்ச்சல்கள், சுயநல உடமை வெறி வேகங்கள் இவைகளை கூண்டோடு சிறைப்படுத்தி, நாம் விடை கொடுத்து மானுட சஞ்சாரமே இல்லாத இடத்திற்கு கடத்தினால் தான் தலைமுறை மாற்றம் என்பதும், சரியான மனித வாழ்வு என்பதும் தலைப்படும்.*

படிப்பகம்

# சங்கப்பலகை

''சங்கமி'' இதழுக்கு எனது நல்வாழ்த்துக்கள். ''சங்கமி'' நம்பிக்கையூட்டும் உள்ளடக்கங்களோடு காணப்படுகிறது. ''தொடரட்டும்'' என்று வாழ்த்தும்போதே தொய்வின்றி தொடர வேண்டுமே என்கிற அச்சமும், நம்மாலானதைச் செய்தல் வேண்டும் என்கிற உந்தலும் விளைகின்றன. இயன்றதைச் செய்யக் காத்திருக்கிறேன்.

குப்பு. வீரமணி
(பொ. ப. துறை)
சென்னை-10

நல்ல விஷயங்களை சொல்ல நினைக்கிறவர்களிடம் காசு, பணம் இருப்பதில்லை. ஆனால் சொல்லிவிட வேண்டும் என்னும் தவிப்பு மட்டும் இருக்கும். இந்த தவிப்பை தீர்த்துக் கொள்ளத்தானோ என்னவோ சங்கமி என்ற பத்திரிகை வந்திருக்கிறது. பகட்டான ஆடையில்லை. ஆனால் உள்ளடக்கம் அறிவுக்கு விருந்து. போயும் போயும் நெல்சன் மாண்டேலாவை அட்டைப் படத்தில் போட்டிருக்கிறீர்கள் என்றால் நீங்கள் எத்தகைய வியாபாரிகளாக இருப்பீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். விஷங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள் அவசியம் படிக்க வேண்டிய இதழ்.

பி. பத்மநாபன்
துணையாசிரியர்
தினசரி நாளிதழ்

தங்களது 'சங்கமி' இதழ் கிடைக்கப் பெற்றேன். மகிழ்ச்சி. நன்றி. இதழின் வெளியமைப்பும் உள்ளடக்கமும் மிகச்சிறப்பாக இருக்கிறது. இந்தக் கட்டத்திலே நாம் ஒன்றை நினைவு கொள்ள வேண்டும். நமது மனங்களிலே உருவகமாகிவிட்ட புதிய, புதுமை சமுதாய அமைவுக்கு கடந்தகால பேரறிஞர்களின் அறிவுரைகள், கோட்பாடுகள், தத்துவங்கள் எல்லாமே பிரச்சனைகளை ஓரளவு புரித்துக் கொண்டு துணிவு கொள்ள மட்டுமே-என நாம் நினைவு கொள்ள வேண்டும். நமது புதிய ஆற்றல் மிகு கூட்டுச் சுய சிந்தனைகளே நமது பணிக்கு யதார்த்த சக்தியாகும் என்பதை நினைவில் கொண்டு முயல்வோம்-வெல்வோம்.

கு. மு. இராமரட்ணம்
புலமைப் பண்ணை,
கோவை-641 007

சங்கமி இதழ் பார்த்தேன். உங்கள் அனைவரின் முயற்சியில் இதழ் வெளிவருவது குறித்து மிக்க மகிழ்ச்சி. இதழ் கடினமான எழுத்து நடையை உள்ளடக்கியுள்ளது. அவசியம் எளிமைப்படுத்துங்கள் எங்கள் ஊரில் ''சங்கமி'' பற்றிய கருத்துக்களையும், பொதுவாக தமிழக பத்திரிகைகள் சம்பந்தமாகவும் ஒரு கலந்துரையாடல் ஏற்பாடு செய்யலாம் என்று உள்ளோம். நிகழ்ச்சி உறுதி செய்தபின் அவசியம் கலந்து கொள்ளுங்கள். கார்த்திகா இராஜ்குமார் என்கிற சிறுகதை எழுத்தாளரை கேள்விப்பட்டிருப்பீர்கள். அவரை சங்கமியில் பயன்படுத்திக்கொள்ள முயற்சி செய்யுங்கள். மொழிபெயர்ப்புக் கவிதைகளைப் பத்து இதழ்களுக்குப் பிறகு வெளியிடுங்கள்.

S. அன்பரசு
டெக்ஸ்மேக் என்ஜினியர்ஸ்
கோவை-52

சங்கமி இதழைக் கண்டேன். மிக்க மகிழ்ச்சி. இதழில் புதிய நடைமுறை கையாளப்பட்டுள்ளது. சிறப்பிற்குரியது. சங்கமி போன்ற இதழ்களே நாட்டுக்குத் தேவை. நல்ல முயற்சி. தங்கட்கு என் நல்வாழ்த்துக்கள்.

T, பாலகிருஷ்ணன்
கொளப்பள்ளி,

உங்களது ''சங்கமி'' தமிழ் மாத முதல் இதழ் கிடைத்தது. மிகச் சிறப்பாக இருந்தது. உங்களது முயற்சி வெற்றியடைய வாழ்த்துகிறேன். இனிமேல் ஒவ்வாறு திங்கள் இதழும் எங்கள் இல்லத்தில் சங்கமிக்க விரும்புகிறேன்.

H. லிங்கராஜ்
இரத்தினபுரி

(4 ம்-பக்கம் பார்க்க)

www.padippakam.com





# மனித மதிப்பை மலரச் செய்வோம்!

— சகாப்தன்

மனித வாழ்க்கையை
எழுத,
எண்ணங்களை
நிரப்பிய
எதிர்காலப் பேனாவை
எடுத்தோம்.
தவறி விழுந்தது
தேடுகிறோம்...
எலும்புக் கூடுகளே
எமது கைகளில்...

வருங்கால மனிதர்கள் நிச்சியம் இவ்வாறு கூறுவார்கள்: பூமியின் உயிர் வாழ்க்கை எவ்வளவு சோதனைகளை அனுபவித்துள்ளது. தற்போது இந்த துன்ப துயரங்களும், பயங்கரங்களும் பழங்கதை ஆகிவிட்டது. வாழ்க்கை அன்பார்ந்த, அறிவார்ந்த வடிவங்களை மட்டுமே கொண்டுள்ளது. ஆரம்பத்திலிருந்தே பூமியில் பரிவும், அறிவு மிக்கப் பிறவிகளே குடியமர்ந்திருந்தால் நன்றாகயிருந்திருக்காதா? அப்பொழுதே இந்த துன்ப துயரங்களும், பைத்தியக்காரத்தனமும் தவிர்க்கப்பட்டிருக்கும் அல்லவா?

ஆனால், இன்றைய மனிதர்கள் எப்படியிருக்கிறார்கள்? இவர்கள் தேற்றைய மனிதர்களாக அல்லவா? இருக்கிறார்கள். இயற்கையின் மிகச் சிறந்த படைப்பான மனிதர்களை அவமானப்படுத்துவது, அலைக்கழிய வைப்பதே மனித குல சரித்திரமாக உள்ளது. மனித வாழ்க்கையானது இயற்கையின் ஒரு தன்னிகரகற்ற விசித்திரமான சிருஷ்டியாகும். அது இயற்கையில் உள்ள சுய ஒழுங்கமைப்பு நிகழ்வு போக்குகளின் பலனாக ஏற்பட்டதாகும். இந்த உலகம் மனிதன் வாழக்கூடிய இடமாக இன்னும் 600 கோடி ஆண்டுகள் இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது. மானுட உலகம் இதுவரை தனது பாதையில் மிகக் குறைந்த தூரத்தையே கடந்து வந்துள்ளது.

இருப்பினும் மனித சமுதாயம் உயிர் வாழ்வதே கேள்விக் குறியாகி உள்ளது. செயற்கையான— மரபான கட்டமைப்புகளும், நடைமுறைகளும் மனித மதிப்பிற்கும், மனித வாழ்க்கைக்குமான அமுலாக்கப் பாதையில் குறுக்கே நிற்கின்றன. உணர்வு மட்டத்திலும், மனோத்தத்துவ தன்மையிலும் பல வகைப்பட்ட பிற்போக்கு ஆளுமைகளே மனித சமுதாயத்தை ஆட்டிப் படைக்கின்றன. பழைய நடைமுறைப் பற்றி நிற்பதுமான— மாற்றத்தை விரும்பாத அடிமை வாழ்க்கையையே மானுடம் இன்னும் அனுபவித்து வருகிறது.

பிரபஞ்சம், வாழ்க்கை, மனிதர்கள் பற்றிய கண்ணோட்டத்தை கடவுளும் — மதமும் தலைவிதி தத்துவமும் களங்கப்படுத்தி உண்மையை மறைத்து வருகின்றன. மனிதன் ஒரு கூட்டுப் பிராணி என்பதும் பிறருக்காக உழைக்கும் போதுதான் மனித வாழ்க்கை துவங்குகிறது என்பதும் சூன்யத்துப் போய் விட்டது. வினாக்கள் நிரம்பிய மக்களது தேடலுக்குப் பதில் கொடுக்க, எந்தவித முயற்சியும் பலனளிக்காக வகையில் பழமைப் பாசி மனிதர்களை வழுக்கி விட்டு விடுகிறது. சாதி-மதங்கள் மனித ஒற்றுமையையும், உயர்வையும் உருக்குலைத்து விடுகிறது, ஆண் ஆதிக்கப் பொல்லாங்கு பெண்களின் மதிப்பையும், மாண்வையும் வாழ்வையும் சூறையாடி விடுகிறது. நிறவெறி கருப்பான மக்களை நிர்க்கதியாக்குகிறது. உடமை வெறி மனிதர்களின் உழைப்பை சுரண்டிவிடுகிறது. மனித அத்துமீறல்களைக் கொண்ட சுழற்சியான நிகழ்ச்சி போக்குகளே மனித சமுதாய இயக்கமாக நடைபோட்டு வருகிறது. மானுட இனத்தின் வள வாழ்வில் அக்கறை செலுத்துவதுமான உத்வேக மூட்டிய செயல்பாடுகள் காலம்தோறும் ஒருபக்கம் கிளர்ந்து எழுந்தாலும் மனித சச்சரவுகளை இன்னும் தீர்த்தபாடில்லை.

மானுட விவகாரங்களில் மோதல்களைத் தீர்க்கும் ஒரு மேம்பட்ட வழிவகையை நாம் நாடி நிற்கிறோம். செயற்கையான காரணங்களும், பொய், புரட்டு, அயோக்கிய சுரண்டல் தந்திரங்களும் மக்களின் நியாய உணர்வையும், உயிர் பிழைத்திருக்க வேண்டும் ஆர்வத்தையும் அடக்கி வைக்கவே தொடர்ந்து துடித்துக் கொண்டிருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com



உலகம் தழுவிய மோதலின் விளிம்பில்தான் மனித சமுதாயம் இன்று பயணம் செய்துக் கொண்டிருக்கிறது. இரண்டாம் உலகப்போருக்குப் பின் மனித சமுதாயம் பிராந்திய மோதல்களில் 2 கோடி பேரை இழந்து நிற்கிறது. ஒரு நிமிடத்திற்கு உலகின் ராணுவச் செலவு 20 லட்சம் டாலர் ஆகிறது. மத வெறி ஈரான்-ஈராக் போரில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மனித உயிர்களை பாழடித்திருக்கிறது இலங்கையில் சிங்கள இனவெறி பல ஆயிரம் தமிழ் மக்களின் இரத்தத்தை குடித்திருக்கிறது. நிறவெறி ஒரு நெல்சன் மாண்டேலாவை 26 வருடங்களாக சிறைப் பிடித்து வைத்திருக்கிறது. இந்தி மொழி வெறி இந்தியாவை தொடர்ந்து ஆள நினைக்கிறது. பிரதேச வெறி இஸ்ரேலில் பாலஸ்தீன மக்களை அகதிகளாக்கி விட்டது

பொதுவாக உடல் வதைபடும் படலங்களாகவே மனித உலகம் அமையப் பெற்றுள்ளது. இதில் எந்த நாட்டு மக்களுக்கும், எந்த மொழிபேசும் மனிதர்களுக்கும் ஆட்டிப் படைக்கும் ஆதிக்க வடிவம் மாறியிருக்கலாமேயொழிய, அனைவருக்குமான அடிமை வாழ்வு பொதுவாக உள்ளது. இன்றையஉலகின் நடைமுறை எளிதானதாவோ, நேர்முகமானதாகவோ இல்லவே இல்லை. பகுத்தறிவிலும் உலகு தழுவிய பொது ஒழுக்க நெறியிலும் நம்பிக்கை கொள்வது என்பது மிகமிக அரிதாக உள்ளது.

மனிதர்கள் வெவ்வேறு ஆனவர்கள்தான், ஆனால் சமமானவர்கள், ஒவ்வொரு மனிதருக்கும் வாழ்க்கை இருக்கிறது. வயிறு இருக்கிறது. உழைக்கும் கரங்கள் இருக்கிறது. அறிவு இருக்கிறது. தனித்த ஆற்றல் இருக்கிறது. நிகழ்வுகளைக் கண்டு உந்தும் உள்ளம் இருக்கிறது. வாழ்க்கை வாழ்வதற்கே என்னும் அவசியம் இருக்கிறது. இத்தனை உண்மைகளையும் முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல சமதர்மமில்லாத அதர்மம் மூடி மறைக்கப்பார்க்கிறது.

இன்று சமதளமும்—அமைதியும் எங்கோ நெடுந்தூரத்திற்கு போய்விட்டன. துன்பங்களுக்கே முகமாகும் மனித ஜீவன்கள் உண்மையான மானுட உலகை படைக்க முடியாவாறு மதவெறி சாதி வெறி பெண்ணடிமை வெறி, நிற, இன, மொழி வெறி, பிரதேச வெறி, சுயநல உடமைவெறி சுதந்திரம் கொண்டு ஆளுமையாக உள்ளன. ஒவ்வொரு மனிதனும்/மனிதக் குழுவும் மற்றவர்களை அடிமைப் படுத்தவே முனைப்படுகின்றன. தான் ஆளுவதாக நினைத்து பிரமைப் பிடித்து திரிகின்றன. இன்றைய உலகை உண்மை ஆளுவது கடவுள், அரசு இயந்திரங்கள், ஆயுதங்களே.

பிரபஞ்சத்தின் சித்தம் நன்மையானது. ஏனெனில் ஒட்டு மொத்த அண்டவெளி சித்திரத்தில், நாம் நம் வாழ்வு நலத்தையும், பகுத்தறிவையும், முழுநிறைவையும், அவற்றின் தொடர்ச்சியை மட்டுமே யாதார்த்தமாக காண்கிறோம்

ஆனால், இன்று இயற்கை கூட உயிர்களை வெறுக்க ஆரம்பித்து விட்டது. குடிநீருக்கே மக்கள் வரிசையில் வாடிப்போய் நிற்கும் பரிதாபம் இந்தியாவில். மனிதர்களையும், மற்றைய உயிரினங்களையும் அழித்தொழிக்க மழை தேர்ந்தெடுத்த இடம் பங்களாதேஷ். சீனாவில் பற்றிய நெருப்பு மரங்களை எரித்து, ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து கடைசியில் மனிதர்களையும் தொட்டது. நாற்பது பாகைக்கு மேலான வெப்பம் கிரீக் மக்களை வாட்டியது. பசியாலும்பட்டினியாலும்நமீபியா, எத்தியோப்பியா நாடுகளில் இரத்தம் சிந்தாத மரணங்கள் தொடர்கின்றன.

திடீரென கோபித்துக் கொள்ளும் இயற்கையால் அப்பாவி உயிர்கள் அழிந்து போகின்றன. உடமைகள், இருப்பிடங்கள், அழிக்கப்பட, உயிர் பாதுகாப்பு தேடி தப்ப வேண்டியுள்ளது. உலகமெங்கும் அகதிகளின் எண்ணிக்கை பெருகுகிறது.

இயற்கை ஒருபுறம் கொலைகளை குத்தகைக்கு எடுத்திருக்க விஞ்ஞானம் மறுபுறம் போட்டிக்கு நிற்கிறது. இயற்கை அழிவுகளிலிருந்து மக்களை காப்பாறறுவதில் அக்கறை கொள்ளாத விஞ்ஞானம் உயிர் அழிப்பில் ஆர்வம் காட்டுகிறது. டைனமேட்டிலிருந்து அணுகுண்டு வரை வந்துவிட்ட விஞ்ஞானம் அழிவின் சான்றிதழை விண்வெளிப் போரின் மூலம் பெற முயன்று கொண்டிருக்கிறது. கோடாரிக் காம்பே மரங்களின் அழிவில் பங்கெடுப்பது போல மனிதனே இன்னொரு மனிதனின் அழிவுக்கு காரணமாகிறான். சனத்தொகை குறைப்புக்கு தன்னாலான முயற்சிகளை செய்து வருகிறான்.

அணுகுண்டு பரிசோதனைகளால் பயிர்கள் நாசமாகின்றன. புதிய நோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன. காலநிலையே மாற்றப்படுகிறது. நெவடா பாலைவனம் பனிமழையைச் சந்திக்கிறது. தார் பாலைவனம் இந்திய எல்லை முழுவதும் வியாபிக்க வளருகிறது. சூரியனின் பயங்கர வெளிப்பாடான புறஊதாக் கதிர்கள் பூமியிலுள்ள உயிர்களைப் பாதிக்காமல் பாதுகாக்கும் ஓசோன் படலம் துளை விழுந்தாகி விட்டது. முகம் தெரியாத எதிரிகளால் மக்கள் துன்பத்தை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விஞ்ஞானத்தின் நோக்கம் உண்மையைத் தேடுவதாகும். உண்மை ஒரு போதும் ஒழுக்கம் கெட்டதாகயிருக்க முடியாது. உண்மையை அறிவதே மனித வாழ்வின் இறுதி குறிக்கோள் ஆகும். மனித நேயம் என்ற பேருண்மையை ஆயுதங்களும் – அற்ப கடவுள் ஆதிக்கமும் குழிதோண்டி புதைத்து விட்டன. மனசாட்சி, அறநெறி இவைகளை, இணைத்த மனித கலாச்சாரத்தை உலக விவகாரங்களில் நாம் பேணியாக வேண்டும்.

வாழ்வின் பொருளை அறிய வேண்டும் என்ற தாகத்துடன் மனித குலம் இன்று தட்டுத் தடுமாறி நடை போடுகிறது. புதிய சிந்தனை, புதிய நடை முறை என்ற குளிர்ந்த நீரால் அதன் தாகம் நிச்சயம் தணிக்கப் பட்டே ஆக வேண்டும்

படிப்பகம்

www.padippakam.com



இந்த உலகம் பத்திரமானதாக இருக்க வேண்டுமானால் மக்கள் கனிவுடையவர்களாக ஆக்கப்பட வேண்டும். மனிதர்கள் ஒருவரை ஒருவர் கொல்வது, ஆளுவது, அடிமைப்படுத்துவது, இகழ்வது என்பது இயற்கைக்கு விரோதமானதே ஆகும். களச்சாவு, ரத்தக்களறி ஆறாப் பெருந்துயரம் ஆக மனித செயலின் விளவுகளை நாம் மரணிக்க செய்து விட்டு புதியவர்களாய் பிறந்து புது உலகம் படைக்க வேண்டும். அதில் மனித மதிப்புகளை உயர்த்திப் பிடித்து மானுட வாழ்க்கையை தக்க வைத்து மனித நாகரீகத்தை மேன்மேலும் வளர்க்க வேண்டும்.

சமுதாய மாற்றம் முதலில் தனி மனிதனில் துவங்க வேண்டும். சுதந்திர உணர்வு தனி மனிதரில் முதலில் மலர வேண்டும். அப்போதுதான் ஒரு மனிதன் தான் எதைச் செய்ய ஆசைப்படுகிறானோ அதை செய்யமுடியும், அப்போதுதான் மனிதர்களது ஆக்கச் சக்திகள் பூரணத்துவத்துடன் அவர்களிடமிருந்தே மலரும். நமது ஊர், உலகம் ஒரு தலைபட்சமான எண்ணத்தையும், பழைய கால மனோபாவத்தையும், பகைமை உணர்வையும் கொண்டு, வேண்டாத சுமைகளாய் கடவுளையும், மதத்தையும், சாதியையும்; பெண்ணடிமைத்தையும், நிற, மொழி, வெறி இன, பிரதேச வெறியையும் ஆயுதத்தையும், அடக்குமுறை அரசையும் சுமந்துக் கொண்டு மூச்சுத் திணறுகிறது. இந்தப் பாரங்களை மனிதர்கள் இறக்கி வைத்துவிட்டு. பிரபஞ்சம் அழிவற்றது. அது போன்றே அதனுடைய பாகங்களும், மகிழ்ச்சியான உயிர்வாழ் பிறவிகளும் அழிவற்றவை, உயிர் வாழ்க்கைக்கு தொடக்கமும் இல்லை. முடிவும் இல்லை. அது போன்றே பிரபஞ்சத்திற்கு தொடக்கமும் இல்லை. என்ற முடிவுக்கு வரவேண்டும்.

நாம் எல்லோரும் ஒரே குடும்பத்தை மனித குடும்பத்தை சேர்ந்தவர்கள். ஒவ்வொருவருக்கும் ஒரே விதமான அடிப்படை மற்றும் சம உரிமை மதிக்கப்பட அனைவருக்கும் பங்கு உண்டு. மேலும் மற்ற மக்களின் உரிமைகள்ளா பாதுகாக்கும் பொறுப்பு ஒவ்வொருவருக்கும் உண்டு என்று விரைவில் ஒருநாள் சூளுரைக்கவே போகிறது.

அதில் எல்லோரும் ஒருவருக்காகவும்; ஒருவர் எல்லோருக்காகவுமான மனித ஆளுமையே தலைதூக்கப் போகிறது.

அறியாமையிலிருந்து விடுதலையே தேவையிலிருந்து விடுதலையே நாளைய மனிதர்களை ஆளவிருக்கிறது. ●

---

(சங்கமிப்புகள் தொடர்ச்சி)

இலக்கியத்திற்கும் — அரசியலுக்கும் நல்லதொரு பாலமாக "சங்கமி" இதழ் அமைந்திருக்கிறது. இளைஞர்களுக்கு நடைமுறை வாழ்வில் வழிகாட்டக்கூடிய செய்திகளுக்கு அதிகம் கவனம் செலுத்துங்கள். மறக்கப்பட்டுள்ள இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைவூட்டியது குறிப்பிடத் தகுந்தது. சமூகப் பண்பாட்டு அரங்கில் அக்கறை உள்ளவர்கள், அரசியல் செயல்பாடுகளில் ஒதுங்கியவர்களாகவும், அரசியலில் முற்போக்குத் தன்மை உள்ளவர்கள் சமூகப்பண்பாட்டில் மேம்படாமலும் உள்ளனர் என்பதை தாங்கள் சுட்டிக் காட்டியிருப்பது நூற்றுக்குநூறு உண்மையே. பெண்களின் விடுதலைக்கு பெரும்பான்மையான பெண்களே தடையாக இருந்து வரும் தற்போதைய நிலையில், பெண்களின் கருத்து மாற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் தரமான படைப்பாளிகள் பெண்களிலிருந்தே தோன்றி உயரவும் "சங்கமி" ஆவன செய்யும் என நம்புகிறேன்.

சு. நடராஜ்குமார்
புன்செய் புளியம்பட்டி

"சங்கமி" முதல் இதழ் கிடைக்கப் பெற்றோம். பல எதிர்பார்ப்புகளை எங்களிடம் தோற்றுவித்துள்ளது. போதிய படங்கள் சேர்க்கப்பட வேண்டும். தலையங்கமும், சகாப்தனின் "புதியதை நோக்கி" கட்டுரையும் சரியான திசைவழி நோக்கி உள்ளது. இனி அதிகமான அளவில் பேட்டிகளை சேர்க்காதீர்கள். உழைக்கும் பெண்களை பற்றியும் நியைற எழுதுங்கள். இந்திரன் மொழியாக்கம் செய்த "ஒரு தலித்தின் கதை" எங்கள் நெஞ்சைத் தொட்டது. அறிவியல் துணுக்குகள் அவசியம் தேவை உலக விவகாரங்கள் குறித்து தொடர்ந்து வெளியிடுங்கள். இதழை எப்படியும் தொடர்ந்து நடத்துங்கள். முடிந்தவரை நாங்கள் உதவி செய்கிறோம்.

பூபாளம் இலக்கியமையம்
திருப்பூர்

தங்களின் 'சங்கமி' இதழைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. தங்களின் தலையங்கம் படித்தவுடனேயே சங்கமியின் உன்னத நோக்கம் மிகத் தெளிவாகவே புரிந்தது. அன்பின் அடிப்படையே மனித நேயத்தின் சங்கமத்தில்தான் பரிணமிக்கிறது.

மதம், இனம், மொழி, நாடு என்ற பிரிவினைகளில் தான் மனிதன் வாழ்கிறான். மனிதன் மனிதனாக வாழவில்லை. இதற்கெல்லாம் காரணம் மனிதன் மனித நேயம் படைத்தவனாக இல்லாதிருப்பதுதான். பெண்ணடிமை எதிர்ப்புக்கும் பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கும் சாதியக் கொடுமைகளை ஒழிப்பதற்கும் ஓங்கிக் குரல் கொடுப்பதற்கான உயர்ந்தபட்ச முயற்சியாக 'சங்கமி'யை நீங்கள் கொணர்ந்திருக்கிறீர்கள்.

உங்களின் உளப்பூர்வமான முயற்சி வெற்றிபெற என் வாழ்த்துக்கள். அன்பு என்றும் வெல்லும்.

சுந்தரபாரதி
சென்னை-24

தாங்கள் "சங்கமி" இதழ் கொண்டு வருவது குறித்து மிக்க மகிழ்ச்சி. எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரை அனைத்து இடங்களுக்கும் சங்கமி செல்ல வேண்டும் என்பதே எங்கள் முழுமையான அவா. தொடர்ந்து மறவாமல் அனுப்பி வையுங்கள்.

சுசி. கலையரசன்
கோவை மாவட்ட
திராவிடர் கழகம்

படிப்பகம்

www.padippakam.com



# ஒலிம்பிக் ஒரு கண்ணோட்டம்

தென்கொரியாவின் தலைநகரான கியோலில், 16நாட்கள் பரபரப்புடன் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 160 நாடுகளை சேர்ந்த 10,000 விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். ரூ 4030 கோடி செலவான இவ் ஒலிம்பிக் போட்டியில் ஒரு இடைவேளைக்குப் பிறகு அமெரிக்காவும் ரஷ்யாவும் சந்தித்துக் கொண்டன. தென் கொரியா நாட்டின் மீது அமெரிக்கச் செல்வாக்குக் குறித்தும் கியூபாவின் மீதான உள்நாட்டு அமெரிக்கத் தலையீடு குறித்தும் வட கொரியாவும் கியூபாவும் இப்போட்டிகளைப் புறக்கணித்தன.

ஒலிம்பிக் போட்டி நடைபெறுவதற்கு முன்பே சோவியத் தேசிய ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் மரத் செர்மோவ ஒரு கணிப்பீட்டைத் தந்தார். அவர் கணிப்பின் படியே சோவியத் யூனியன், கிழக்கு ஜெர்மனி, அமெரிககா ஆகிய மூன்று நாடுகளும் முன்னணியில் நின்று வெற்றி பெற்றது. இந்த ஒவ்வொரு நாடும் சராசரி ஐம்பது தங்கப் பதக்கங்கள் பெறும் என்கிற கணிப்பு, அமெரிக்காவைத் தவிர சோசலிச நாடுகளுக்குக் கிட்டத்தட்ட சரியாகவே அமைந்து விட்டது.

ஒலிம்பிக்கின் வெற்றிதோல்விகளை வேறு படுத்தி அறிவதற்கு சோசலிச நாடுகள் பெற்ற வெற்றி, வளர்ச்சி பெற்ற நாடுகள் பெற்ற வெற்றி வளர்முக நாடுகள் பெற்ற வெற்றி என்று பிரித்து வகைப் படுத்திக் கொள்ளலாம். சோசலிச நாடுகளில் ரஷ்யா, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, பல்கேரியா, ருமேனியா, சீனா, யூகோஸ்லேவியா, செக்கோஸ்லோவேகியா, கியா, போலந்து, மங்கோலியா போன்ற நாடுகள் முதலியனவாகும். வளர்ச்சி பெற்ற நாடுகள் அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன், ஜப்பான், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, நார்வே, ஹாலந்து, டென்மார்க், பின்லாந்து, ஸ்பெயின், ஸ்வீடன், ஸ்விட்ஸர்லாந்து, பெல்ஜியம் ஆகிய நாடுகள் ஆகும்.

மொத்தத் தங்கப் பதக்கப் பட்டியலில் 241-ல் சோசலிச நாடுகள் மட்டும் 55.2% அதாவது 133 பதக்கங்களைப்பெற்று சாதனை படைத்துள்ளது. வளர்ச்சி பெற்ற நாடுகள் 36.1% அதாவது 87 பதக்கங்களைப்பெற்றுள்ளது. வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை 8.7% அதாவது 21 பதக்கங்களைப்பெற்றுள்ளது மொத்தப் பதக்கத்தில் (வெள்ளி, வெண்கலம்) சோசலிச நாடுகள் 381ம் வளர்ச்சி பெற்ற நாடுகள் 284ம் வளர்முக நாடுகள் 74ம் பெற்றுள்ளனர்.

மனித சமூகத்துடன் பின்னிப் பிணைந்துள்ள அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம் போன்ற பல்வேறு அம்சங்களையும் உள்ளடக்கிய ஆரோக்கியமான வெளிப்பாடுகளில் ஒன்றுதான் விளையாட்டும். ஒரு தேசத்தின் வளர்ச்சியாக பரிணமிக்க ஒரு குறிப்பிட்ட துறைகளே மேலோங்கி நிற்கும். ஆனால் ஒலிம்பிக் போட்டிகளில் சோசலிச நாடுகள் அடைந்த மாபெரும் வெற்றியைப் பார்க்கும் போது அனைத்துத்றையிலும்ஒரு அளப்பறிய சாதனையை நாடுகள் ஏற்படுத்தும் என்பது ஊர்ஜிதமாகிறது.

நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டி சோசலிச நாடுகளின் ஏகபோகம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஒருசோலிச சமுதாயத்தில் மனிதர்களுடைய ஆற்றல்கள் வளர்க்கப்படும். அது முறையாக வெளிக்கொணரப்படும். அது தனித்தன்மையுடன் விளங்கும்என்பது நன்கு புலனாகிறது. தனிமனிதப் பங்களிப்பு சமுதாயப் பங்களிப்பாக பளிச்சிடுவதால் கூட்டுணர்வு, கூட்டு முயற்சி, கூட்டுவெற்றி என்பது சமுதாய வெற்றியாக சோசலிச நாடுகளுக்கு அமைந்திருக்கிறது.

ஒருநாடு செல்வம் கொழிக்கும் நாடாக மட்டும் இருந்தால் போதாது. சமூகம் அரசியல் பொருளாதாரக் கூட்டம்சங்கள் ஒருங்கிணைந்து ஒருஆரோக்கிய பொது அம்சத்துடன் செயல்பட்டால்தான் வெற்றியைத் தழுவ முடியும் என்பது புலனாகிறது.

வளர்ச்சி பெற்ற நாடுகள் ஆனாலும் சரி வளர்முக நாடுகளானாலும் சரி தனிஉடமை, தனிநபர் விருப்பம், தனிநபர் சுதந்திரம் சமூக அன்னியமாக்கப்பட்ட மனிதனின் ஆற்றல் இவைகள் கோலோச்சி நிற்பதால் அரசு, சமூகம் இவற்றில் குழு மனப்பான்மை அரசியல் தலையீடு ரத்த உறவுகள், குறுகிய பிணைப்புகள் ஆகியவற்றின் குறிக்கீடு இருப்பதால் மனித ஆற்றல்கள் முறையாக வளர்க்கப் படாமலும், முதன்மைப் படுத்தப்படாமலும் ஆகிவிடுகிறது. புகழ், பெருமை ஆளுமை என்கின்ற ரீதியில் வளர்சியுற்ற நாடுகளும் ஏழ்மை இயலாமை, தாழ்வுமனப்பான்மை இவை கொண்டு வளர்முக நாடுகளும் பொதுப் போட்டிகளில் இயந்திர ரீதியாகக் கலந்து கொள்கின்றன.

மனித ஆற்றல்கள் பொதுவானவை எந்த நாட்டின் பொருளாதாரக் காரணமும், சமூகக் காரணமும், கலாச்சாரக் காரணமும். அதற்கு ஒரு போதும் தடையாக இருக்க முடியாது. மனித ஆற்றலை அனைத்துத் துறையிலும் மேம்படுத்தும் வண்ணம் புதிய சீர்திருத்தக் கொள்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டால் தான் வளர்ந்த வளர்முக நாடுகளின் அனைத்துத்துறைகளின் வெளிப்பாடும் சோசலிச முகாம்களுக்கு இணையாகச் செல்லும் மக்கள் சக்தி என்பது அனைத்துத் துறைக்குமான பொதுசக்தி என்கின்ற முறை கையாளப்

தொடர்ச்சி 8-ம் பக்கம்

படிப்பகம்

www.padippakam.com



சிறுகதை:



# இருட்டுக்கு நிழல் இல்லை

இந்திரன்

அவன் பனியைப்பற்றி
கவலைப்படாதவனாக இருந்
தான். காற்றழுத்தம் குறை
வாக இருந்த ஒருநாள் மாலை,
சரக்குக்கப்பலிருந்து சார்
ஜென்ட் இறங்கிய போது பனி
யைக் கொஞ்சம்கூட கவனிக்க
வில்லை. ஆனால் அது
அவனது கழுத்தில் ஈரமாக
விழுவதையும் உணர்ந்துதான்
இருக்கவேண்டும். ஆனால்
நீங்கள் அவனிடம் இதுபற்றி
கேட்டால் பனி பெய்கிறது
அவனுக்குத் தெரிந்திராது
தான்.

வெள்ளைத்துகள்களாக பனி
விழுந்து கொண்டிருப்பதைப்
பாதையோரத்து விளக்கு
களின் வெளிச்சத்தில்கூட
அவன் கவனிக்கவில்லை.
அதிக பசியுடனும், அதிக
உறக்கத்துடனும், அதிக
களைப்பாகவும் இருந்தான்.

டார்செட் பாதிரியார் தமது
வீட்டின் தலை வாயில்
விளக்கை அணைப்பதற்காகக்
கதவைத் திறந்த போது
வெளியே பனி விழுவதைப்
பார்த்தார். அத்துடன் ஒரு
பெரிய கருப்பு மனிதன் தனக்கு
முன்னால் நிற்பதையும் கண்
டார். இரவின் ஒரு பகுதியைப்
போல, அந்த கருப்பன் தன்
முகத்தில் பனியுடன் நின்றிருந்
தான். அவன் வேலையில்
லாமல் திண்டாடிக் கொண்டி
ருப்பவன் என்று வெளிப்படை
யாகத் தெரிந்தது.

''மன்னிக்கவும், இங்கே இட
மில்லை. வலது பக்கமாக
போய் நான்கு கட்டங்கள்
தாண்டி, இடப்புறமாகத்
திருப்பி ஏழு கட்டடங்களைக்
கடந்தால், அங்கே சத்திரம்
ஒன்று இருக்கிறது. மன்னிக்க
வும். இங்கே இடமில்லை.''

பாதிரியார் தனது வாயைத்
திறந்துவிட்டார். என்பதை
சார்ஜெண்ட் புரிந்து கொள்
ளும் முன்னரே அவர் கூறி
முடித்து கதவை மூடிவிட்டார்.

பாதிரியாரிடம் சார்ஜென்ட்
பல செய்திகளைச் சொல்ல
வேண்டுமென்று நினைத்திருந்
தான். முன்னரேதான் எண்
ணற்ற சத்திரங்களில் இருந்த
தையும், அங்கு இப்போதுமே
படுக்கைகள் நிறைந்து விட்டு
இருந்ததையும், இரவு உணவு
தீர்ந்துவிட்டு இருந்ததையும்,
நிறவேற்றுமை அங்குநிறைந்து
இருந்ததையும், இன்னும் பல
செய்திகளையும் சொல்ல
நினைத்திருந்தான். ஆனால்
அவரோ இல்லை என்று
சொல்லி கதவை மூடிவிட்டார்.

அவற்றைப்பற்றி எல்லாம்
கேட்பதற்கு, அவர் தயாராக
இல்லை. அதோடு கூட மூடு
வதற்கென்று அவரிடம் ஒரு
கதவு இருக்கிறது.

அந்தப் பெரிய கருப்பு மனி
தன் திரும்பினான். இன்னும்
கூட அவன் பனியைக் கவ
னிக்கவில்லை. அதிலேயே
நடந்து போனான். பனிஈர
மாக, குளிருடன் அவன்
தாடையில் குத்துவதையும்,
கருப்புக் கைகளை ஈரப்படுத்து
வதையும், செருப்புக் காலினுள்
ஊறுவதையும் அவன் கவ
னித்து இருந்தாலும் இருக்
கலாம். அவன், பசி, குளிர்,
உறக்கம் முதலியவற்றுடன்
நடைபாதையில் நின்று மேலும்
கீழும் பார்த்தான்.

சரியாக கவனித்ததில்,
பிறகு அவனுக்குத் தெரிந்தது:
அவன் ஒரு சர்ச்சின் முன்னால்
நின்று கொண்டிருக்கிறான்.
ஆம்! ஒரு தேவாலயம்தான்.
பாதிரி மாளிகைக்குப் பிறகு
ஒரு தேவாலயம்.

அதற்கு இரண்டு கதவுகள்
இருந்தன. வெள்ளை வெளே
ரென்ற பனி இரவில் அதன்
படிகள் வெண்மையாகவும்,
விசாலமாகவும் இருந்தன.
மெலிந்த இரண்டு தூண்களி
டையே இரண்டு உயரமான
கதவுகள். அதற்கும் மேலே
ஒரு சன்னல்; அதற்கும் மேலே
ஒரு சன்னலில் கல்லில் செய்த
ஒரு சிலுவை; சிலுவையில்
யேசுநாதர் — அவரும் கல்லில்
தான். இவை அனைத்தும்
தெருவிளக்கு வெளிச்சத்தில்
வெளிறிக் காணப்பட்டன; பனி
யில் தீட்பமாக, ஆனால் வெளி
றிப்போய் காணப்பட்டன.

சார்ஜென்ட் தன் கண்களை
சிமிட்டினான். மேலே பார்த்த
போது அவனது கண்ணில்
பனி விழுந்தது. அந்த இரவி
லேயே இப்போதுதான் தான்
முதன் முதலாக பனியை
உணர்ந்தான்.

தன் தலையை உதறினான்
மேற்சட்டை கையிலிருந்து
பனியை உதறினான். பசியாக
உணர்ந்தான், எதையோ
இழந்து விட்டதாக உணர்ந்
தான்; இழக்கப் போவதாகவும்
உணர்ந்தான்.

தேவாலய படிகளில் ஏறி
னான். கதவைத் தட்டினான்.
பதில் இல்லை. கைப்பிடி மூல
மாக முயன்றான். அது பூட்டிக்
கிடந்தது. அவனது நீண்ட
கருப்பு உடலை கதவின் மீது
சாய்த்து தேவாலய கதவை
தோளால் இடித்தான். ஒரே

படிப்பகம்

www.padippakam.com



சீரான உரத்த உறுமல்களுடன் கதவை முட்டினான். ''நான் களைத்திருக்கிறேன். ஹீம் ... பசியுடன் ... ... ஹீம் — தூக்கத்துடன் நான் எங்காவது தூங்கியாக வேண்டும். இது தேவாலயம் தானே. சரி, நல்லது.'' அவன் கதவை முட்டித் தள்ளினான். திடீரென்று அளவுக்கதிகமான ஓசையுடன் அந்தக் கதவு உயரமான, உக்கிரமான அந்தக் கருப்பனுக்கு இடம் கொடுத்தது.

இதற்குள்ளாக இரண்டு, மூனறு வெள்ளையர்கள் அங்குக் கூடிவிட்டனர். அவனை நோக்கி கொடூரமாகக் கூச்சல் போட்டுக் கொண்டு இருந்த அவர்களை அவன சட்டை செய்யவில்லை. ஊளையிட்டுக் கொண்டே இன்னும் இரண்டு, மூன்று வெள்ளையர்கள் அவனை நோக்கி ஓடி வந்தனர்.

''ஏய்'' அவர்கள் கத்தினார்கள். ''ஏய்'' உம். பதில் கொடுத்தான் நீக்ரோ. ''இது வெள்ளையர்களுக்கான தேவாலயம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் நான் எங்காவது படுத்துத் தூங்கியாகவேண்டும் அவன கதவின்மீது மற்றுமொரு முறை பாய்ந்தான். ஹூம்.... கதவு உடைந்து வீழ்ந்தது.

கதவு இடம் கொடுத்த அதே நேரத்தில், இரண்டு வெள்ளை காவல் அதிகாரிகள் ஒருகாரில் வந்து இறங்கினர். படிகளின் மீது கைத் தடிகளுடன் ஓடி வந்தனர்; சார்ஜெனடை பிடித்துக் கொண்டனர். ஆனால் சார்ஜெனிடுடகோ கதவிலிருந்து இழுக்கப்படவோ தள்ளப்படவோ மனமில்லை. அவன் கதவுக்குப் பக்கத்திலிருந்த இரணடு உயரமான கல் தூண்களில் ஒன்றைப் பற்றிக் கொண்டான். காவலர்கள் அவனை இழுக்கவே அவன் தூணை இழுத்தான். தெருவிலிருந்தவர்களால் பெரும் பாலோர் அவனை இழுப்பதில் காவலர்களுககு உதவி செய்தனர்.

வேலை வெட்டி இல்லாத ஒரு கருப்பு நீக்ரோ தங்கள் தேவாலயத்தைக் கைபபற்றி விட்டதாக அந்த மக்கள் நினைத்தனர். என்ன அற்புதமான எண்ணம்! அவன் தலையில் காவலர்கள் அடிக்கத் தொடங்கினர். அதையாரும் எதிர்பார்க்கவில்லை. சார்ஜென்ட் இன்னமும் கல்தூணை விடவில்லை. பிறகு அந்தத் தேவாலயமே இடிந்து விழுந்தது. தேவாலயத்தின பொிய பாறை ஒன்றும், பிறகு சுவர்களும், பிறகு உத்திரங்களும், சிலுவையும், சிலுவையில் இருந்த இயேசுவுமாக அனைத்தும் ஒனறன் பின் ஒன்றாக விழுந்தன.

செங்கற்களும், பாறைகளும், குப்பைகளும் காவலர்கள்மீதும் மற்றவர்கள்மீதும் விழுந்து அவர்களை முடின. அநதத் தேவாலயமே பனியில் இடிநது விழுந்தது. சார்ஜென்ட் அவற்றின அடியிலிருந்து எழுந்தான கையோடு வந்துவிட்ட கல் தூணை தோளமீது வைத்துக் கொண்டு நடக்கலானான், அவன் தனக்கு இடமளிக்காத பாதிரியையும், அவரது புனித இல்லத்தையும் ஒரு சேர புதைத்துவிட்டது போன்ற நிம்மதியல் இருந்தான். கையிலிருந்த கலதூணை ஏழு கட்டடங்களுக்கு அப்பால் வீசியெறிந்தான். தெருவில் நடக்கலானன.

முதலில்தான் தனியாக நடபபதாகத்தான் சார்ஜென்ட் நினைத்திருந்தான். பிறகுதான் சரக், சரக எனும் தன காலடி ஓசையையும் தவிர, இரட்டிப்பாகிற மற்றொரு காலடி ஓசையையும் அவன கேட்டான். சுற்றும் முற்றும் பார்த்தான். அவனுக்குப பின்னால் இயேசுநாதா நடந்து வந்து கொண்டிருந்தார்.

தேவாலயச் சிலுவையில் இருந்த இயேசுநாதர் சொரசொரப்பான அதே கல் போன்ற உருவத்துடன், வந்து கொண்டிருநதார். ''அடேடே நாம் நிச்சியமாகப் பின் தொடரப்படுவோம்'' என்று சொல்லிக் கொண்டான். ''இதோ, இங்கே நான் முதன் முதலாக உங்களை சிலுவையலிருந்து விடுவித்து இருக்கிறேன''.

''ஆம்''. இயேசுநாதர் பனியில் தன் காலடி உரசி ஒலியெழுபபிக் கொண்டே சொன்னாா. ''என்னைச் சிலுவையிலிருந்து விடுவிப்பதற்காக நீ தேவாலயத்தையே நொறுக்க வேண்டி இருக்கிறது.'' இதற்காக நீங்கள் மகிழ்ச்சி அடைகிறீர்களா? சார்ஜென்ட் கேட்டான். ''நிச்சயமாக நான் மகிழ்கிறேன்.'' இயேசுநாதர் சொன்னார். இருவரும் சேர்ந்து சிரித்தனர். தேவாலயத்தை இடித்துவிட்ட நான் மிகவும் கெட்டவன் இல்லையா?'' நீ மிக நல்ல வேலை செய்து இருக்கிறாய், இயேசு சொன்னார்.

''அவர்கள் என்னை சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக சிலுவையிலேயே அறைந்து வைத்திருக்கிறார்கள். ''அப்படியா!'' உங்கள் விடுதலை பற்றி நீங்கள் மகிழ்வீர்கள் என்று. ''நிச்சயமாக நான் மகிழ்கிறேன்.'' இயேசு சொன்னார். அவர்கள் இருவரும் பனியிலேயே நடந்தனர். 'சார்ஜென்ட் தன்னுடன் வந்த கல் மனிதனைப் பார்த்துச் சொன்னான். ''இரண்டாயிரம் ஆண்டுகளாகவா நீங்கள் அங்கேயே இருக்கிறீர்கள்?'' ''ஆமாம். சந்தேகமேயில்லை.''

''என்னிடம் கொஞ்சம் பணமிருந்தால் நான் உங்களுக்கு ஊரைச்சுற்றிக் காண்பித்திருப்பேன்.'' ''நான் முன்னேற அதுபோல சுற்றியிருக்கிறேன்.'' ''ஆமாம், அது மிக நீண்ட நாள்களுக்கு முன்னர்.'' அவர்கள் ஒரு ரயில் பாதையை அடைகிற வரையிலும் நடந்தார்கள். சார்ஜென்ட் வியர்வையுடன் மிகவும் களைத்துப் போய் இருந்தான். தண்டவாளத்தின் அருகே அவன் கேட்டான். ''நீங்கள் எங்கே போகிறீர்கள்? அது......த்தான் வெளிச்சம். ஆனால் நான் உன்னிடம் இங்கே விடைபெற்றுக் கொள்கிறேன்.'' என்று சொன்னார் இயேசு.

இரவின் பனி, பாதிமறைந்த நிலையில் தொலை தூரத்தில் சிவப்பும், பச்சையுமாக ரயில் விளக்குகளை அவர்கள் பார்த்தனர். நான் அங்கே செனறு தூங்க முடியும்.'' சார்ஜெனட் சொனனான ''உன்னால் முடியுமா? ''நிச்சியமாக ஏனென்றால், இந்த இடத்திற்குக் கதவுகள் கடையாது.

நகரத்துக்கு வெளியே, ரயில் பாதைககு அபபால மொட்டை மரங்களும், புதாகளும் பனி இருட்டில் தெரிந்தன. மரப்

படிப்பகம்

www.padippakam.com



புதர்களுக்கு இடையே அடிக்
கடி இடம்மாற வசதியாக
பழைய பெட்டிகள், தகரம்,
மரத்துண்டு, துணிகள் ஆகிய
வற்றால் ஆன வீடுகள் இருந்
தன. இருட்டில் அவற்றைக்
காண முடியாது நீங்கள் எப்
போதாவது வீட்டற்றவர்களு
டன் வாழ்ந்திருப்பீர்களானால்
அவை அங்கிருப்பதை அறிந்து
இருப்பீர்கள், "நான் இப்படிப்
பிரிந்து போகிறேன். மிகவும்
களைப்பாக இருக்கிறது"
அவன் சொன்னான், "நான்
கான்சாஸ் நகரத்துக்குச் செல்
கிறேன்" என்றார் இயேசு.
"அவ்வளவு தொலைவா?
அவன் வியந்தான். அவன்
நாடோடிகள் இருக்குமிடத்திற்
குச் சென்று படுக்க ஓர் இடம்
தேடிக் கொண்டான், அதன்
பிறகு அவன் இயேசுவை பார்க்
வே இல்லை.

காலை 6 மணிக்கு ஒரு
சரக்கு வண்டி வந்தது. அந்த
ரயிலை பிடிப்பதற்காக சார்
ஜெண்ட் ஓடினான். அது இருட்
டாகவும், குளிராகவும் இருந்த
டாகவும், குளிராகவும் இருந்த
காலை நேரம். "இயேசுநாதர்
இப்போது எங்கே இருப்பார்?"
எண்ணமிட்டான் அவன்.
"அவர் நடந்துபோய்க்கொண்
டிருப்பார் இங்கு அவர் தூங்க
வில்லை" சார்ஜெண்ட் ஓடிக்
கொண்டிருக்கும் நிலக்கரி ஏற்
றிய ரயில் வண்டியைப் பற்றி
தாவினான்.

எதிர்பாராதவிதமாக வண்டி
முழுவதும் காவலர்கள். அவன்
அருகில் இருந்த காவலன்
அவன் கருப்புக்கையை மடக்கி
அவனை மேலே தூக்கினான்.
சார்ஜெண்ட் நெகிழவில்லை.
குரலை உச்சத்தில் கத்தி
னான். "மடையர்களே
என்னை வண்டியில் இருக்க
விடுங்களேன். "வாயைமூடு"
ஒருவன் நாய்போல் குரைத்
தான். 'உதவாக்கரை நாயே"
என்று சொல்லி வயிற்றில்குத்தி
விரல் முட்டியை முறுக்கினான்.
"நீ காட்டில் இல்லை. இது
ரயிலும் அல்ல, நீ சிறையில்
இருக்கிறாய்" அய்யோ.
அவன் கருப்பு விரல்களுக்
கிடையில் சிறைக் கம்பிகள்.

அவன் திடீரென்று உணர்ந்
தான். அவன் உண்மையி
லேயே சிறையில் இருக்கிறான்.
அவன் ரயிலிலும் இருந்திருக்க
வில்லை, முன்னாள் இரவின்
இரத்தம் முகத்தில் காய்ந்து
இருந்தது அதிகமாக சிறைக்
கம்பிகளைப் பிடித்து பிடுந்து
உலுக்குவதற்காக அவன்
முட்டியில் தட்டினான் ஒரு
காவலாளி

அந்த தேவாலயக் கதவை
உடைத்ததற்காக என்னை
நேற்றிரவே இங்குகொணர்ந்து
வந்து இருக்கவேண்டும் என்று
உணர்ந்தான். குளிரில் அந்த
கல் சுவருக்கு எதிரே இருந்த
மரப்பலகையில் சென்று உட்
கார்ந்தான், அவன் துணிகள்
குளிருட்டும் அளவுக்கு ஈரமாக
இருந்தன. செருப்புகள் பனி
யில் ஊறிப்போய் இருந்தன.
அப்போதுதான் விடியத்
தொடங்கி இருந்தது.

அவன் தன் காயம் பட்ட
விரல்களை தேற்றிக் கொண்டு
சிறையில் பூட்டப்பட்டுக் கடந்
தான். காயப்பட்டது அவன்
விரல்கள் தானே அன்றி
அவனை அடித்த தடிகள்
அல்ல "இரு," இரு, நான்
இந்தக் கதவையும் உடைத்
தெறிகிறேன். "வாயை மூடு.
இல்லாவிட்டால் உதை
கிடைக்கும்" காவலாளி கத்தி
னான்.

பிறகு அவன் தனக்குத்
தானே பேசிக் கொண்டிருந்
திருக்க வேண்டும். அவன்
சொன்னான், எனக்கு வியப்
பாக இருக்கிறது. இப்போது
இயேசுநாதர் எங்கே போயிருப்
பார்?

— லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ்

பாவத்தை
தண்ணீரையே செய்துவிட்டு
மோக்ஷமாக தாதுக
கொள்ளப்
போதுமான அளவு
புண்ணிய ஸ்தலங்கள்
இருப்பதால்
எங்கள்
பாரத பித்திரர்கள்
தூசு படாமல்
தூய்மையாகவே
இருக்கிறார்கள்.
சோகையால் மட்டுமே நீ
யாத்திரை செய்வாய
என்பதைத்
தெரிந்து கொண்டதால்
உன்னை நேசித்தவர்கள்
தேசசேவைத்தே
சோரியாக மாற்றிவிட்டார்கள்.

—மு. மேத்தா

எம்பிளாயிமெண்ட்
எக்சேஞ்சுக்குப்
பதிவு செய்யப்புறப்பட்ட
மகனிடம் கேட்டுக
கொண்டார் தந்தை,
என்னுடையதையும்
"ரெனிவல்"
செய்து கொண்டு
வந்து விடப்பா.

—அறிவுமதி

ஆடியிலே விதைத்தாலும்
ஐப்பசியில் நட்டாலும்
அரை வயிற்றுக் கஞ்சிக்கு
ஆளாய்ப் பறந்தபடி
தண்ணீர்க்குடம் சுமக்கும்
எங்கள்
தாய்மாமன் கிராமம்.

—நா. காமராசன்

5-ம் பக்கதொடர்ச்சி

பட்டு மனித ஆற்றல்கள் கண்
டெடுக்கப்பட்டு அவை தங்கள்
நாட்டிற்கும் பிறநாட்டிற்கும்
வலிமை வாய்ந்த சக்திகளாக
சோசலிச நாடு பிரகடனம்
செய்கிறது. தனி மனிதனும்
அரசும், சமூகமும் பிரிக்க
முடியாத ஒவ்வொரு அங்கங்
களாக தங்கள் நாட்டில் ஒட்டு
மொத்த மனித குலத்தின
முழுமையாக அவர்கள் செய
லாற்றுவதால் தான் தன் நாட்
டிலும் வெளியிலும் எந்தத்
துறையிலும் அவர்களால்
பிரகாசிக்க முடிகிறது.

கடந்த கால ஒலிம்பிக்
வரலாற்றில் குறிப்பிடத் தகுந்த
வகையில் தன் ஆற்றலை வெளி
படுத்திய வடகொரியாவும்,
க்யூபாவும் நடந்த இந்த ஒலிம்
பிக்கில் கலந்து கொண்டிருந்
தால் வளர்ச்சி பெற்ற நாடுகள்
மூன்றாம் இடத்தைப் பெறக் கூட
நிச்சயம் இழந்திருப்பார்கள்.
வளர்ச்சி பெற்ற நாடுகளின்
வெற்றிக்கு ஒரு முக்கியக்
காரணம் கருப்பின மக்கள்
என்பதும் மறந்திட மறைத்திட
முடியாது. பொதுவாக
வளர்ந்த நாடுகளும் வளர்முக
நாடுகளும் இராணுவத்திற்
கான ஆகும் செலவை மட்டுப்
படுத்தி தனிமனித ஆற்றலை
வளர்க்கும் முயற்சிக்கு நிச்சயம்
செலவிடலாம். ஒரு முன்னேற்
றத்திற்கு செலவிடுவதோ, ஏழ்
மையோ காரணமல்ல திட்ட
மிடப்பட்ட செயல்பாடும்,
ஒருங்கிணைக்கப்பட்ட கூட்டு
முயற்சியும், அரசியல் சமூக,
கலாச்சார முறைபோக்கும்தான்
அடிப்படை என்பது சோசலிச
நாடுகள் ஒலிம்பிக் போட்டியின்
மூலம் மற்ற நாடுகளுக்கு நன்கு
உணர்த்தி விட்டது.

படிப்பகம்

www.padippakam.com



# சின்ன சின்ன செய்திகள்

□ உலகப் புகழ் பெற்ற ஓவியரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.பி. உசேன், பம்பாயில் பணக்காரர்களின் 'கிளப்' ஒன்றில் விருந்துக்குச் சென்றார். காலில் செருப் பணியாமல் சென்றதற்காக அவமானப்படுத்தப்பட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார். ஆனால் திரு. உசேன் குடியரசுத் தலைவர் மாளிகைக்கும், மாநிலங்களவைக்கும் கூட காலணியில்லாமல் செல்வதுதான் வழக்கமாம்.

□ கர்நாடக மாநிலம் ரெய்ச்சூர் அருகில் ஒரு சிறிய கிராமத்தில் பெண்களை நிர்வாணமாக்கி வேடிக்கை பார்த்திருக்கிறது இந்த சமுதாயம். நிலத்தகராறு காரணமாக பெண்களை நிர்வாணமாக்கி ஊர்வலம் விட்டு தன் வக்கிரத்திற்குத் தீனி போட்டுக் கொண்டார்கள் பழமைவாதிகள். இதில் வெட்கமும் இழிவும் என்னவென்றால் ஒரு பெண்ணின் தந்தையே இச்செயலுக்கு உடந்தையாக இருந்ததுதான்.

□ இராஜஸ்தான் மாநில இ. காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரான பிரிஜேந்திரசிங்கின், குடும்பத்தார் யாருக்காவது பெண் குழந்தை பிறந்தால் கொன்றுவிடுவது வழக்கமாம். இதுவரை அப்படிக் கொல்லப்பட்ட பெண் குழந்தைகளின் எண்ணிக்கை 53. 1987 செப்டம்பரில் போலிஸ் விசாரணையில் நிருபிக்கப்பட்டும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. ஆனால் அவரைக் கைது செய்யவும், பதவியிலிருந்து நீக்கவும் காங்கிரசாரே வலியுறுத்தியபின் இப்போது ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, தீண்டாமை, 'சதி' என்னும் உடன் கட்டை ஏறுதல், சிசுவதை ஆகிய கொடூரங்களுக்கு பொறுப்பேற்று இராஜஸ்தான் அமைச்சரவை பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுப் பெற்று வருகிறது.

□ மாஸ்கோவிலிருந்து டோக்கியோவிற்கு இரண்டு மணி நேரத்தில் செல்லும் "ஹைபர் சோனிக்" புதிய விமானம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது ஒலியை விடவும் ஆறு மடங்கு அதிக வேகத்தில் பயணம் செய்யக் கூடியது. 'சூப்பர் சோனிக்' விமானங்கள் ஒலித் தடையைப் பிளந்து கொண்டு செல்லும் போது பெரும் ஒலி ஏற்படுவதுண்டு. இந்தப் புதிய ரக விமானத்தில் அக்குறைபாடு இல்லை. கிரியோ ஜெனிக் எரிபொருளால் இயங்கும் இவ் வானூர்தி மேற்பரப்பு சூடேறாதவாறு தானே குளிர்வித்துக் கொள்ளும் ஆற்றலுடையது.

□ முற்றிலும் பெண்களையே கொண்ட விமானக் குழுவின் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, பம்பாயைச் சேர்ந்த கேப்டன் சவுதாமணி தேஷ்முக் தற்போது 'ஜெட்' விமானத்தைச் செலுத்திய முதலாவது பெண் விமானி என்ற பெருமையையும் பெற்றுள்ளார். இந்தியன் ஏர் லைன்ஸ் நிறுவனத்தில் 7 பெண் விமானிகள் இருக்கின்றனர்.

□ பூமியைச் சுற்றிலும் 15 கி.மீ. முதல் 18 கி.மீ. சூழ்ந்துள்ள, காற்று மண்டலத்தின் 'ஓசோன்' அடுக்கு தேய்ந்து மெலிந்து வருகிறது. அண்டார்டிகா பகுதியில் 150 லட்சம் சதுர கிலோ மீட்டர் அளவுக்குப் பெரிய துணையொன்றும் ஏற்பட்டுவிட்டது. இதனால் சூரியனிலிருந்து வெளிப்படும் புற ஊதாக்கதிர் வீச்சு பூமியை நேரடியாகத் தாக்குவதால் பெருஞ் சேதங்கள் விளையுமென அறிவியலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

□ சூரியனும், பூமிக்கடியில் உள்ள வெப்பமும், நிலத்தின் அதிர்வியக்கங்களும், பூமியின் மேற்பகுதியில் உள்ள வேறுபட்ட அடுக்குகளை நிலையாக இருக்க விடுவதில்லை. இவற்றின் தாக்கத்தால் பாறையடுக்குகள் நசுக்கப்பட்டு, உருவம் மாறி, பிளந்து துண்டுகளாகி, பாய்ந்து நகர்கின்றன. இதனால் ஏற்படுவதே நிலநடுக்கம். எந்த இடத்தில் பூமியதிர்ச்சி ஏற்படக்கூடும் என்பதை 15 ஆண்டுகளுக்கு முன்பே நிபுணர்களால் கணிக்க முடிகிறது. ஆனாலும் எப்போது ஏற்படும் என்பதைக் குறிப்பா முன்னறிந்து கூறும் முயற்சிகள் இன்னும் வெற்றி பெறவில்லை.

இந்தியாவின் அந்நியக் கடன் 63 ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டிவிட்டதாம். நைஜீரியா அர்ஜென்டைனா, பிரேசில் மெக்சிகோ உள்ளிட்ட 15 நாடுகள் உலகிலேயே அதிகமாகக் கடன்பட்டுள்ளன. இந்த நாடுகளின் கடன்சுமையை 30% குறைக்க வேண்டும் என, ஐ.நா. வர்த்தக வளர்ச்சி மாநாட்டில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

*

S. பாஸ்கரன்

படிப்பகம்

www.padippakam.com







# இந்திய சுதந்திரப் போராட்டப் போராளி

# M. V. சுந்தரம்

## அவர்களுடன் சந்திப்பு

சென்ற இதழ் தொடர்ச்சி...

13. □ இந்திய கல்வி முறை பற்றி......

□ சமூக மாற்றத்திற்கான
விஞ்ஞானம் கல்வி இன்னும்
நடைமுறைப்படுத்தப்பட
வில்லை. மக்கள் இயக்கங்களின்
ரலாற்றை தனிமனித வரலா
றாக காட்டும் தன்மை இந்தியக்
கல்வி முறையில் உள்ளது.
உழைக்கும் மக்களின் பாத்திரம்
பின்னுக்கு தள்ளப்பட்டு விஷயங்
கள் சாகச செயல்களாகவே
காட்டப்படுகின்றன. கல்வியின்
மூலம் சமூக மாறுதல் எழும்பாத
வாறு பாடத்திட்டங்கள் திட்ட
மிட்டு தயார் செய்யப்படு
கின்றன. சரித்திரக் காலம்
தொட்டு இன்று வரை கல்வி என்
பது ஆட்சியாளர்களின் நலனை
கருதியே கையாளப்பட்டு வரும்
ஆயுதமாக உள்ளது.

14. □ சாதிச் சங்கங்கள் குறித்து என்ன சொல்கிறீர்கள் ?

□ சமுதாயத்தில் படித்து
கொஞ்சம் விஷயம் தெரிந்தவர்
கள் தங்களின் சமூக அங்கீகாரத்
திற்காகவும், வளர்ச்சிக்காகவும்
குறுகிய கண்ணோட்டத்தில்
அமைக்கும் ஏற்பாடு. இது பிரச்
சனைகளை தீர்க்க புதுரக முறை
யில் கட்சியை உருவாக்க முடியாத
புதுரகப் போவழிகளின் அபிலா
ஷையே அது. இவர்கள் சமூகத்
தைப் பேரம் பேசும் தரகர்கள்.

15. □ தொழிற் சங்கங்களின் நிலை எந்த அளவில் உள்ளது ..

□ தொழிலாளர்களை ஒட்டு
மொத்தமாகத் திரட்டி சமுதாய
மாற்றத்திற்கான தொழிற் சங்க
அமைப்புகள் இன்னும் வளர்த்
தெடுக்கப்படவில்லை. தொழிற்
சங்க தலைவர்கள் கூலி உயர்வுக்
கான வழக்குரைஞர்களாகவே
உள்ளனர். விவசாய தொழிற்
சங்கத்தின் நிலையும் இதுவே.

16. □ ஈழவிடுதலை குறித்து தங்கள் கண்ணோட்டம் ..

□ தனி நாடு மீது எனக்கு
உடன்பாடில்லை. இந்திய —
இலங்கை ஒப்பந்தத்தை குறை
சொல்லக் கூடாது என்பதே
என் விருப்பம், ஈழத் தமிழர்கள்
கேட்கும் பிரிவினை கோட்டில்
அரசியல் வடிவம் இன்னும்
வளர்த்தெடுக்கப்படவில்லை.
தமிழ் — சிங்கள இரு மொழி
களும் தங்களின் தேவைக்கான
உரிமைகளை சமூக, பொருளா
தார அரசியியல் பரிவர்த்தனை
மூலம் பெற வேண்டும் என்பதே
என் வேண்டுகோள். மேலும்
அவர்களின் தனித் தமிழ் நாடு
போராட்டப் பின்னணியில்
ஏகாதிபத்திய சார்பு உள்ளது.
அது இந்திய அமைதிக்கு ஊறான
செயலாகும்.

17. □ மக்கள் தொகையில் சரிபகுதி பெண்கள் ; ஆனால் அவர்கள் முன்னேற்றத்தில் அரசு
களும், கட்சிகளும் எந்தவித முன்
முயற்சியும் எடுத்துக் கொள்வது
இல்லையே ?

□ இந்தியாவில் பெண்களின்
நிலை மிகக் கொடுமையானது.
மானுடவர்க்கத்தில் முதலில்
அடிமைப்பட்டு போனவர்கள்
பெண்கள் தான். இந்தியாவில்
பெண்ணடிமைத்தனம் மூலம்
சுரண்டல் ஆதிக்கவாதிகளாலும்,
ஆண்களாலும் நடைபெற்றுக்
கொண்டுதானிக்கிறது. ஆண்கள்
மத்தியில் மனித சமூக உணர்வு
குன்றி போயிருக்கிறது என்
பதற்கு பெண்ணடிமைத்தனமே
சரியான சாட்சியாகும் ஆணும் —
பெண்ணும் சேர்ந்துதான்
சமூகத்திலுள்ள அனைத்து
ஏற்றத் தாழ்வுகளையும் ஒழிக்க
முடியும். பெண்களின் முன்
னேற்றம் சமுதாயத்தின் முன்
னேற்றம் என்பதை மறக்கவோ,
மறைக்கவோ முடியாது. தனி
வுடமைத் தத்துவம் இருக்கும்
வரை பெண்ணடிமைத்தனம்
இருந்தே தீரும்.

18. □ கம்யூனிஸ்ட்கள் பகுத்தறிவாதிகளாகயிருப்பது இல்லை; பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வதுமில்லை ஏன்?

□ அது தவறுதான். என்னைப்
பொறுத்த வரையில் நான் ஒரு
நாத்திகன் தான். அதுவும்
மார்க்சிய நாத்திகன். கட்சி
அடிப்படை விஷயங்களில் கறா

படிப்பகம்

www.padippakam.com



ராக இருக்க வேண்டும். தங்கள் பிரச்சனைகளுக்காக வருகிறவர்களை சமூக வயப்படுத்தி விஞ்ஞான அனுகுமுறையை பயிற்சிக்க முடியாமல் போனதால் தான் இந்த நிலை. கடவுள் — மத விஷயங்களில் கை வைத்தால் மக்கள் கட்சிக்கு பணியாற்ற வரமாட்டார்கள் என்கிற யுக்தியும் தேர்தலில் நமக்கு ஒட்டு போடமாட்டார்கள் என்கிற பயமும் மாறவேண்டும்.

19. □ கம்யூனிஸ்ட் கட்சி தோன்றி அரை நூற்றாண்டுக் காலத்திற்கு மேலாகியும் அது பலவாறாகப் பிரிந்தும் இன்னும் சின்ன மாறுதல் கூட சமூகத்தில் — அரசியலில் — பொருளாதாரத்தில் ஏற்படுத்த முடியவில்லையே...

□ மார்க்சியம் என்பது ஒரு ஒளி தான். ஒளி நம்மை இயக்காது. அந்த ஒளியைப் பயன் படுத்திக் கொண்டு நாம் தான் இயங்க வேண்டும். மார்க்சியத்தை சொந்த நாட்டில் நாம் தான் வளர்க்க வேண்டும். சோஷலிச நாடுகளில் வளர்ந்த மார்க்சியமே நம் நாட்டின் உயர்வுக்கு காரணமாகியிருக்க முடியாது. இந்திய மக்களின் சிந்தனையை இந்திய மக்களின் வாழ்க்கை முறையின் யதார்த்தத்தை உள்வாங்கிக் கொண்டுதான் மார்க்சியத்தைப் பொருத்திப் பார்க்க வேண்டும். இந்திய மண்ணை ஊன்றி பார்க்காமல், மார்க்சிய விதையைப் போடுவதால் விளைச்சலை பெற முடியாது. மார்க்சியம் என்பது உருவாக்குவது ஆகும். அது பின்பற்றப்படுவதோ; பேசப் படுவதோ அல்ல. ஐரோப்பிய சமுதாய அமைப்பு வேறு; இந்திய சமுதாய அமைப்பு வேறு.

இந்திய மக்களின் மன ஓட்டத்தைப் புரிந்துக் கொள்ளும் திறனில், மனோதத்துவ அணுகுமுறையில் இன்னும் கம்யூனிஸ்டுகள் கால் வைக்கவே முடியவில்லை. அந்த திறன் இன்னும் வளர்த்தெடுக்கப்படவில்லை. மக்கள் உணர்ச்சி அரசியலுக்கு ஆட்பட்டு விடுகிறார்கள் என்று சொல்லி தப்பித்துக் கொள்ளும் போக்கே உள்ளது.

மக்களுக்கு தேவை வாழ்கை. வாழ்க்கைக்கு நம்பிக்கையூட்டும் எவரிடமும் தங்களை அவர்கள் இணைத்துக் கொள்ளத்தான் செய்வார்கள். கம்யூனிஸ்ட் கட்சியினர் மக்களின் நம்பிக்கையின் நாயகர்களாக இன்னும் வளரவில்லை. செயல்படும் தீரர்களாக இருக்கும் பட்சத்தில் மக்களின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் தலைமை தாங்கி, போராடி மக்களிடம் தங்கியிருக்கும் பட்சத்தில் மக்கள் நம்பக்கம் நிச்சயம் வந்தே சேருவார்கள்.

இந்திய சிந்தனையிலிருந்தே தான் நாம் விஷயத்தைப் பார்க்க பழக வேண்டும். இந்திய அமைப்பின் கால்கோள் ஆக மூடப்பழக்க வழக்கங்கள், சாதியம், பெண்ணடிமைத்தனம், தனிவுடைமை ஆதிக்கம் ஆகியன நிலவுகின்றன. இவை முழுமையாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். புரட்சி என்பது கம்யூனிஸ்ட் கட்சியில் மட்டும் மட்டும் தங்கியிருப்பதல்ல. அது மக்கள் மனதில் தங்கியிருக்கிறது. அதற்கு தலைமுறை மாற்றம் தேவை. இதை உணராத வகையில் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. தேசிய இனப் பிரச்சனை, சாதிப்பிரச்சனை, இந்திய கலாச்சாரம் போன்ற விஷயங்களில் பின் தங்கியிருக்கும் நிலை உள்ளது. நடைமுறைச் சிக்கல்கள் தீரதீர, சரியான நடைமுறை வளரவளர, மக்களின் அனைத்துப் பிரச்சனைகளையும் ஒன்று திரட்டி போராட்டத்திற்கு தலைமை தாங்க ஒட்டு மொத்த மாற்றத்திற்கான வழியாக மக்களை திசை திருப்பிவிட கம்யூனிஸ்ட் கட்சி நிச்சயம் வளரும்.

20 □ சராசரி மனிதருக்கும் கம்யூனிஸ்டுகளின் வாழ்க்கை முறைக்கும் அப்படியொன்றும் வித்தியாசம் இல்லையே?

□ பல்வேறு வர்க்க நிலையிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சிக்கு வருகிறார்கள். சமூகக் கொடுமையையும்— ஆதிக்கத்தையும் கண்டிப்பதால் மட்டும் கம்யூனிஸ்ட் ஆக முடியாது. தன்னை முதலில் இச்சமுதாய பிற்போக்கு —சுயநல உணர்விலிருந்து விடுவித்துக் கொள்ள வேண்டும் அது ஒரு கம்யூனிஸ்டின் முதல் கடமை. ஒருவர் வளர்ந்துதான் இன்னொருவரை வளர்த்தெடுக்க முடியும். நம் நாட்டில் குடும்ப உறவின் ஆளுமை சமுதாய உறவைப் பின்னுக்கு தள்ளுவதாகவே உள்ளது.

அடிப்படை விஷயங்களில் தாராளவாதம், மந்தப்போக்கு, பிரச்சனையிலிருந்து விஷயத்தைப் பார்க்காமல் தன் விருப்பத்திலிருந்து விஷயத்தை நோக்குவது, பேர், புகழ், பதவிக்கு ஆட்படும் தன்மை வர்க்க சமரசம் என்பது வர்க்கப் போராட்டத்தைப் பின்னுக்கு தள்ளிவிடும். குறிக்கோளின் அடிப்படையில் முறையாக வளர்த்துக் கொள்ளாமல், மாற்றத்திற்கான போராட்டத்தில் ஐக்கியப்பட முடியாது. குடும்பம் வேறு; கட்சி வேறு; சமூகம் வேறு என்று செயல்படுவதின் காரணமாகவும் இக்குறைபாடுகள் வெளிப்பட்டு வருகின்றன. விமர்சனம், சுய விமர்சனம், வளர்ச்சிப் போக்குக்கான புதிய கண்ணோட்டம் இன்னும் சரிவர புகுத்தப்படவில்லை. கட்சிக்கும் தொண்டர்களுக்கும் அடிப்படை விஷயங்களில் இறுக்கம் இல்லை.

செயல்பாட்டிற்குரிய சிந்தனைத்தளம் மாற்றியமைக்கப் பட வேண்டும். மாற்றியமைக்கப்பட்ட சிந்தனைப்போக்கே சிறப்பான மாறுதலுக்கு வழி செய்யும். இருக்கிற யதார்த்தம் இன்னும் சரியாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதற்கான முழுமையான பக்குவத்தை அடைய முடியவில்லை. செயல் பாடுமிக்க சமூக சிந்தனை குறைவாகவே உள்ளது.

21. □ சுயநலம், மனிதாபிமானமற்ற செயல்களில் நாடு சென்று கொண்டிருக்கிறது. மக்கள் எந்த கட்சியின் மீதும் நம்பிக்கை யிழந்தவர்களாக உள்ளனர். அதே சமயம் மாற்று வழி இல்லாமலும் உள்ளனர். தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

□ சமுதாய மாற்றத்திற்கான காற்று அடிக்கவே செய்கிறது. இது தேக்கமான காலமில்லை. புரட்சிகர காலமே ஆகும். பண வீக்கம், அந்நியக்கடன், வறுமை, வேலையில்லா திண்டாட்டம் இவைகளை நாடு பெரும் அளவில் கொண்டுள்ளது. விவசாயிகள் ஆனாலும், தொழிலாளர்கள் ஆனாலும், அரசு

படிப்பகம்

www.padippakam.com



அலுவலர் ஆனாலும், பெண்களானாலும்வாழ்க்கைப்பிரச்னையின் எல்லைக்கே சென்று விட்டார்கள். தேசியப் புரட்சிக்கான உந்து சக்திகளாய் மக்களின் பல்வேறு அணியினரும் திரண்டு எழுந்து விட்டார்கள். அவர்களின் போராட்டத்திற்கு வடிவம் கொடுத்து—தலைமை தாங்குவது கம்யூனிஸ்ட் கட்சியின் கடமை. கம்யூனிஸ்ட் கட்சி வர்க்கத்தின் கட்சியாக மாறுவதற்கு பல்வேறு சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கிறது. செயல்பாட்டில் கோளாறு இல்லாமல், செயல்பாட்டில் மக்கள் திரளைக் கொண்டிருந்தால் நிச்சயம் மாற்றம் வந்தே தீரும். சமூகத்தின் உழைக்கும் அனைத்துப் பிரிவினரையும் திரட்டி போராட்டத்தளம் அமைத்து யுத்த இளைஞர்களை அதில் பங்கேற்க செய்ய வேண்டும். அரசின் அடக்குமுறை சட்டங்கள் கடுமையாக உள்ளன. இது மக்கள் விழிப்படைந்து விட்டார்கள் என்பதைதான் நமக்கு காட்டுகிறது.

22 □ சர்வதேச அரங்கில் சோஷலிச முகாம் பற்றி.......

□ இன்று உலக மானுடத்தின் தலைமைச் சக்தியாக சோஷலிச முகாமே உள்ளது. வல்லரசுகள் தங்களுக்குள் ஏற்பட்ட தொழில் போட்டியில் மேலும் முன்னுக்கு போக முடியாமல், கீழே விழுந்து விடும் நிலையே உள்ளது. அமெரிக்கா, இத்தாலி, ஜப்பான், போன்ற நாடுகளுக்குள் வியாபாரத்திற்கான கடுமையான சந்தைப் போட்டி நிலவுகிறது. ஒன்றை ஒன்று மிஞ்சும் தொழில் நுட்ப போட்டி இறுதிக் கட்டத்தை அடையும்போது அவைகள் தேக்கத்தை அடைந்து விடும்.

இன்று உலக மக்களின் அமைதிக்கும், முன்னேற்றத்திற்கும், பாதுகாப்பிற்கும் அரணாக உள்ள சோவியத் யூனியன் ஏகாதிபத்திய நாடுகளை விட அனைத்து துறைகளிலும் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக விண்வெளி ஆராய்ச்சியில் அமெரிக்காவைவிட, மிக உயர்ந்த நிலைக்கு போய் விட்டது.

இன்று நிலவெளியிலும் சரி, விண்வெளியிலும் சரி ஏகாதிபத்திய வாலாட்டம் குறைந்து சோஷலிச முகாமின் தாக்கமும்—வேகமும் எழுச்சியும் நடைபோடும் காலம்.

அண்மைக் காலங்களில் சோவியத் யூனியனுடன் அமெரிக்கா செய்து கொண்ட ஒப்பந்தங்கள் சோஷலிச முகாமின் ஆளுமைக்கும், அளப்பறிய மக்கள் முன்னேற்றத்திற்கும் எதிர் நிற்க முடியாத நிலையில் தோன்றியதே ஆகும்.

ஏ. பி. வி.
இரா தேசிகன்,
எஸ். பாஸ்கரன்,
சி. மோகன்

## தமிழர் வாழ்வு தழைத்தோங்கட்டும்

—தா. பாண்டியன்

ஈழத் தமிழ் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தமிழ் மாநிலம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் மாநில ஆட்சிமொழி என்பது ஏற்கப்பட்டுள்ளது. பல்லாண்டுகளாக குடியுரிமை கிட்டாது வாழ்ந்து வந்த இந்திய வம்சா வழியினருக்கு குடியுரிமை வழங்க இலங்கை அரசு முன் வந்துள்ளது. ஜெயவர்த்தனாவும்,சிங்கள அரசும் பல பிடிவாதமான நிலைகளிலிருந்து மாறி இறங்கி வந்துள்ளனர். வழக்குகள் பலவற்றை ரத்துச் செய்துள்ளனர். பொது மன்னிப்பு வழங்கியுள்ளனர்.

இலங்கையில் அமைந்துள்ள தமிழ் மாநிலத்திற்கான மந்திரி சபை அமைக்கத் தேர்தல் நடைபெற உள்ளது. தேர்தலில் பங்கேற்க மாட்டோம் என பிரபாகரனின் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். "நாங்கள் பங்கெடுக்க மாட்டோம்" எனக் கூறிக்கொள்ள எந்த அமைப்பிற்கும் உரிமையுண்டு. ஆனால், யாரையும் தேர்தலில் பங்கு எடுக்க விட விட்டோம் என்ற மிரட்டலையும் சேர்த்தே வெளியிட்டனர். பிரபாகரனின் அறைகூவலுக்கு அனைத்துத்தமிழ் மக்களும் ஆதரவு தெரிவிப்பதாக அர்த்தம் கொள்ளக்கூடாது.

பத்மநாபா தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தேர்தல் களத்தில் குறித்துள்ளது. எதற்கும் அஞ்சாத துணிச்சல் இதற்கு தேவை. சாவைப் பொருட்படுத்தாமல் களத்தில் குதித்துள்ள பத்மநாபனையும், அவரது சகாக்களையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும். இந்திய அரசும் இந்தியப் படையும் இவர்களுக்கு முழு பாதுகாப்பும், ஒத்துழைப்பும் வழங்க வேண்டும். இந்திய மக்களும், தமிழ் மக்களும், ஈழத் தமிழ் மக்களின் உரிமைக்காக, உயிரைப் பணயம் வைத்து, களத்தில் நிற்கும் வீரம் செறிந்த பத்மநாபனையும் அவரது சகாக்களையும் போற்றிப் பாராட்ட வேண்டும். தமிழ் நாட்டு அரசியல் கட்சிகள், ஈழத்து தமிழர்களிடையே ஒற்றுமை அமைதி நிலவ யோசனை கூற வேண்டும். ஒத்துழைக்க வேண்டும். ஈழத்தில் தமிழாட்சி ஓங்கட்டும். ஈழத்து தமிழரிடையே ஒற்றுமை வளரட்டும். அமைதி நிலவட்டும். இலங்கை—இந்திய நட்புறவு வளர—இது முதல்படியாக அமையட்டும் வாழ்க பத்ம நாபா,

ஜீவா முழக்கம்—16-10-8

படிப்பகம்

www.padippakam.com



(24-ம் பக்க தொடர்ச்சி)

மக்களின் உரிமைகளையெல்லாம் ஆயுதத்தினால் குத்தகை எடுத்துக் கொண்டு சர்வாதிகாரப் பாதைக்கு தமிழ் தேசிய இனப் பிரச்சனையை அழைத்துச் செல்ல முயலுகிறார்கள். மக்கள் தமது உரிமைகளை உணர்ந்து, அரசியலில் பார்வையாளராக மட்டுமல்லாமல் பங்காளிகளாக வேண்டிய அவசியத்தை மறுப்பவர் கையில்தான் தமிழர்களின் பிரச்சனை தவித்துக் கொண்டிருக்கிறது. சிங்கள இன வெறியால் உக்கிரமடைந்த தமிழ் விடுதலைப் போராட்டத்தால் தமிழ் மக்கள் இன்று பேசவோ, எழுதவோ முடியாத நிலையில் தமது விருப்பு வெறுப்புகளைப் பற்றி பகிரங்கமாக மூச்சு விடவும் அஞ்சி நிற்கும் நிலைக்குத்தான் இன்று தள்ளப் பட்டுள்ளார்கள்.

சிங்கள இனவெறி குழுக்களானாலும் சரி, இலங்கை அரசப் படையாக இருந்தாலும் சரி, தமிழ் இயக்கங்களாக இருந்தாலும் சரி, இந்தியப் படையானாலும் சரி ஆயுதங்களுக் கிடையில் மௌனிகளாக கடந்த 4 ஆண்டுகளாக தமிழ்மக்கள் தவித்துக் கொண்டுள்ளனர். தமிழ் மக்கள் என்ன நினைக்கிறார்கள்? என்ன செய்யப் போகிறார்கள்? என்பதை திட்டவட்டமாக கூற முடியாத நிலையில் இன்று தமிழ்ப் பிரதேசம் அலைக்கழிக்கப் பட்டிருக்கிறது. தமிழ் மாகாண தேர்தலில் மக்கள் சுதந்திரமாக செயல்பட வைப்பதே எந்த தமிழ் விரும்பிக்கும் கடமையாக இருக்க முடியும். மேலும் மேலும் எத் தரப்பினரும் ஆயுதத் தீர்வையே அடுத்தடுத்து வைத்ததனால் மூர்ச்சையடைந்த தமிழ் மக்களை ஜனநாயக வெளிப்பாடான தேர்தல் மூலம் எழுந்து நடக்க செய்யவேண்டும்.

---

## "துன்பக் கடலைக் கடக்கும் தோணி".

—சவஹர்லால் நேரு

ஜனங்களின் மனக்கருத்துக்களும் பொருளியல் நிலைமைகளும் புரட்சிகளை உருவாக்குகின்றன அதிகாரத்தை வகிக்கும் மதியிலிகள் தங்களுடையகருத்துக்குபொருந்தாத எதையும் காண முடியாத குருடர்கள் ஆகிவிடுகிறார்கள். அவர்களுடையமூளைக்குக் கிளர்ச்சிக்காரர்கள் தான் புரட்சியை உண்டு பண்ணுகிறார்கள்என்றுதோன்றுகிறது கிளர்ச்சிகாரர் என்போர் வர்த்தமான நிலைமைகளில் அதிருப்தி கொண்டோராய் அவற்றை மாற்றும் விருப்பமும் முயற்சியும் உடையோர் ஆவர். புரட்சிகள் தோன்றும் போதெல்லாம் அத்தகைய கிளர்ச்சிக்காரர்களும் புற்றீசல் போல் புறப்பட்டு விடுகிறார்கள் என்பது உண்மையே.

அவர்கள் சமூகத்திலுள்ள கொந்தளிப்பு அதிருப்தி, இவற்றின் பயனாகவே தோன்றியவர்கள். ஆனால், கிளர்ச்சிக்காரன் சொல்லுகிறான் என்பதற்காக லட்சக்கணக்கான மக்கள் செய்கையில் இறங்கி விடுகிறார்கள் என்று நினைப்பது தவறு. பெறும் பாலான மக்கள் எல்லாவற்றிக்கும் மேலாக பாதுகாப்பையே விரும்புகிறார்கள். இருப்பதை இழப்பதற்கு அவர்களுடைய மனம் ஒத்துக்கொள்வதில்லை. ஆனால் பொருளியல் நிலைமைகளின் காரணமாக அவர்களுடைய தினசரி ஜீவியத்தில் கஷ்டங்கள் மிகுந்து, வாழ்க்கையே பொறுக்க முடியாத சுமையாகி விடுகிற காலத்தில், மக்களில் உடல் வலியும், உளவலிமையும் இல்லாதவர் கூட அபாயங்களை ஏற்கத் துணிந்து விடுகிறார்கள். ஏனெனில் அந்நேரத்தில் கிளர்ச்சிக்காரன் அவர்களுக்குத் துன்பக் கடலைக் கடக்கும் தோணியாகத் தென்படுகிறான்.

— இந்திராவுக்கு எழுதிய கடிதங்கள்

## நேருவை நினைவு கொள்வோம்.

- தண்டனைகள் கடுமையாக இல்லாவிட்டால், குற்றங்களும் கொடுமைகளும் அதிகரித்துவிடும் என முட்டாள்கள் நம்புகிறார்கள். ஆனால் உண்மை இதற்கு எதிரானது மக்கள் பட்டினி கிடப்பதையும், வறுமையில் வாடுவதையும் பற்றி கவலைப்படாமல் குற்றங்கள் பெருகி என்று சட்ட வல்லுநர்களும், நீதிபதிகளும் பேசி மெழுகுகிறார்கள். ஆனால் அவற்றுக்கு அடிப்படையாக இருக்கும் பொருளாதாரக் காரணங்களை குறித்து அவர்களுக்கு கவலையில்லை.
- ஒரு புத்தகம் வாசகனின் ஆன்மாவை வளப்படுத்தி, மனித சிந்தனையை மேம்படுத்தி எழுச்சியூட்டும் என்றால் அதுவே சிறந்த நூல் அதனை ஆக்கியோனே சிறந்த படைப்பாளன்.
- புத்தகங்களையும், நண்பர்களையும் தேர்ந்தெடுப்பதில் கவனமாகயிருங்கள். உங்கள் பண்புகளும், பழக்கங்களும் இவற்றைச் சார்ந்தே அமைகின்றன.
- நூல்கள் மனிதர்களல்ல ஆயினும் அவை உயிருள்ளவை.
- திறக்கப்பட்டு, படிக்கப்பட்ட பின் மகிழ்ச்சியோடும், பயன் பெற்ற நிறைவோடும் மூடப்படுகிற புத்தகமே சிறந்த புத்தகம்.
- பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்வதன் மூலமே அறிவு பெற்றுவிடலாம் என்பது மடத்தனமானது. கல்விநிலையங்கள் உருவாக்காத காலத்திலேயும் உலகில் அறிவாளிகள் வாழ்ந்தவர்கள். தானியத்தை விட்டு பதரை மட்டும் உட்கொள்வது. போன்றே இப்போதைய கல்வி உள்ளது.
- ஒழுக்கத்தைப் பயிற்றுவிக்காத கல்வியால் பயனுமில்லை.

—நேரு

படிப்பகம்

www.padippakam.com







# ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியோடு சங்கமித்ததில்...

● **உங்கள் அமைப்பு தேர்தலில் ஈடுபட காரணம்?**

இன்றைய இலங்கையின் அரசியல் சூழலையும், தமிழ் மக்களின் நிலையையும் எண்ணிப்பார்த்தே, சாதக பாதக நிலைமைகளைக் கருத்தில் கொண்டே எங்கள் இயக்கம் தேர்தலில் கலந்துக் கொள்கிறது. சக போராளிகள் அமைப்புகள் ஆன ENDLF, TELO போன்றவைகளும் இது போன்றே செயல்பட்டிருப்பார்கள் என்று நம்புகிறோம்.

● **தேர்தல் ஒரு நிரந்தரத் தீர்வை ஏற்படுத்தி விடுமா?**

தற்காலிகமான ஒரு அமைதியை, சமாதானத்தை இத்தேர்தல் அளிக்கும் என்று நம்புகிறோம். ஒரு பக்கம் சிங்கள இனவெறி இந்த அமைப்பிலுள்ள சட்டங்களால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு உள்ளது. இலங்கையின் அரசியல் கட்சிகள் பெரும்பாலானவை (UNPயின் ஒரு சாரார் உள்பட) இன வெறியைத் தூண்டி வளர்த்து தங்களுக்காக பயன்படுத்தி வருகின்றனர். அது மக்களிடையே ஆழப்பதிந்துள்ளது. சமூக மாற்றம் ஒன்றினால் தான் மக்களின் இத்தகைய உணர்வுகளை மாற்ற முடியும். அப்பொழுதுதான் முழுமையான சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்த முடியும்.

மறுபக்கம் ஆயுதங்களின் மூலம் தங்கள் அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்ளும் போக்கு புலிகளிடம் உள்ளது.

சக போராளிகளின் தியாகத்தையும், மக்களுடைய அமைதியையும் மதித்து நெகிழ்வாக பங்களிக்கும் சூழலை அவர்கள் உருவாக்கித் தர வேண்டும்.

● **தேர்தலில் ஈடுபடுவதன் மூலம் உங்கள் நோக்கம்....**

படிப்பகம்

www.padippakam.com





சுரேஷ் (எ) பிரேமச்சந்திரன்



அ. வரதராஜபெருமாள்

□ இன்றைய நிலையின் இந்த தேர்தல் உடனடி தேவையாகும். ஒரு இடைக்கால அமைதியை ஏற்படுத்துவதற்கும், தவறான அராஜக வழியில் சென்றுக் கொண்டிருக்கும் தமிழ்ப் போராட்டத்தை உடனடியாக நிறுத்துவதற்கும் நிச்சயம் பயன்படும். இந்த தேர்தலைப் பயன்படுத்தி, நின்று நிதானமாக ஒரு பக்கம் சமூகப் புரட்சியை முன்னெடுப்பதற்கும் இத்தேர்தலை ஏற்றுக் கொண்டோம். இந்த தேர்தலை நிராகரித்தால் நியாயமற்ற, சமாதானத்தை விரும்பாத, முரட்டு வெறிப்பிடித்த ஆயுத வெறியர்களாகவே அனைவர் முன்பும் காட்சியளிப்போம்.

● தேர்தல் நடத்த விடாமல் தடுத்திட நினைக்கும் சக்திகள் பற்றி....

தமிழ் மக்களின் நலன்களை விரும்பும் யாரும் இப்போது தடையாக இருக்க மாட்டார்கள். அதிகார நோக்கமும், பதவி வெறியும் கொண்ட ஒரு சில போராளி தலைவர்களே (அவர்களின் தொண்டர்களல்ல) வீண் பிடிவாதம் பிடித்து ஏதாவது ஒரு காரணத்தை அப்போதைக்கப் போது காட்டி தடையாக இருப்பார்கள்.

● தேர்தலில் ஈடுபடுவர்களை சமூக விரோத சக்திகள் என்று பிரபாகரன் கூறியுள்ளாரே.

□ உண்மையில் யார் சமூக விரோதிகள் என்று மக்கள் அறிவர். ஈழப் போராட்டம் பலவீனமடைந்ததற்கே அவர்கள் தான் காரணம். ஈழப்போராட்டத்தில் இறந்தவர்களில் பாதிப்போர் சகோதர படுகொலைகளாலும், சயனைட் தற்கொலைகளாலுமே கொல்லப்பட்டுள்ளனர். சகோதர இயக்கங்கள் மீது அவர்கள் தொடுத்த தாக்குதல் காரணமாகவே போராட்டம் பலவீனமடைந்தது.

● தேர்தல் சுமூகமான முறையில் அமையுமா?

□ அமைய வேண்டும். இந்திய அரசு அதற்கு பொறுப்பு ஏற்றுள்ளது. சிங்கள வெறி கொண்ட குண்டர்கள் போலவே, அதிகார மோகம் கொண்ட ஒரு சில மோசடி சக்திகள் யுத்தச் சூழலைப் பயன் படுத்தி கொள்ளை லாபம் அடிப்போர், கொலை, கொள்ளை நடத்தும் சக்திகள், ஆயுதத்தை ஏந்துவதில் மோகம் கொள்பவர்கள், புரட்சியின் பேரால் சுயலாபம் பெறுபவர்கள் இவர்களே இன்று தேர்தலுக்கு தடையாக உள்ளனர்,

● தேர்தல் வழிமுறையை நீங்கள் ஏற்றுக்கொண்டு விட்டீர்கள்? இப்போது உங்களது லட்சியத்தை கைவிட்டு விட்டீர்களா?



கிருபா

படிப்பகம்

www.padippakam.com





□ இல்லை. இன ஒடுக்கு முறைக்கு எதிரான தமிழ் மக்களின் பிரிவினைப் போராட்டம் மட்டுமே தற்போது நின்று உள்ளது. அது தற்காலிகமான ஒரு முடிவு எடுக்க வேண்டி நின்றுள்ளது, ஆனால் சமூகப் புரட்சிக்கான விடுதலைப் போராட்டம் என்ற எங்களின் நீண்டகாலப் போராட்டம் தொடர்ந்து நடக்கும். போராட்ட வடிவங்கள் வேறுபட்டது. நேற்று வரை ஆயுதப் போராட்டம் நடத்தினோம். இனி ஜன நாயக ரீதியிலான வெகு ஜனப் போராட்டத்தில் எங்கள் அமைப்பை வடிவமைத்துக் கொண்டோம். நாளை திரும்ப மாறலாம் மாறாமலும் இருக்கலாம். அது ஸ்ரீலங்கா அரசு இனவெறி குழுக்கள், அமைதிக்கான இந்தியாவின் உத்திரவாதம் இவைகளில் அடங்கியிருக்கிறது.

நேற்று இலங்கை ராணுவத்தினால் நாங்கள் அடிமைகளாகக் கருதப்பட்டோம். இன்று புலிகளுக்கு அடிமைகளாக ஆக்கப்பட்டுள்ளோம். இந்நிலையை முற்றாக ஒழித்து உடனடியாக, நாட்டில் சமாதானம், ஐக்கியம், ஜனநாயகம் என்பவற்றை நிலை நாட்டியாகவேண்டும். இல்லாவிடில் நாம் எமது அடிப்படை உரிமைகளைக் கூடப் பெற முடியாதவாறு ஒரு சர்வாதிகாரக் கூட்டத்தை வளர்த்த குற்றத்திற்கு ஆளாக்கப்படுவோம்.

ஆகவே, இந்நிலையை மாற்ற வேண்டும் என்பதற்காகவே நாம் தேர்தலைச் சந்திக்க நினைக்கிறோம். அங்கு மக்கள் தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்க வேண்டும். எமது நாட்டை வளப்படுத்துவதையும், எம்மை அபிவிருத்தி செய்யும் பணிகளையும் மேற்கொண்டபடியே எமது தமிழ் தேசிய சுயநிர்ணய உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் தொடர்ந்தும் போராடுவோம்.

● இங்குள்ள சில கட்சிகள், சில பத்திரிக்கைகள் தமிழ் மாகாண தேர்தலை புறக்கணிப்பு செய்கிறார்களே...

□ இலங்கை தமிழர்களின் பிரச்சனை இவ்வளவு சிக்கலானதற்கும், குழப்பமடைந்ததற்கும் காரணம் இங்கு சில கட்சிகள் தான், அவைகளுக்கு ஆதரவு தரும் சில பத்திரிக்கைதான். இங்குள்ள சிலபேர் தங்கள் தங்கள் நோக்கங்களுக்காக எங்களை பகடைக்காய்களாக பயன்படுத்திக் கொண்டனர்.

● இறுதியாக தாங்கள் சொல்ல நினைப்பது.

"நாங்கள் நிச்சயம் வெல்வோம்! மக்களை விடுதலை செய்வோம்! எங்கள் உயிரியியக்கமே எமது மக்களின் வளமான எதிர்காலத்திற்காகவே."

—புஷ்பம் மைந்தன்,
இரா. தேசிகன்.

---

● மாலத்தீவு, சிங்கப்பூரிலிருந்து வந்த மர்மக் கப்பலில் வந்தவர்களால் கைப்பற்றப்பட்டதாக செய்தி வந்துள்ளது. மனைவி—மக்களுடன் அதிபர் கையும் பிணையக் கைதியாக ஆக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. மாலத்தீவு நாட்டிற்கு கடந்த 3-ஆம் தேதி அதிகாலையில் வந்த தமிழ் பேசும் இளைஞர்கள்தான் இதை செய்திருப்பார்கள் என்று தெரிகிறது. இந்த ஆயுதபாணிகள் மாலத் தீவிற்கு அருகாமையிலுள்ள இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்றே உறுதி செய்யப்பட்டுள்ளது.

---

● விழுப்புரத்தில் 1978-ம் ஆண்டு நடந்த சாதிக் கலவரத்தையொட்டி தாழ்த்தப்பட்டவர்கள் 9 பேர் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட மூவருக்கு ஆயுள் தண்டனையாக குறைத்தும், 16 பேருக்கு ஆயுள் தண்டனை ஊர்ஜிதமும் செய்யப்பட்டுள்ளது.

---

● தமிழ் நாட்டில் வடகிழக்குப் பருவ மழை அக்—இறுதி வாரத்திலிருந்து துவங்கியுள்ளது. காலம் கடந்து பெய்தாலும், விவசாயத்திற்கு உதவும் என்று நம்பப்படுகிறது. கடந்த ஆண்டு இந்த பருவ மழை அக்—25 பெய்யத் தொடங்கியது. இந்த ஆண்டு குறிப்பிட்ட காலங்களில் பெய்வதற்கான அறிகுறிகள் எதுவும் தெரியவில்லை. தற்போது பனி பெய்யத் தொடங்கி விட்டதைப் பார்க்கும்போது இந்த ஆண்டும் பருவமழை தவறிவிட்டதோ என விவசாயிகள் கவலையுடன் உள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com



தொடர் கட்டுரை :

# பாரதிராஜாவின் படைப்புகள்

சூர்யா

தன் குலத் தொழிலைச் செய்யும்படி தந்தையினாலும், ஊராரினாலும் வற்புறுத்தப்படுகிற பரஞ்சோதி ஒரு கவிஞன். ''அப்படிப்பார்த்தா பாரதியார் மந்திரத்தைதானே ஓதுக்கிட்டு இருந்திருப்பாரு'' என்பது அவன் கேள்வி. அந்த ஊருக்கு வந்து வேற்று ஜாதிப்பெண் பாஞ்சாலியைக் காதலிக்கும் அவனை, அது குற்றமென்று கூறிய ஊர்ப் பஞ்சாயத்து அவனை மொட்டையடித்து, கழுதை, மேல் உட்கார வைத்து ஊர்வலம் விடுகிறது. மனம் நொந்த பரஞ்சோதி தான் பட்டிணத்துக்குச்சென்று பெரிய மனிதனாகத் திரும்பி வருவதாக சபதம் கூறி நகரம் போகிறான். அங்கே ''சின்னஞ்சிறு துளியில் ஓர் உலகம் உருவாகும் என் சிந்தையினி கங்கா நதி பொங்கும் இடமாகும்'' என்ற கவிதையை வெள்ளமெனப் பிரவாகித்து உயருகிறான்.

இடையில், கிராமத்தில் பாஞ்சாலியின் மாமன் தன் மனைவிக்குக் குழந்தை இல்லை என்பதைக் காரணம் காடி, பாஞ்சாலியை இரண்டாம் தாரமாக மணக்க முயற்சிக்கிறான்.

நடுவே, பெருமழை பொழிந்து வெள்ளம் பெருக ஏரி உடைந்து ஊர் மூழ்கும் அபாயம் ஏற்படுகிறது. ஒரு கன்னிப்பெண் கையில் தீக்கொள்ளி ஏந்தியபடி ஊரை நிர்வாணமாக வலம் வந்தால் மழை நின்று விடும் என்ற சாங்கியத்தை நிறைவேற்ற முடிவு செய்து ஒரு பெண் தேர்ந்தெடுக்கப் படுகிறாள்.

அந்தப் பெண் : பாஞ்சாலி

நிர்பந்தப்படுத்தப்பட்ட பாஞ்சாலி நிர்வணமாக ஊரைச் சுற்றி வலம் வருகையில் பரஞ்சோதி வர, தன்னை அவமானப்படுத்திய அதே ஊர் தன் காதலியையும் அவமானப்படுத்துவதைக்கண்டு வெகுண்டவன் .. மகாபாரதத்தில் துகிலுறியப் பட்ட பாஞ்சாலிக்கு கண்ணன் சேலை கொடுத்ததாகச் சொல்லப்படுகிறது; ஊராரின் மூடநம்பிக்கையினால் துகிலுறியப் பட்ட இந்தப் பாஞ்சாலிக்கு... அம்மன் சிலைக்கு கட்டியிருந்த சேலையையே அவிழ்த்துப் போர்த்தி மானங்காத்தான்.

சாங்கியம் கெட்ட தென்று ஊரார் துரத்த, அப்போது வருகை தரும் கிழக்கே போகும் ரயிலில் ஏறி ... இன, மத, ஜாதி, மொழிப் பாகுபாடுகள் நிறைந்த குறுகிய வட்டமான, நிலப்பிரபுத்துவ கலாச்சாரத்தின் எச்சமான கிராமத்தை நிராகரித்து விட்டு cosmopolitn நாகரீகம் சார்ந்த நகரம் நோக்கி ஓடுகிறான்...தன் காதலியுடன் ஒரு புதிய உதயத்தை எதிர் நோக்கி!

அப்படி ஒரு துணிச்சலான முடிவுக்குப் பச்சைக்கொடிகாட்டி அவர்களை அனுப்பி வைத்த பாரதி ராஜா...

பாஞ்சாலி நிர்வாணமாக ஊரை வலம் வருவதற்கு முன்பே மழை நின்று விடுவதாகவும், ஆனால் ஊரார் சாங்கியம் பாதியில் நின்று விடக்கூடாது என்று சொல்லி, அவளை நிர்பந்தப்படுத்தி வலம் வர வைப்பதாகக் காட்டி, அந்தச் சடங்கு ஒரு மூட நம்பிக்கை மட்டுமே, என்ற தன் கோணத்தையும் சொல்லி விட்டார்.

பல்வேறு விதமான மனிதர்களோடு பழகி வந்த பட்டாளத்தான் கிராமத்தின் சாதனங்களை எதிர்த்து வழக்காடுவதாகக் காட்டிய இயக்குநர், கிராமம் சார்ந்த இன்னொரு கூரிய observation ஐ பரஞ்சோதியின் அப்பா, வாயிலாக சொல்கிறார். கிராமத்தில்,பொதுவாக நாவிதர்கள் குளத்தங்கரையில் அமர்ந்து தொழில் செய்வார்களல்லவா? ''தான் வாழ்வதில்லை'' என்று முடிவெடுக்கும் பரஞ்சோதியின் அப்பா. தன் ஜீவனோபாபத் திற்குத் துணை புரிந்த அதே குளத்தில் மூழ்சி, கழுத்தை அறுத்துக்கொண்டு மடிந்து போவதாகக் கட்டினார்.

'மாஞ்சோலைக் கிளிதானோ' பாடல் காட்சியில் மிருதங்கம் ஒலிக்கும் பிண்ணணி இசைக்கு பேனா உருண்டோடி வருவதையும், வயலின்களின் இசைக்குக் கவிதை எழுதப்பட்ட காகிதங்கள் காற்றில் பறப்பதையும் அபாரமான கற்பனையுடன் சொன்ன பாரதிராஜா, காமரா காட்சியை மட்டுமன்று — கவிதையும் கூடவே கதையையும் சொல்லும் என்பதை இந்தப் படத்தில் வருகின்ற ஓரே shotன் மூலமாகவே விளக்கிவிட்டார்.

ஊராரால் அவமானப் படுத்தப்பட்ட பரஞ்சோதி பட்டினம் போக முடிவு செய்கிறான். பாஞ்சாலியுடன் பேசிக்கொண்டு அவன் ரயில்வே ஸ்டேசனுக்குத் திரையின் இடமிருந்து வலமாக நடந்து வர அவர்களின் Close-up-ல் Open ஆகிற shot-zoom back ஆகி அவர்களுக்கு முன்பு parallel ஆக நின்றிருக்கிற ரயிலின் இடைவெளி வழியாகப் புகுந்து இடமிருந்து வலமாக trollyயில் தொடர்ந்து வந்து — அவர்கள் பேசுவது over lap ஆகிக் கொண்டிருக்கும் கடைசிப்பெட்டியருகில் அவர்களுடனே Parallel ஆக நிற்கும். அவர்களுக்கிடையே தூது போகப்போவது அந்த ரயில் தான் என்பதையும் அந்த ஒரே Shot-ல் விளக்கியிருந்தார் இயக்குநர். உருவ அமைதி மட்டுமின்றி உள்ளடக்கச் செழுமையும் முழுமையாக அமைந்த கிழக்கே போகும் ரயிலைத் தொடர்ந்து அவர் உருவாக்கிய அடுத்தபடம் சிகப்பு ரோஜாக்கள்.

—தொடரும்

படிப்பகம்

## இலங்கையில் இன்று தமிழ் மாகாண தேர்தல்

இன்னும் இரண்டு மாதத்திற்குள் இலங்கையில் தமிழர் மந்திரி சபை அமைய இருக்கிறது. தமிழர் ஒருவர் முதலமைச்சராக வருவார்.

— ராஜீவ் காந்தி.

## இலங்கை கிளை தமிழ் மாகான தேர்தல்

இலங்கையில் தமிழ் மாகாண தேர்தல் குறித்து நான் வரவேற்கவே செய்கிறேன்.

— அமிர்தலிங்கம்.

தேர்தலில் நாங்கள் பங்கு கொள்ள மாட்டோம்.

— விடுதலைப் புலிகள்

இ.பி.ஆர்.எல்.எப். முஸ்லிம் காங்கிரஸ் களத்தில் நிற்கின்றன.




இலங்கையில் முதற்கட்டமாக தமிழ் மாகாணத்தில் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத் தீவு போன்ற இடங்களில் இ.பி.ஆர்.எல்.எப். இ.என் டி. எல்.எப். முதலியன போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. கிழக்கு மாநிலத்தில் வரும் நவ - 19 நடைபெறுகிறது.

www.padippakam.com






ஓவியன்

உலகின் மூன்றில் ஒரு நிலப் பகுதி பாலைவனமாகும் பேரபாயம் தோன்றியுள்ளது. ஏற்கனவே 10 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் தங்களது மரபு வழி வாழ்க்கையிலிருந்து வெளியே தள்ளப் பட்டுள்ளனர். புதிய வாழ்க்கை வழிகளைத் தேடி இவர்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர்.

ஒவ்வொரு நிமிடமும் 150 குழந்தைகள் பிறக்கின்றன. ஒவ்வொரு மணி நேரமும் 9,000 குழந்தைகள் பிறக்கின்றன. ஒவ்வொரு நாளும் 2,16,000 குழந்தைகள் பிறக்கின்றன. அதாவது ஒரு வருடத்திற்கு 7,48,40,000 பேர் அதிகரிக்கின்றனர். தற்போது 500 கோடியாக உள்ள மக்கள் தொகை இன்னும் 10 ஆண்டுகளில் 600 கோடியாகி விடும். புதியதாக ஜனத்தொகை பெருகுவதற்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது.

ஆனால் உலகின் உணவு உற்பத்தி வீழ்ச்சியைத் தழுவிக் கொண்டுள்ளது. உலகில் 1986—87ல் 186 கோடி டன்னாக இருந்த உணவு உற்பத்தி 1987—88ல் 178 கோடி டன்னாக வீழ்ந்துள்ளது. மொத்தத்தில் இது 4.4 சதவீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த உணவு உற்பத்தி வீழ்ச்சி வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில்தான் அதிக பட்சமாக 6.3 சதவீதமாக உள்ளது. அதாவது உணவு உற்பத்தி 91.3 கோடி டன்னிலிருந்து 85.6 கோடி டன்னாக குறைந்துள்ளது.

உணவு இறக்குமதி செய்யும் நாடுகளை நிர்ப்பந்திக்கும் வகையில் உணவுப் பொருட்களின் விலையை உயர்த்தும் முகமாக முதலாளித்துவ நாடுகள் சதிச் செயல்களில் ஈடுபடுகின்றன. 1987—ம் வருடம் அமெரிக்கா மட்டும் 2 கோடியே 2 லட்சம் ஹெக்டேர் நிலங்களை விவசாயம் செய்யாமல் திட்டமிட்டு நிறுத்தி வைத்துவிட்டது, அந்த நேரத்தில் மட்டும் கோதுமை விலை 14 சதவீதம் அதிகரித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வளர்முக நாடுகளில் விவசாயம் செய்யும் நிலப்பகுதிகளின் அளவு அதிகரித்துள்ளது. ஆனால் வறட்சி நிலைமைகள் உற்பத்தியைப் பாதித்துள்ளன வளரும் நாடுகளில் 24 சதவீதம் விவசாய உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளது. குறிப்பாக ஆப்பிரிக்காவில் 15 சதவீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்தியாவில் 1987-ல் 35 இயற்கை வள மண்டலங்களில் 21—ல் வறட்சி ஏற்பட்டு விட்டது. 10 முதல் 12 சதவீதம் வரை உற்பத்தி வீழ்ச்சி அடைந்துள்ளது.

சீனா, கனடா, அர்ஜென்டினா மற்றும் அமெரிககாவில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியின் காரணமாக உலகில் உணவு தானிய கையிருப்புக் கரைந்து கொடிய பஞ்சம் ஏற்படும் அபாயம் உருவாகக் கூடும் என்று சர்வதேச நிலை பற்றிய கண்காணிப்பு கழகம்எச்சரித்துள்ளது.

இந்த அனைத்துலக அமைப்பு இதற்கு முன் 1972—ஆம் ஆண்டு தான் இதைப்போல உலக உணவு நிலை பற்றிய ஆய்வு அறிக்கையை வெளியிட்டது. அப்போது இந்தியா, அமெரிக்கா, சோவியத் யூனியனில் முறையே பருவ மழை தவறியிருந்தது. பயிர் செய்யும் நிலப்பரப்பு குறைந்திருந்தது. அதனால் ஏற்பட்ட உற்பத்தி குறைவினால் மிகப்பெரும் தட்டுப்பாடு மற்றும் பற்றாக்குறை ஏற்பட்டது.

16 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு முறை இருந்ததைவிட மிக மோசமான நிலையே 1988—ல் ஏற்பட்டிருப்பதாக இப்போது வெளியாகியுள்ள அறிக்கை கூறுகிறது. தற்போதைய நிலை காரணமாக பெரும் பஞ்சம் ஏற்பட்டு விலைவாசி பெருமளவுக்கு உயரக்கூடும் என்றும் அது கூறுகிறது.

அடிவயிற்றைக் கலக்கும் இந்த அறிக்கையில் நான்கு பெரும் நாடுகளில் ஏற்பட்ட வறட்சியால் உலகின் மொத்த உணவு தானிய கையிருப்பே 20 கோடி டன்னாக குறைந்து விட்டதாகவும், இந்தக் கையிருப்பு 54 நாட்களின் தேவைக்கே போதுமானது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த ஆகஸ்ட் ஐந்தாம் தேதியிட்ட இந்த அறிக்கையின் கணக்குப்படி உணவுதானிய கையிருப்பு மிக விரைவில் காலியாகிவிடும் என்பதை நினைக்கும்போது பகீர் என்கிறது. கோதுமை, சோயா பீன்ஸ் உள்பட பல தானியங்களின் உற்பத்தி வீழ்ச்சியுற்று, ஏற்கனவே உணவுப் பொருட்களின் விலைவாசி உயரத் தொடங்

படிப்பகம்

www.padippakam.com



விட்டதாகவும், 1973-ம் ஆண்டை விட அடுத்த ஆண்டு துவக்கத்தில் விலைவாசி அதிகரித்துவிடும் என்றும் அது எச்சரிக்கிறது.

நடப்பு ஆண்டில் உலகின் உணவுத் தேவை குறைந்த பட்சம் 167 கோடி டன்னாக இருக்கும் என்றும், உற்பத்தி அளவு 152 கோடி டன் என்றும் இந்த அமைப்பு மதிப்பிட்டுள்ளது. கடந்த ஆண்டைவிட உற்பத்தி அளவு ஏழு கோடியே 60 லட்சம் டன் குறைந்துள்ளது. ஐரோப்பாவில், சோவியத்யூனியனில் மற்றும் இந்தியாவில் தானிய உற்பத்தி கடந்த ஆண்டைவிட அதிகரிக்கும் என்ற நம்பிக்கை இருந்தாலும், இவற்றைக் கொண்டு உலகின் பற்றாக்குறையை சரிகட்ட முடியாது. மொத்த உற்பத்தியை விட 15 கோடியே 20 லட்சம் டன் கூடுதலாக உணவின் தேவை இருக்கும்.

கனடாவில் கோதுமை உற்பத்தி 1 கோடியே 60 லட்சம் டன் குறையும். சீனாவில் உணவின் உற்பத்தி அளவு மொத்தத்தில் 3 கோடி டன் குறைவாகவா போகும். அமெரிக்காவில் உணவு தானிய உற்பத்தி 7 கோடியே 80 லட்சம் டன் குறைவாகும்.

பல பொருட்களின் விலை ஏற்கனவே 50 சதவீதம் வரை அதிகரித்துவிட்டது. வரும் ஆண்டு மட்டுமல்ல, தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கு உணவுத் தட்டுபாடும்-விலைவாசி உயர்வும் இந்த உலகை பெரிதும் ஆட்டிப் படைக்கும்.

உணவு உற்பத்தியை அதிகரிப்பது எப்படி? நவீன தொழில் நுட்பம் மற்றும் புதிய விஞ்ஞான கண்டுபிடிப்புகள் ஆகியவற்றின் மூலம், இவற்றை நன்கு பிறயோகிப்பதன் மூலம்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். ஆனால் இந்த நவீன வசதிகள் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளின் ஆதிக்கத்தின் கீழ்தான் உள்ளது. 1980ல் உணவு வர்த்தகம் பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இருந்தது என்று ஐ. நா. புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது வளரும் நாடுகள் புதிய விதிமுறைகளை மேற்கொண்டுள்ளன. உயிரியல் தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் வளர்முக நாடுகளில் உணவு உற்பத்தி வளர்ச்சியை தடுத்து முடக்கிவிட்டமிட்டுள்ளன. ''விதை யுத்தம்'' தான் பன்னாட்டு நிறுவனங்கள் வளர்முக நாடுகள் மீது தொடுத்துள்ள புதிய போராகும். உயிரியல் தொழில் நுட்பம் தனியார் மயமாக்கப்பட்டுள்ளது. இதனால் இப்பிரச்சனை மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

மரபியல் தொழில் நுட்பத்தின் மூலம் பலவகையான பயிர் வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த புதிய புதிய நவீன பயிர் வகைகளையும், கலப்பின கால்நடைகளையும் உருவாக்க வளர்முக நாடுகள் ஏராளமான ''மரபு வழி'' உயிர்ப் பொருட்களைத் தந்துள்ளன. இவற்றை பயன்படுத்தித்தான் மேற்கத்திய நாடுகள் இந்த நவீன கலப்பின தாவரங்களை கண்டறிந்துள்ளன.

மேற்கத்திய நாடுகளின் இந்த மரபியல் ஆராய்ச்சிக்கு ஆசியா, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா ஆகிய கண்டங்களிலுள்ள வளர்முக நாடுகள் முறையே 32.2 சதவீதம், 34 சதவீதம், 22.9 சதவீதம் மரபியல் உயிர்ப் பொருட்களை கொடுத்து உதவியுள்ளன. ஆனால் இந்த ஆராய்ச்சியால் மிகவும் பயனடைபவை அமெரிக்காவும், மேற்கு ஐரோப்பிய நாடுகளும்தான்.

இவ்வாறு மேற்கத்திய நாடுகளில் அதிக பலனைத் தரும் நவீன கலப்பினைத்தரும் நவீன கலப்பின வகை தாவர வகைகள், வளர்முக நாடுகளுக்கு தருவிக்கப்படுகின்றன. ஆனால், இவை பூச்சி மருந்துக் கொல்லிகள் தாவர கிருமிக் கொல்லிகள், உரச்சத்துக்கள் கலந்து வளர்முக நாடுகளுக்கு கொடுக்கப்படுகின்றன. இவை அதிகப்படியான ரசாயனம் கலந்து விநியோகிக்கப்படுவதால் சீர்கேட்டையும், விஷத்தன்மையையும் பரப்ப வழி வகுத்துள்ளது. சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தி உள்ளது.

இயற்கையான சூழ்நிலையில் பல ஆயிரம் வருடங்களாக இருந்துவரும் விதைகளையும், பயிர்களையும் இந்த நவீன விதைகளும், பயிர்களும் அழித்து நாசகரம் செய்துள்ளன. புதிய கலப்பின விதைகள், விவசாய ரசாயனப் பொருட்கள் போன்றவை வரையறையின்றி அதிகரித்துள்ளது. தீவிரத் தன்மை அடைந்த நிலையில் அனைத்தும் சேர்ந்து ஒரு சங்கிலித் தொடரை ஏற்படுத்தியுள்ளது. இது பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

பத்து ஆண்டுகளுக்கு முன் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம், உலகெங்கிலும் உணவு உற்பத்தியாகிவந்த 1 கோடியே 9 லட்சம் ஏக்கர் நிலம் புகையிலைச் சாகுபடிக்காக மாற்றப்பட்டு விட்டதாக அறிவித்தது. இதில் 69% நிலம் வளர்முக நாடுகளில் தான் உள்ளது.

—●—

● இலங்கையில் புத்தமத சாமியார்கள் சுமார் 5000 பேர் நாட்டில் அமைதியை ஏற்படுத்த கொழும்பு நகரில் நவ-1ஆம் தேதியன்று கூடினர். நாட்டில் நிலவும் மோசமான பாதுகாப்பு நிலைமையைக் கருதி கூட்டத்தை ஒத்திவைக்குமாறு இலங்கை போலீஸ் தலைவர் எர்னஸ்ட் பெரிரா விடுத்த எச்சரிக்கையை துச்சமென புத்தமத சாமியார்கள் புறந்தள்ளி விட்டனர்.

—●—

30 வருடங்களுக்கு முன் விஞ்ஞான ஆராய்ச்சிக்காக ஆப்பிரிக்காவிலிருந்து ஆட் கொல்லித் தேனீக்கள் பிரேசிலுக்குக் கொண்டு வரப்பட்டன. சில வருடங்கள் கடந்தபின் பார்வையாளர் ஒருவரின் கவனக்குறைவால் 20 தேனீக்கள் பாதுகாப்பான இடத்திலிருந்து தப்பி விட்டன. தப்பிய தேனீக்கள் தற்போது 20 லட்சத்திற்கும் அதிகமாகப் பெருகிவிட்டன. இத்தேனீக்கள் பெரும் நாசங்களை விளைவித்தவாறு பொலிவியா, பெரு, கொலம்பியா நாடுகள் வழியாக மெக்ஸிகோவுக்கு வந்துள்ளன. பயங்கரமான இத் தேனீக்களால் இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அடுத்ததாக இவை அமெரிக்காவுக்குச் செல்லக் கூடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com



# உலக உலா

☐ அமெரிக்க நாட்டின் பெரு நகர்களில் ஒன்றான நியூயார்க்கில் செல்வவளமும் பகட்டும் ஒரு புறம் இருந்த போதும் சேரிகளும், பரம ஏழைகளும், சீரழிவுகளும், மறுபுறத்தில் பெருகி வருகின்றன. குற்றங்கள் மற்றும் கொலைகளில், கலிபோர்னியாவுக்கு அடுத்து இரண்டாம் இடத்தில் நிற்பது இந்நகரமே ஒவ்வொரு ஐந்து நிமிடங்களுக்கும் ஒருமுறை அங்கு குண்டர்கள் கோஷ்டிகளுக்கு இடையிலான மோதல்களும், கைதுகளும் சர்வ சாதாரணமான நிகழ்ச்சிகள். நியூயார்க்கில் 42வது தெரு, பிராட்வே போன்ற பகுதிகளில் வேசித்தனம் தலைவிரித்தாடுவதோடு, ஆபாச கேசட்டுகள் போதைப் பொருட்களின் விற்பனையும் அதிகம். நியூயார்க்கில் பிறக்கின்ற 161 குழந்தைகளில் ஒன்று 'எய்ட்ஸ்' நோய்க் கிருமிகளுடன்தான் பிறக்கிறதாம்.

☐ அரபு நாடுகளுக்கு, எதிரான சாகசங்களில் இறங்க, எல்லாத் தயாரிப்புகளையும் இஸ்ரேல் செய்து வருகிறது. பாலஸ்தீன மக்களின் கிளர்ச்சியை ஒடுக்க, ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இஸ்ரேல் 2768 ச.கி.மீ பரப்பில் 65,000 யூதர்களை குடியேற்றி பாலஸ்தீன மக்களின் வேலை வாய்ப்பை பறித்து வருகிறது தன்வசமுள்ள அப்பகுதியில் பத்திரிகையாளர்கள் செல்ல தடைவிதித்துள்ளது. அங்கே தொலைபேசித் தொடர்பு கூட துண்டிக்கப்பட்டு விட்டது. பாலஸ்தீன மக்களின் கிளர்ச்சியை நசுக்குவதோடு அருகிலுள்ள அரபு நாடுகளான சிரியா, ஈராக், சவுதி அரேபியா முதலியவற்றுக்கு எதிராக பெரிய தாக்குதலைத் தொடுக்கவும் திட்டமிட்டு வருகிறது.

☐ இஸ்லாமிய மதத்தை அரசாங்க மதமாக்கி, வங்காள தேசத்தை ஒரு இஸ்லாமிய சட்ட திட்டங்களைக் கடைபிடிக்கும் அரசாக மாற்ற, அதிபர் எர்ஷாத் செய்துவரும் முயற்சிகளை, எதிர்க்கட்சிகள் வன்மையாகக் கண்டித்துள்ளன. தேர்தல் முறையில் திருத்தங்கள் செய்யவும், உள்ளாட்சி அமைப்புகளில் இராணுவ அதிகாரிகளை நுழைத்து ஜனநாயகம் பண்புகளை அழிக்கவும் எர்ஷாத் அரசுக்கு எவ்வித உரிமையுமில்லை எனக் கூறிய எதிர்க்கட்சிகளின் கூட்டுக்குழு தலைநகர் டாக்காவில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்துள்ளன.

☐ பனாமா நாட்டில் அமைக்கப்பட்ட அமெரிக்க இராணுவத் தளத்திற்கான காலக்கெடு 1990ல் முடிவடைகிறது. இதற்கிடையே அந்நாட்டை அடிமைப்படுத்த ஆட்சிக் கவிழ்ப்பு வேலைக்கு முயற்சி செய்து முடியாமல் போனதால் அந்நாட்டிற்கு பொருளாதாரத் தடை விதிப்பதன் மூலம் நெருக்கடியுண்டாக்க முயற்சிக்கிறது. அத்துடன் தேவைப்பட்டால் அந்நாட்டை சண்டையிட்டுக் கைப்பற்றவும் தயார் செய்யும் விதத்தில், 1300 அமெரிக்க அதிரடிப்படை வீரர்கள் அங்குள்ள இராணுவத் தளத்தில் குவிக்கப்பட்டுள்ளனர்.

● தென் மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள நமீபியா நாட்டில் கடந்த 70 ஆண்டுகளாக இன ஒதுக்கல் அடக்குமுறை தொடர்கிறது. தாது வளங்கள் நிறைந்த பகுதிகளையும், வேளாண்மை நிலங்களையும் வெள்ளையர்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, கறுப்பு இன மக்களுக்கு 'பண்டுஸ்தான்கள்' என்றழைக்கப்படும் ஒதுக்கப்பட்ட பிரதேசங்களை விட்டு வைத்துள்ளனர். தங்கள் உரிமைக்காகப் போராடும் நமீபிய மக்களை ஒடுக்க 10-12 குடிமக்களுக்கு ஒரு படையாள் வீதம் ஒரு லட்சத்துக்கும் அதிக இராணுவ வீரர்களையும், 90 படைத்தளங்களையும் இந்நாட்டில் அமைத்துள்ளதுடன் தென் ஆப்பிரிக்க இனவெறியரசின் ஆதிக்கம் நீடிக்க எல்லாவித ஒடுக்கு முறைகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆயினும் ஸ்வரபேர்(தென்மேற்குஆப்பிரிக்க மக்கள் அமைப்பு) தலைமையின் கீழ், 1960 முதல் நமீபிய மக்கள் தொடர்ந்து போராடுகிறார்கள்.

● சீனாவின் தற்போதைய பிரதமர் 59 வயதான லி-பொங். குடியரசுத் தலைவர் யாங்-ஷாங் மக்கள் சீனத்தில் பல அமைச்சகங்கள் ஏற்றிணைக்கப்பட்டதன் மூலம் அமைச்சகங்களின் எண்ணிக்கையும், அதிகார வகுப்பினரும் குறைக்கப்பட்டுள்ளனர்.

● "மத்தியாஸ் ரஸ்ட்" என்ற 20 வயதான இளம் விமானி சர்வதேச விமானப்பயண விதிகளை மதியாமல். அத்துமீறி சோவியத் எல்லையுள் நுழைந்து மாஸ்கோ நகரின் மையத்தில் இறங்கியதற்காக - தண்டிக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வந்தார். சோவியத் நாடாளுமன்றத் தலைமைக்குழு மன்னிப்பு அளித்து அவரை விடுதலை செய்யுமாறு உத்திரவிட்டது.

● அமெரிக்காவில் தேசிய செல்வத்தின் மூன்றில் இரு மடங்கு.மொத்த மக்கள் தொகையில் 3 சதவீதம் பேரிடமே குவிந்து கிடக்கிறது.

☐ அர்ஜெண்டினா, பொலிவியா, பிரேசில், சிலி, கொலம்பியா, ஈக்வடார், மெக்ஸிகோ, மொராக்கோ, நைஜீரியா, பெரு, பிலிப்பைன்ஸ், உருகுவே, வெனிசுலா முதலிய நாடுகளின் மொத்தக்கடன் சுமை 30.000 கோடி டாலர்கள் (3,90,000 கோடி ரூபாய்கள் ஆகும்).

☐ சைபீரியாவில் வாழும் "யாகுட்" இன மக்களின் மரபு வழி குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்ட போது, அவர்களின் இரத்தத்தில் வட இந்திய மக்களின் இரத்தத்தில் காணப்படும் உயிர்க்காப்பு மூலப் பொருளான H.L.A.B. 70 இருப்பது அறியப்பட்டது. அது மட்டுமல்லாது 'யாகுட்' இனத்தவர்கள் சூரியனையும் குதிரையையும் வழிபட்டு வருகிறார்கள். மேலும் இந்தியாவிலுள்ள 'கருட தரிசனம்' போன்றே இவர்களிடமும் 'ஹகுடா' என்னும் கருத்து நிலவி வருகிறதாம்.

படிப்பகம்

www.padippakam.com



# கதம்பம்

## பறந்துவரும் பயங்கரங்கள்

### இளமை இதோ ! இதோ !

ஒருவர் 300 வயது வரை உடல் நலத்துடன், தெளிவான மன நிலையுடன், முதுமைக் கான நோய்கள் எதுவுமின்றி வாழ்ந்தால் எப்படியிருக்கும்? இது நம்பற்கரியதாக உள்ளது அல்லவா? இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை என சோவியத் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மரபியல் ரீதியாகவே மனிதன் 200 வயது வரை உயிர் வாழ முடியும் என்றே விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

சாதாரண எலிகளைக்கொண்டு செய்யப்பட்ட சோதனையின் விளைவாக மனித ஆயுளை நீட்டிக்கும் முயற்சி வெற்றி பெற்றுள்ளது. வயது முதிர்ந்த எலிகளின் மூளைகளில், வளர்ச்சியுறாத அடிப்பகுதி மூளைத் தசைத் துணுக்குகள் பொருத்தப்பட்டதில், எலிகளுக்கு இளமை திரும்பியதையும், அவற்றில் நோய்த் தடுப்பு அமைப்பு வலுவடைந்ததையும், உயிர்ப் பொருள் உத்வேகம் பெற்று செயலூக்கம் பெற்றதையும் ஆய்வின் மூலம் அறிந்துள்ளனர்.

மூளைக்கும், நோய்த் தடுப்பு அமைப்புக்குமிடையில் உள்ள தொடர்பைஉணர்ந்துள்ள அறிவியலாளர்கள், மனிதன் விரும்பிய காலம் வரை ஆயுளை அதிகரித்துக் கொள்ளும் விதத்தில் மூளை இயக்கத்தைக் கட்டுப்படுத்தும் காலம் விரைவில் வரவிருக்கிறது. பழைய தசைகளை, கருநிலைத் தசைகளைக் கொண்டு மாற்றியமைத்துப் புதுப்பிப்பதன் மூலம் இதுவரை புலப்படாத மூளையின் எத்தனையோ ஆற்றல்கள்வெளிப்படப் போகின்றன.

### முத்துப் பல் சிரிப்பு

இந்தியாவில் ஆண்டொன்றுக்கு 200 கோடி ரூபாய்களுக்கு விற்பனையாகும் பற்பசையின் மொத்த அளவு 21,000 டன்கள்.

"பற்கள் பளீச்சிட, சிதைவத் தடுத்திட, ஈறுகள் பலம் பெற இதையே வாங்குவீர்" எனப் பலவாறாக விளம்பரங்கள் செய்யும் பன்னாட்டு நிறுவனம் ஒன்று இந்த 'பேஸ்ட்' வியாபாரத்தில் 52 சதவிகித விற்பனையை தனது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு கொள்ளை லாபம் அடித்து வருகிறது.

இவர்கள் தயாரித்தளிக்கும் இந்தப் பற்பசையில், நோய்த் தடுப்பாற்றல் இருப்பதற்கான ஆதாரம் எதுவுமில்லை என்று கண்டறிந்து, போலியான விளம்பரங்களை நிறுத்தும்படி உத்திர விட்டுள்ளது.

இந்த வெளிநாட்டு நிறுவனத்தின் ஆதிக்கத்தைமீறி, முன்னேறி கடந்த பத்து வருடங்களில் ஒரே ஒரு இந்தியக் கம்பெனி மட்டும் தான் 15% விற்பனையை எட்டியுள்ளது. பல பழைய நிறுவனங்களோ, புதுப்புது பெயர்களில் விதம் விதமான குழாய்களில் அடைத்து, விற்பனை உத்திகளில் புதுமை செய்து வெளியிடுகின்றன. புகழ்பெற்ற சில நிறுவனங்கள் விளம்பரங்களுக்காக மட்டும் பல லட்சம் ரூபாய்கள் செலவு செய்கின்றன.

### ஒரு நூற்றாண்டுக்குப் பின் உயிர்த்தெழுந்த விலங்கு

கொலிமா தங்கச் சுரங்கத் தொழிலாளர்கள் அண்மையில், நிரந்தர உறைபனிப் பகுதியில் 11 மீட்டர் ஆழத்தில் புதையுண்டிருந்த 100 ஆண்டுகளுக்கு முந்திய 'சலாமந்தர்' என்ற அரிய விலங்கின் உடலைக் கண்டெடுத்தனர். அசைவின்றிக் கிடந்த சடலமான இப்பிராணியை, குளிர்ந்த நீர்த் தொட்டியொன்றில் போட்டதும் அது மீண்டும் உயிர்பெற்று விட்டது.

உயிரியல் ஆய்வு நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு கார்பன் பகுப்பாய்வுகள் மூலம் சோதித்தபோது உடலியக்கம் ஏதுமில்லாமலே 90 வருடங்களுக்கும் மேலாக அது இறுகிக் கிடந்ததென்பது தெரிய வந்தது. அதன் பெரிய கல்லீரல் உடலில் மூன்றில் ஒரு பங்கு எடையுள்ளதாக இருந்தது. கடுங்குளிரின் போது கல்லீரலில் உள்ள 'கிளைகோஜன்' கிளிசரினாக மாறி உடலின் செல்கள் உறைந்து படிகங்களாகி விடாமல் தடுத்துள்ளது. தோலை சுற்றிலும் பனி மூடினாலும், உடலின் திசுக்கள் சுருங்கி விரியும் தன்மையை இழந்து விடவில்லை என வல்லுநர்கள் தெரிவித்தனர்.

### வானியல் தொலைநோக்கி

அர்மீனியாவின் தலைநகரான எரவானுக்கு அருகிலுள்ள அரகாத் மலைச்சிகரத்தின் சரிவில் ஒரு மாபெரும் தொலைநோக்குக் கருவி அமைக்கப்பட்டுள்ளது. இரு கம்ப்யூட்டர்களின் உதவியுடன் செயல்படும் இத்தொலைநோக்கியுடன் அணுசக்தி கடிகாரம் ஒன்றும் இணைக்கப்பட்டுள்ளது. 30 லட்சம் ஆண்டுகளில் 1 நொடி மட்டுமே தாமதமாகவோ விரைவாகவோ இயங்கக் கூடிய மிகத் துள்ளியமான கடிகாரம் இது. வான்கோள்களின் அமைப்பை மேலும் கூர்ந்து காணவும், பூமிக்கப்பால் புறவெளியில் உயிர்த் தோற்றங்கள் உள்ளனவா என ஆராயவும், விண்வெளிப் பயணக் கலங்களின் இயக்கங்களைக் கண்காணிக்கவும் இந்த வானியல் தொலைநோக்கி பெரிதும் பயன்படுகிறது.

—o—

சாதி இழிவையும் — பெண்ணடிமைத்தனத்தையும் புகழ்ந்தும் பேசி காட்டுமிராண்டிக் கூச்சல் போடும் பூரி சங்கராச்சாரி மீது "சதி" வழக்குப்பதிவாகி உள்ளது. ஸ்ரீ கங்கா நகரில் சமீபத்தில் பூரி பேசிய பேச்சு விபரங்கள் பற்றி ரகசிய போலீசார் தந்த அறிக்கைகளின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்யும்படி மாவட்ட போலீஸ் சூப்பரிண்டெண்ட் ஆணை பிறறப்பித்தார். சென்ற அக்டோபர் 25 முதல் 27 ஆம் தேதி வரை அகில இந்திய தர்மமகா சங்கத்தின் சார்பில் நடந்த மாநாட்டில் சதியைப் பற்றி பூரி புகழ்ந்து பேசியதாக முதல் தகவல் அறிக்கையில் போலிசார் குறிப்பிட்டுள்ளனர்.

அந்த பேச்சில் சென்ற ஆண்டு ரூப் குன் வார் உடன் கட்டை ஏறியதால் தான் ராஜஸ்தானில் நல்ல மழை பெய்ததாக பூரி தன் விஷத்தை கக்கியுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# அமைதிக்கு ஆணையிடும் தமிழ் மாகாண தேர்தல் !

கடந்த 5 வருடங்களாக இலங்கை ராணுவம், சிங்கள இன வெறி, போராளி அமைப்புகளின் ஒற்றுமையின்மை இவைகளால் சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்து வந்த தமிழ் மக்களுக்கு விடிவு காலம் ஏற்பட்டிருக்கிறது. ஊர், உறவு, உடமை, எதிர்காலம் சூன்யத்துப் போன அகதி வாழ்விலேயே தன் வாழ்நாளினை இதுவரை கழித்த மக்களுக்கு வைகறைப் பொழுதின் வானத்து வெளிச்சமாய் மாகாண தேர்தல் மலர்ந்திருக்கிறது.

இந்த தேர்தல் இலங்கை அரசும் — இந்திய அரசும் தமிழ் மக்களுக்கு பிரியமுடன் அள்ளித் தந்த அன்பளிப்பல்ல. இது தமிழ் மக்கள், தமிழ் விடுதலைப் போராளிகள் செய்த உயிர்த் தியாகங்களினாலும் லட்சிய வேட்கையினாலும் வென்றெடுக்கப்பட்ட ஜனநாயக உரிமையே ஆகும்.

தமிழர் பகுதியில் பெரும்பாலான சக்திகள் மாகாண சபை தேர்தலை வரவேற்றே உள்ளனர். தேர்தலில் பங்கு பெற ஆர்வமிருந்தும், கடமை உணர்வு இருந்தும் நாங்கள் ஆயுத மற்றவர்களாகயிருப்பதால் தற்போது தேர்தலில் நிற்க சக்தி இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்துள்ளது. EPRLF, ENDLF, TELO, போன்ற போராளி அமைப்புகள் தேர்தலை வரவேற்கவே செய்துள்ளன. PLOT வெளிப்படையாக தேர்தலை ஆதரிக்கா விட்டாலும், திரைமறைவில் சில தேர்தல் யுக்திகளை கொண்டிருப்பதாக தெரிகிறது. EROS சனநாயகப் பூர்வமான வழிமுறையில் நம்பிக்கையிருப்பதாக சொன்னாலும், நடைமுறையில் LTTE யின் ஆளுமைக்கு பயந்து தேர்தலிலிருந்து ஒதுங்கியுள்ளது. தேர்தல் நடத்த தக்க தருணமில்லை என்று சொல்லி தப்பித்துக் கொண்டுள்ளது. EPDP போன்ற இயக்கங்கள் தேர்தலை ஆதரித்தாலும், எதிர்த்தாலும் எந்த வித சலனத்தையும் ஏற்படுத்த முடியாத வலுவில்லாத அமைப்புகளாக உள்ளன.

இன்று இலங்கைத் தமிழ் மக்களுக்கு தேவை ஆயுதமல்ல. எங்கோ தொலை தூரம் சென்று விட்ட அமைதிதான். இந்த கால கட்டத்தில் ஆயுதத்தை தூக்கி எறிந்து விட்டு அரசியல் வழிமுறை மூலம் தமிழ் மக்களி சமூக ஒற்றுமை, பொருளாதார மேம்பாடு, மாமூல் வாழ்க்கை, கல்வி இவைகளை கருத்திற் கொண்டு செயல்படாமல் ஒதுங்கி விட்டால் மக்களுக்காக இயக்கங்கள் என்பது பொய்யாக்கப்பட்டு சமூக அந்நியமாதலுக்கு ஆளாகும் நிலைமையே நிச்சியம் நேரிடும். இதை அனைத்துப் போராளி அமைப்புகளும் கவனத்தில் கொள்ளா விட்டால் அவர்கள் மேற்கொண்ட லட்சியத்திற்கு அர்த்தமேயில்லை.

தமிழ்ப் போராளி அமைப்புகள் ஜனநாயக ரீதியாக தமது அரசியல் கருத்துக்களை முன்வைத்து, அவற்றைநிறைவேற்றிட கிடைத்த ஒரு அருமையான சந்தர்ப்பமே தமிழ் மாகாண தேர்தலாகும். போராளி அமைப்புகள் மக்களிடம் தமக்கு இருக்கும் ஆதரவை எடுத்துக் காட்டவும், மக்கள் தமது ஜனநாயக உரிமைகளை அனுபவிப்பதற்கும் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வது முக்கிய கடமையாகும். இலங்கைத் தமிழ் மக்கள் வாக்குச்சாவடிக்குச் செல்லக் கூட சுதந்திரமில்லாமல் வாழ்ந்தார்கள் என்று வரலாறு சொல்லக் கூடாது.

நாங்கள் தேர்தலில் பங்கெடுக்க மாட்டோம். பங்கெடுக்கிறவர்களையும் விடமாட்டோம் என்று LTTE எச்சரிக்கை செய்துள்ளது. வேட்பாளர்கள் சுட்டுக்கொல்லப்படுவார்கள், வாக்களிப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள். தேர்தல் அதிகாரிகள் ஒழிக்கப்படுவார்கள் என்றும் அது பிரகடனப்படுத்தியுள்ளது. ஆனால் இன்னொரு பக்கம் வடக்கு தமிழ்ப்பிரதேசத்தில் நவம்பர் - 19-ல் நடைபெற வேண்டிய தேர்தல் போட்டியின்றியே முடிந்துவிட்டது.

தற்போதைய தேர்தலானது தமிழ் பேசும் மக்கள் முன்னிலையில் மிகவும் வித்தியாசமானதும், மாற்றமடைந்ததுமான சூழ்நிலையில் வந்துள்ளது. அன்று தேர்தலில் ஈடுபட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியினர் போன்றவர்கள் பல வாக்குறுதிகளையும், நம்பிக்கைகளையும் கொடுத்து தனி நாடு என்ற சுலோகத்தையும் காட்டி வாக்குகளைக் கேட்டனர். ஆனால் இன்று பலவித நெருக்கடிகளையும், அச்சுறுத்தல்களையும் கொண்ட கொலைகள் உதிரும் காலச்சுழலில் ஜனநாயக மறுப்பு மேலோங்கி நிற்கும் நிலையில் இத்தேர்தல் வந்துள்ளது.

தற்போதையச் சூழலில் போராளி அமைப்புகள் தனி நாடு கேட்பதற்கான நிலைமையோ, இந்திய அமைதிப்படையுடன் போராடும் நிலைமையோ, இயக்கங்கள் ஒன்றையொன்று மோதிக் கொள்ளும் நிலைமையோ, துளியளவும் இல்லை. அமைதி ஜனநாயக முறை வோட்டா? தொடர்ந்து மக்கள் வாழ்க்கையை அலைக்கழித்து வரும் வோட்டா? என்று மக்கள் தீர்மானிக்கும் பட்சத்தில் ஜனநாயக முறையே தற்போது மக்கள் துயரை நீக்கச் சிறந்த வழி என்கின்ற கட்டாயச் சூழல் உள்ளது. மக்கள் சுதந்திரமாக தமது சுய விருப்பத்தின் பேரில் அமைக்கும் அரசு மூலம் தமது கருத்துக்களை தெரிவிக்கவும், பிரதிநிதிகளை தேர்வு செய்யவும், உரிமைகளைப் பெறவும் இத் தேர்தல் தக்க தருணத்தில் வந்திருக்கிறது.

தமிழ் மக்களுக்கு அரசியல் தலைமையும், அதிகாரப் பிரதிநிதித்துவமும், மாமூல் வாழ்க்கைத் திரும்புவதற்கான ஒரு அரசியல் வழிமுறையும், இந்த தேர்தல் மூலம் கிட்டுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. உண்மையில் அமைதியை விரும்புகிறவர்கள் மக்கள் நலனை மதிப்பவர்கள் இன்றுள்ள சூழ்நிலையில் தேர்தலை பயன்படுத்திக் கொள்வதே வீரமான — விவேக செயலாகும்.

தமிழ்ப்பகுதியில் போராளி அமைப்புகளில் முதன்மையானவைகளில் ஒன்றும், முக்கியமானதுமான EPRLF தமிழ் மாகாண தேர்தலை முழுமனதுடன் அங்கீகரித்து தேர்தலுக்கான அர்ப்பணிப்பில் ஈடுபட்டு வரு

படிப்பகம்

www.padippakam.com



கிறது மக்கள் நலன் எதுவாகயிருந்தாலும், அதற்கான அனைத்து தரப்பினருடன் ஒத்துழைக்கத் தயாராக உள்ளது.

நவம்பர் 19 தேதிய தேர்தலுக்கான ஆயத்தப்பணியில் இறங்கிய EPRLF வடக்குப் பகுதியில் போட்டியின்றி வெற்றி வாகையைச் சூடியுள்ளது. தேர்தல் பகிஷ்காரம் செய்த LTTEயின் நிர்ப்பந்தம் சற்று கூடுதலாக இருப்பதாக சித்தரிக்கப்பட்ட யாழ்ப்பகுதியில் தேர்தல் குறித்து வெறுப்பு இருப்பதாக சொல்ல முடியாது. ஏதோ பிரளயமே நடக்கப் போவதாய் வதந்திகள், வாயளப்புகள் பலவாறு வெளிக்கிளம்பிக் கொண்டிருந்தாலும் இதுவரை அமைதியின்மைக்கும், இரத்தக் களறிக்கும் இடமில்லாமல் இருப்பது உண்மையான மகிழ்ச்சிக்குரியது. மக்களுடைய அணுகுமுறையானது ஒரு பக்கத்தில் தேர்தலை விரும்புகிறவர்களாகவும், மற்றொரு பக்கத்தில் போராளி அமைப்புகள் தேர்தலில் ஈடுபட்டாலும், ஈடுபடாவிட்டாலும் தங்களுக்கு வேண்டியது அமைதியே என்பதாக உள்ளனர். மக்கள் மாமூல் வாழ்க்கையையே குறியாக கொண்டுள்ளனர்.

யாழ், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய இடங்களில் தேர்தல் போட்டியின்றி முடிந்து போனதால். தேர்தல் களத்தின் ஒரு பகுதி ஆரவாரம், அலைக்கழிப்பு இல்லாமல் அமைதி நிலவரத்தை வெளிக் காட்டியிருக்கிறது. EPRLF, ENDLFஐச் சேர்ந்த 36பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். போட்டியிருக்கும் கிழக்கு மாகாணங்களிலும் தன்னிகரற்ற கட்சியாக இருப்பது EPRLFதான். முஸ்லீம் காங்கிரஸ், U. N. P. போன்ற கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டாலும், களத்தில் இல்லை. வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு கொழும்பில் தங்கியுள்ளனர். EPRLFன் வெற்றி உறுதி செய்யப்பட்டதாகவே உள்ளது.

இலங்கை ராணுவத்தாலும்-சிங்கள இனவெறியாலும் நீண்ட கால துன்பத்தை அனுபவித்து வந்த கிழக்கு மக்கள் தங்களது அமைதியான வாழ்விற்காக, தங்களுக்குரிய பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதற்கு ஆவலாகவே உள்ளனர். விவசாயப் பெருங்குடி மக்களையும், கடல் பிரதேச மக்களையும், சிறு தொழில் செய்பவர்களையும் கொண்டுள்ள இப்பிரதேசம் தமிழ், சிங்கள. முஸ்லீம் மக்களும் வாழும் பகுதியாகும்.

தமிழ் நாட்டிலுள்ள சில பத்திரிகைகளும், சில கட்சிகளும் ஏதோ இலங்கைத் தமிழ் மக்கள் பெரும் கொந்தளிப்பில் இருப்பதாகவும்' தேர்தல் புறக்கணிப்பை மக்கள் செய்து விட்டதாகவும் வரிந்து கட்டி எழுதி வருகின்றன.

யாழிலும், வவுனியா, கிளிகொச்சி, முல்லைத் தீவு, மன்னார் ஆகிய இடங்களில் EPRLF-ன் கடும் முயற்சிகளினால் ஆக்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 7-ஆம் தேதி வேட்பு மனு தாக்கல் செய்துவிட்டு, போட்டியில்லாததால் 10-ஆம் தேதி மாகாண சபை மெம்பர்களாக EPRLF-வினர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன், வடபகுதி முழுவதும் தேர்தல் மற்றும் மக்கள் பணிக்கான அலுவலகங்களைத் திறந்து பொது மக்களுடன் இரண்டறக் கலந்துள்ளனர்.

தமிழ் மாகாண தேர்தலில் முதல் வெற்றி பெற்ற EPRLF முன்னணி தலைவர்களில் ஒருவரான பிரேமச்சந்திரன் தலைமையில் யாழில் EPRLF அணியினர் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கான ஆயத்தப் பணிகளில் ஆர்ப்பரித்து வருகின்றனர். வெகு காலமாக பொதுமக்களிடமிருந்து பிரிக்கப்பட்டுவிட்ட சிவில் நிர்வாகத்தை இணைப்பில் கொண்டு வருவதற்கும், போக்குவரத்து ஒழுங்கமைக்கப்பட்டு தொடர்புகள் புதுப்பிக்கப்படுவதற்கும். துண்டிக்கப்பட்ட மின் வசதிகள் மீண்டும் பெறுவதற்கும், கல்வி நிலையங்கள் திறக்கப்படுவதற்கும் பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிழக்குப் பகுதியில் விவசாயம், கடல் தொழில்கள், சிறு தொழில்கள், தனிநபர் வணிகம் அன்றாட வாழ்க்கைகளில் அரசியல், ஆயுத, இனவெறி துஷ்பிரயோகம் ஏதும் ஏற்படாதவாறு மிகுந்த அமைதி வேட்கையுடன் அளப்பரிய காரியங்கள் சிரமமேற்கொண்டு செய்யபட்டு வருகின்றன.

மட்டக்கிளப்பில் EPRLF-ன் முக்கிய தலைவரான கிருபா தலைமையிலும் திரிகோணமலை அம்பாறை பகுதிகளில் திருமலை பொறுப்பாளர் ஜார்ஜ் தலைமையிலும் தேர்தல் பணிகளும், மக்களை அமைதிவயப்படுத்தும் ஆயத்தப் பணிகளும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளது. கடந்த 29-ஆம் தேதியன்று ஜார்ஜ் இந்திய தொலைக் காட்சி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் மக்கள் பூரண அமைதியை விரும்புகிறார்கள் என்றும், தேர்தல் வேலைகள் மும்முரமாக நடைபெறுகிறது என்றும், தேர்தலுக்கு எதிரான எந்தவித எதிர் சக்தியையும் சமாளிக்க இருக்கிறோம் என்று கூறியுள்ளது தெம்பூட்டக் கூடியதாக உள்ளது.

அமைதி ஜனநாயகம், அய்க்கியம் இவைகள்தான் நாங்கள் அனைவர் முன்வைக்கும் கோஷம் என தன் அரசியல் வழிமுறையை உயர்த்திப் பிடிக்கும் EPRLF-ன் மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் இழந்த வாழ்வு புதுப்பிக்கப்பட இருக்கிறது.

இன்றைய இச்சூழலில்இலங்கை அரசை எதிர்ப்பவர்களும்-இந்திய அரசை எதிர்ப்பவர்களும் எத்தகைய குறிக்கோளை கொண்டிருக்கிறார்கள் என்பதை பாரபட்சம் ஊன்றி உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

தென்னிலங்கைப் பகுதியில் ஆளும் அரசுக்கு எதிரான போராட்டங்கள் சிங்கள இனவெறியை மையமாக வைத்து நடைபெறுகின்றன. ஆளும் U.N.Pயில் ஒரு பிரிவினர் J.V.P. சிரிமாவோ கட்சிகள் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை கிழித்தெறிந்துவிட்டு, தமிழர்களுக்கு குறைந்தபட்ச உரிமைகளைக்கூட விட்டுக் கொடுக்க முடியாதபடி அரசியல் லாபத்திற்காக இனவெறியைத் தூக்கிப் பிடித்துள்ளனர். இதில் விஜயரணதுங்கே கட்சி மட்டும் விதிவிலக்காகயிருந்து தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை அங்கீகரித்துள்ளது. இன்று ஆளும் அரசான U. N. Pயை எதிர்க்கிறவர்கள் நடைமுறை அரசுத் தன்மையைக் கொண்ட மற்றொரு அரசாக மலருவதற்கே துடித்துக் கொண்டிருக்கின்றனர்.

அதே சமயம் வடகிழக்கு மாகாணங்கள் ஆன தமிழ்ப் பகுதியில் மக்கள் சார்பில செயல்படுகிறோம் என்று கூறிக்கொண்டு

படிப்பகம்

www.padippakam.com





# சோவியத் சமூகத்தின் இன்றைய தேடல்கள்

சுகு

சோவியத் சமுதாயத்தின் இன்றைய தேடல்களை நாம் புரிந்து கொள்ள, அதன் வரலாற்றுப் பரிணாமத்தின் நான்கு கட்டங்களை அறிந்து கொள்ளுதல் அவசியம்.

- இந்த நூற்றாண்டின் தொடக்கம் முதல் அக்டோபர் புரட்சி வரையிலான கால கட்டம்.
- சோசலிச அமைப்புப் பணிகளின் ஆரம்பமும்—இட்லரின் பாசிசத்திற்கெதிரான இரண்டாம் உலகப் போர்க் காலமும்.
- உலகப் பெரும் போருக்குப் பின் — சமாதான சகவாழ்வுக் கருத்துகள் மேலோங்கிய ஆண்டுகள்
- 70 வருடங்கள் சோசலிச வளர்ச்சிக்குப் பிறகு, புதிய தேவைகளைக் கருத்துற் கொண்டு முன் செல்லும் தற்காலம்.

## அக்டேபர் புரட்சி வரையிலான காலப் பகுதி:

''பாசிபடிந்த பழைய மரப் பெட்டியினுள்ளே, நிலத்தின் ஆழததில் புதைபட்ட நிலையிலே அன்றைய தேசம் இருந்தது'' என்று புரட்சிக்கு முன்பிருந்த பிற்பட்ட ஜார் ரஷ்யா குறித்து லியோன் டிராட்ஸ்கி குறிப்பிட்டார்.

வளர்ச்சி பெற்ற முதலாளிய நாடுகளான. ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் ஆகியவைமேலாதிக்க வல்லரசுகளாகி சந்தைகளுக்காகவும் மூலதன ஏற்றுமதிக்காகவும் உலகைத் துண்டாடி, தமக்குள் பங்குபோட்டுக் கொள்ளத் தயாராகின. இப்படிப்பட்ட நிலைமையில், ஜார்மன்னராட்சியின் நிலப்பிரபுத்துவத் தளைகளால் கட்டுண்டிருந்த இரஷ்யா, இவற்றுக்கிடையே முன்னேறப் போட்டியிட்டது.

1950 ல், ஏதேச்சதிகார ஆட்சியை எதிர்த்து, பெத்ரோகிராட் தொழிலாளர்கள் போராடிய வேளையில், அவர்கள் மேற்கத்திய, நாடுகளைப் போன்ற ஒரு பாராளுமன்ற 'டுமா' அமைப்பையே எதிர் நோக்கினர். ஆயினும், பல்வேறு எழுச்சிகளையும், கடுமையான வீழ்ச்சிகளையும் சந்தித்த பிறகு, 1917 ல் உலகில் முதன் முறையாக, உழைப்பாளிகள்-விவசாயிகள்-படையாட்களின் புரட்சிகர சோவியத் அரசு நிறுவப பட்டது.

மக்கள் எழுச்சிகளை நசுக்கியொழித்திட, சதிச்செயல்கள் புரிந்த, கிறித்தவ மத சபைகள் பெரும் தடைகளாக முன் நின்று, எதிர்ப்புரட்சி வேலைகளில் ஈடுபட்டன.

அது மட்டுமல்லாது, புரட்சியின் வெற்றியால் அச்சமுற்ற ஏகாதிபத்தியங்கள், வீழ்த்தப்பட்ட இரஷ்ய பிற்போக்காளர்களுக்கு, புத்துயிருட்ட முயற்சித்தன. ஆயினும், அத்தகைய வல்லரசுகளுக்கிடையிலான பொருளாதாரப் போட்டிகளும், அந்த நாடுகளைச் சார்ந்த தொழிலாளர்களின் எழுச்சிகளும், கீழைக் காலனிகளின் தேசவிடுதலைப் போராட்டங்களும், இவையனைத்துக்கும் மேலாக சோவியத் பாட்டாளி மக்களின் உறுதி மிக்க போர்க் குணமும், அதிகார வெறி கொண்ட பிற்போக்காளர்களைத் தோற்கடித்து, உழைப்பாளர் அரசை உறுதிப் படுத்தின.

பண்ணையடிமை முறையின் தளைகள், பணக்கார நிலப்பிரபுகளின் பொய்ப் பிரச்சாரமாயைகள் இவற்றிலிருந்து லட்சோப லட்சம் வறிய உழவர்களை விடுவிக்கவும், விவசாயிகள்-தொழிலாளர்

படிப்பகம்

www.padippakam.com



நேசக் கூட்டை வலுப்படுத்தவும், அரசியல் போராட்டம் நடத்துவது அவசியமாயிருந்தது. உணவு தானியப் பதுக்கல்களை முறியடித்து நிலங்களைப் பகிர்ந்தளிப்பதை முறைப்படுத்தி, சுயவிருப்பத்தின் அடிப்படையின் விவசாயிகளை ஒருங்கிணைத்து கூட்டுறவுப் பண்ணைகளை உருவாக்கும் மாபெரும் பணிகளை போல்ஷ்விக் புரட்சியாளர்கள் குறுகிய காலத்துள் நிறைவேற்றினர், இதற்கிடையே அன்னிய வஞ்சக சக்திகளின் ஆதரவுடன் நாடெங்கும் கொடுஞ்செயல்கள் புரிந்து திரிந்து வந்த புரட்சியின எதிரிகளை அழித்தொழுக்கும் கடமையையும் அவர்கள் மேற்கொண்டனர். முன்னேற்றத் திட்டங்கள் நிறைவேற, பரந்த தேசமெங்கும் மின்மயாக்குதல் மிகவும் தேவை என்பதை லெனின் வலியுறுத்தினார். இப்படியாக ஆக்கப பணிகளில் அக்கறை செலுத்தி உழைத்து வந்த சோவியத் மக்கள் மீது, ஆதிக்க வெறி கொண்ட ஜெர்மன் வல்லரசு போரைத் திணிக்க முயன்றது. அதைத் தவிர்க்கும் பொருட்டு, டிராட்ஸ்கி போன்றோரின் தப்பெண்ண எதிர்ப்புகளையும் மீறி, ஜெர்மனியுடன் ஒரு சமாதான ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது.

தேசிய இனத் தப்பெண்ணங்களைப் போக்குதலும், எல்லா இனங்களின சுயமான வளர்ச்சிக்காகத் திட்டமிடலும், சுயநிர்ணய உரிமை பற்றிய சரியான அறிவைப் பயிற்றுவித்து நடைமுறைப் படுத்துதலும ஆகியசாதனைகள் செயலாகின. இத்தகைய பல உள்நாட்டுப் பணிகளுக்கிடையே, மேலை நாட்டு உழைப்பாளி மக்களும், கிழக்கத்திய தேசங்களின விடுதலை இயக்கங்களும் ஒன்றுபட்டு முன்னேற சோவியத் பாடுபட்டது. உலகின் முதலாவது சோசலிசப் புரட்சியின் வெற்றியால் கிடைத்த, சித்தாந்த, அரசியல், கோட்பாட்டு, நடைமுறைச் செலவங்கள், பின்னர் புரட்சிகர எழுச்சிகள் நடந்த நாடுகளில் அந்தந்தச் சூழல்களுக்கேற்ற வகையில் பொருத்தப் பட்டு செயல் வடிவம் பெற்றன.

## சோசலிசக் கட்டமைப்பும், இட்லர் பாசிச எதிர்ப்புப் போரும்

புரட்சியின் வெற்றியைப் பாதுகாத்து, முன்னெடுத்துச் செல்வதும், உலகின் பிற பகுதிகளில் சமூகப் புரட்சிக்கான முன் முயற்சிகளின் வளர்ச்சியில் உதவுவதும் சோவியத் ஒன்றியத்தின் கடமையாகியது. 'ஆற்றலுக் கேற்ற உழைப்பு, உழைப்புக்குத் தக்க ஊதியம்' என்ற முழக்கத்தின் வழியில்' தொழில் விவசாயத் துறைகள் ஒருங்கிணைத்து வளர்க்கப்பட்டன. நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் குறிப்பிட்ட கால வரையறைக்குள் எய்தப்பட்டன.

உலகின் முதல் சோசலிசக் குடியரசைச் சின்னா பின்னமாக்க, வல்லரசு ஓநாய்கள் வெறி கொண்டலைந்ததால், அக்காலத்தில் அரசதிகாரங்கள் அனைத்தும் மிக வலுவாக மையப்படுத்தப்பட்ட அரசிடமே இருந்தன. மக்கள் தமது சொந்த நலன்களை அதிகம் இழக்க நேரிட்டது. ஏகாதிபத்திய சதிகளும் நாச வேலைகளும் அதிகரித்த காரணத்தால், சோவியத் உளவு அமைப்புகள் பலப்படுத்தப் பட்டதோடு, கட்சிக்குள்ளும் தவிர்க்க முடியாதபடி களையெடுப்புகள் நடந்தன.

போர்வெறி கொண்ட ஜெர்மனி, சோவியத் யூனியனைத் தாக்கியழிக்குமென பிற வல்லரசுகள் எதிர்பார்த்துக் காத்திருந்தன. இரண்டாம உலகப் போரின் அறிகுறிகள் அதிகமாயின. ஆசியாவில் இந்தியாவிலும், சீனாவிலும் தேசிய சமூக விடுதலைக்கான போராட்டங்கள் உக்கிரமடைந்தன. மறுபுறத்தில் ஜப்பானிய இராணுவ சர்க்கார் ஜெர்மனி - இத்தாலியுடன் சேர்ந்து கொண்டது. சீனா, இத்தாலி, ஜெர்மனி மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், பொதுவுடைமைப் புரட்சியாளர்கள் மிருகத்தனமாக வேட்டையாடப்பட்டனர்.

உலக ஆளுமை வெறி கொண்ட ஜெர்மனி, தங்களுக்கு பேராபத்தாக மாறுவதைக் கண்ட அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் நாடுகள் வேறு வழியின்றி சோவியத்துடன் அணி சேர முன் வந்தன. உலகப் பாட்டாளிகளின் ஒரே நம்பிக்கை நட்சத்திரமான சோவியத் ஒன்றியத்தை பாசிச ஜெர்மனியின் படையெடுப்பினின்று காப்பது ஒடுக்கப்பட்ட நாடுகளின் விடுதலைக்கும் அவசியமாயிருந்தது. கடுமையான பல கட்டுப்பாடுகளும், தன்னல மறுப்பும், பேருழைப்பும், $1\frac{1}{2}$ கோடி மக்களின் உயிர்த்தியாகமும் தேச விடுதலைப் போரில் அர்ப்பணிக்கப் பட்டன. இதனால் வல்லரசுகள் இரும்புத்திரை நாடு என்று இழித்துரைக்கலாயினர்."

இப்படிப்பட்ட நிலைமைகளில், 1920 களின் தொடக்கம் முதல் அரசமைப்பில் அதிகாரத்துவ உணர்வுகள் தலையெடுப்பதும், களையெடுப்புகளில் சில தவறுகள் நிகழ்வதும் தவிர்க்க இயலாது போயின. இக்கால கட்டத்தில் இத்தகைய ஒரு, மையப்பட்ட அரசு வடிவம் இல்லாது போயிருக்குமானால், இட்லரின் 'நாஜி'க்கும்பலை வீழ்த்துவதும், கிழக்கு ஐரோப்பிய சமூக மாற்றங்களையும், சீனப் புரட்சியை வெற்றிகரமாக்குவதும் சாதிக்க இயலாது போயிருக்கும். பல தேசவிடுதலை இயக்கங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கும். சோவியத் குடியரசு அழிக்கப்பட்டு, உழைக்கும் மக்களின் ஆட்சி, கற்பனை, கேலிக் கூத்து என்ற பிற்போக்காளர்களின் தத்துவமே பெருவெற்றி பெற்றிருக்கும். ''மாமனிதர் என்பவர் மற்றெல்லாரையும் விட அதிக தொலை நோக்குடன் எதிர்காலத்தைக் கணிப்பவராயிருக்க வேண்டும்' என்ற பிளக்கனோவின் கூற்றுப்படி, ஸ்டாலின் அக்கால கட்டத்தில் ஒரு மாபெரும் மனிதராக விளங்கனார் என்ற உண்மை வெறும் தனிநபர் வழிபாடல்ல.

## சமாதான சகவாழ்வு

இரண்டாம் உலகப் பெரும் போரின் முடிவில், ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகியில் அணுகுண்டுகளைப் போட்டு தனது வல்லமையை அமெரிக்கா நிலை நிறுத்த முயற்சித்தது. உலக

படிப்பகம்

www.padippakam.com



மக்களின் நலவாழ்வுக்கு ஒரு புதிய பகையாக அணுவாயுத அச்சுறுத்தல் உருவெடுத்த நிலையில், சோசலிசமல்லாத மேற்கத்திய நாடுகளுடன் சோவியத் ஒன்றியம், சமாதான சகவாழ்வுக் கொள்கையைக் கடைப்பிடித்தது. அவசியமற்ற போர்களைத் தவிர்க்கவும் வளரும் நாடுகளை பாதுகாக்கவும், பஞ்சசீலக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பண்டுங் மாநாடு கூட்டப்பட்டது. உலகின் பெரும்பாலான நாடுகள் அணுப் போருக்கெதிராக கருத்தளவில் ஒன்றுபட்டன. பல மேற்கத்திய தேசங்களில் உலக சமாதானத்திற்கான மக்கள் இயக்கங்களும் தோன்றி வளர்ந்தன. ஆனால் மேலாதிக்கவல்லரசுகள், தரை கடல், அண்டவெளியெங்கும் படைக்கலங்களைக் குவித்ததோடு, புதிய இரசாயன ஆயுதங்கள், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள், மனிதர்களை மட்டும் அழித்தொழிக்கின்ற நியூட்ரான் குண்டுகள் போன்றவற்றை பெருமளவு உற்பத்தி செய்து விற்கத் தொடங்கின.

இத்தகைய அச்சுறுத்தல்களால், சமாதானத்திற்காக உலக மக்களின் ஆதரவைத் திரட்டி, ஆயுதக் குறைப்புக்காகப் போராடி வந்த சோவியத், மிருகத்தனமான ஏகாதிபத்திய போர் வெறியைக் கட்டுப்படுத்த ஆயுத சமபல நிலையில் இருக்க வேண்டிய கட்டாயத்திற்குள்ளானது.

ஸ்டாலின் சகாப்தத்தில் இருந்தது போன்ற மிக நெருக்கடியான நிலைமைகள் இல்லாததாலும், சமுதாய அக வளர்ச்சியின் தேவைகளாலும், மிக மையப் படுத்தப்பட்ட அரசின் கட்டமைப்பில் தளர்வுகள் தேவைப்பட்டன. ஆனால் அதை வலியுறுத்தும் வேளையில், ஸ்டாலின் காலத்தில் நிகழ்ந்தகளை யெடுப்பின் போது திட்டமிட்டு வேண்டுமென்றே பலரைப் பழி வாங்கியது போலவும், மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும் தனிநபர் துதி, அராஜக அதிகாரத்துவம் மேலோங்கியிருந்ததாகவும் கருத்துகள் தோன்றின. செஞ்சதுக்கத்தில் லெனின் சமாதிக்கு அருகில் மலர்த்தப்பட்டிருந்த ஸ்டாலின் உடலை பொது மயானத்திற்கு அப்புறப் படுத்தினார்கள். ஸ்டாலின் காலத்திய மையப்படுத்தப்பட்ட, கட்டுப்பாடுகள் மிகுந்த நிர்வாக அமைப்பு, பிற்காலத்தில் அவசியமற்ற அதிகாரக் குவிப்பாக மாறியது. ஸ்டாலினின் தனிப்பட்ட தவறாக விமர்சிக்கப்பட்டது, நியாயமற்றது

இரண்டாம் உலகப் போரின் போதும் பின்னரும் கிழக்கு ஐரோப்பாவின் பல்கேரியா, ருமேனியா, ஹங்கேரி, போலந்து, செக்கோஸ்லாவாகியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு சோவியத் படைகளின் தலையீடு தேவையாக இருந்தது. அப்போது விடுதலையடைந்த தேசிய அரசுகள் ஜனநாயகப்புரட்சியை நோக்கி முன்னேறவும், ஏகாதிபத்திய வலைகளில் விழாதிருக்கவும், தொழில் நுட்ப, பொருளாதார உதவிகள் தேவைப்பட்டன. 1968ல் செக் நாட்டில் ஏற்பட்ட எதிர்ப் புரட்சியை அடக்க, சோவியத் படைகள் சென்றன.

ஆனால், போலந்தின் உள்நாட்டு நிலைகளில் போதிய கவனம் செலுத்தாது, சோவியத்திலிருந்து பெற்ற ஆலோசனைகளின் அடிப்படையில் மட்டும் செயல்பட்ட, ஜெருசெல்ஸ்கி அரசு தொழிலாளர்களின் அதிருப்திக்காளானது.

ஆசியா, இலத்தின் அமெரிக்கா, ஆப்பிரிக்காவில் எழுந்த தேச விடுதலை மற்றும் சமூகப் புரட்சிக்கான போராட்டங்களுக்கு, அரசியல், ஆயுத, பொருளாதார, ஒத்துழைப்புகளைத் தந்த போதிலும், மூன்றாம் உலக நாடுகளில் பூர்வமாக சோசலிசப் புரட்சியை நோக்கிச் செல்ல முடியுமென்ற 22வது கட்சி மாநாட்டின் முடிவு, சமூகப் புரட்சி, விடுதலை இயக்கம் பற்றிய தவறான சித்தாந்த நிலைபாடாக உள்ளது. இத்தகைய மாற்றங்கள் யாவும் 1960 களின் இறுதியிலிருந்து 70 களின் இறுதி வரையில், குருசேவ்-பிரஸ்னேவ் காலத்தைச் சேர்ந்தவையாகும்.

ஆப்கானிஸ்தானுக்கு சோவியத் படைகள் அனுப்பப்பட்டதும், அங்கோலா ஜனநாயகப் புரட்சி அரசைப் பாதுகாக்க கியூபா படைகள் சென்றதும், கம்பூச்சியாவில் பொல்பாட் கும்பலை விரட்ட வியட்நாம் படைகள் சென்றதும், சிரியப்படைகள் லெபனானுக்கும், இந்தியப் படைகள் முறையே வங்காள தேசத்திற்கும் இலங்கைக்கும் அனுப்பப்பட்டதும் சோவியத் மற்றும் சோவியத் சார்பு நாடுகளின் படை நடவடிக்கைகளாகும். இவை யாவும் அந்தந்த நாடுகளின் சூழ்நிலைகளை ஒட்டி, இத்தகைய நடவடிக்கைகள் ஏற்படுத்திய சாதக பாதகங்கள் திறந்த மனதுடன் ஆராயப் பட வேண்டும். அத்துடன் இராணுவ நெருக்கடிகளின் அடிப்படையில் பதவிக்கு வந்த எத்தியோப்பியா, ஆப்கன் அரசுகள், சோவியத் சார்பு நிலையைமேற்கொண்டதால் அவை சமூகப் புரட்சி நடந்த நாடுகளாகச் சித்தரிக்கப்பட்டதும் கவனமாக ஆய்வு நடத்தப்பட வேண்டிய நடைமுறைகளாகும். ஏகாதிபத்திய வல்லரசுகளுக்கு எதிராக உலக மக்களை ஒன்று படுத்துவது அவசியமே அதற்காக மக்கள் அங்கீகாரம் பெறாத அரசுகளை முற்போக்கானவையாகச் சித்தரிப்பது தவறுதலான வழி காட்டுதலாகும். பிலிப்பைன்சில் மக்களால் தூக்கியெறிப்படும் தறுவாயிலிருந்த மார்க்கோசின் அரசாங்கத்தை ஆதரித்ததும் இந்தப் பிழையான பாதையின் பாற்பட்டதேயாகும்.

## தற்கால நிலைமை

சோசலிச சோவியத் குடியரசுக்கு ஆபத்துகள் அதிகம் இருந்த ஸ்டாலின் சகாப்தத்தில், பொருளாதார நடவடிக்கைகள் முதல் இலக்கிய வெளியீடுகள் வரை அனைத்தும் கட்டுப்படுத்தப்பட்டு, கண்காணிப்புக்குள்ளாகியிருந்தமையால் சுதந்திரத்திற்கான உணர்வு மக்களிடம் மேலோங்கியிருந்தது.

கோர்பச்சேவின் தற்போதைய சீரமைப்பு புதிய சூழ்நிலைகளுக்கேற்றார்போல் இயன்றவரை தீர்வுகளை முன்வைத்துள்ளது. சமூக அமைப்பில் பல புரட்சிகர மாற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன. பொருளாதாரத்துறையில் பாதுகாப்பு, கனரகத் தொழில்களைத் தவிர ஏனைய 70%

படிப்பகம்

www.padippakam.com



தொழிற்சாலைகள் தொழிலாளர்களின் சுயமான நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றன. அவ்வாறே கூட்டுறவு நிறுவனங்கள் உற்பத்தியாளர் குழுக்களின் சுதந்திரமான ஆளுகையில் விடப்பட்டுள்ளன. கம்யூனிசத்தை நோக்கிய சோவியத்தின் மாற்றப்போக்கில் அரசு உலர்ந்து உதிர்வதற்கும், இத்தகைய நடவடிக்கைகளுக்கும் உள்ள தொடர்பு கவனத்திற்குரியது. இன்று அந்நாட்டின் பொருளாதார அரசியல் மாற்றங்கள் பற்றி தொழிலாளர்கள் மாணவர்கள். விவசாயிகள், தொழில்நுட்ப வல்லுநர்கள், அறிவு ஜீவிகள் ஆகிய அனைத்து மக்கள் பகுதியினரும் தத்தம் அமைப்புகளில் விவாதிக்கிறார்கள். முன்பு மையப்படுத்தப்பட்ட விஷயங்களாக இருந்தவை தற்போது பரவலாக ஜனநாயக நெறிமுறைகளுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

ஆப்கன் படைவிலகல், கம்பூச்சியாவில் படைவிலக்கும் முயற்சிகள் மற்றும் பிற நாடுகளின் உள்விவகாரத் தலையீடு பற்றிய மறுபரிசீலனை ஆகியவை உள்ளமைப்பில் மட்டுமல்லாது உலகக் கண்ணோட்டத்திலும் மறுசீரமைப்பைக்காட்டுகிறது.

நடுத்தர ஏவுகணைகளை கிழக்கு ஐரோப்பாவிலிருந்து அப்புறப்படுத்தியதும், அணு வெடிப்புச் சோதனைகளை நிறுத்தி வைத்ததும், பாதுகாப்புச் செலவுகளைக் குறைத்து ஆக்கப்பணிகள் அதிகரிக்க வழிவகுத்ததும், காகித ஒப்பந்தங்களுக்கப்பால் ஓரடி முன்னேறிய செயலே. குருச்சேவ் காலத்தைத்தொடர்ந்து பாதிக்கப்பட்டசோவியத் சீன உறவுகளைச் சீரமைக்க பாடுபடுவது உலகின் புரட்சிகர, ஜனநாயக சமாதான சக்திகளுக்கு, புது நம்பிக்கையூட்டுவதாகும்.

தமது ஆயுட் காலம் முழுவதும் பதவிகளை அலங்கரிக்கும் கட்சி உறுப்பினர்களின் அதிகார முறையை உடைத்தெறிந்ததும், தேர்தல்கள் மூலம் மீண்டும் தெரிவு செய்யப்படுவதற்கான காலவரம்பை நிர்ணயித்ததும், தொழிற்சங்கங்கள் சுயமாகச் செயலாற்ற அனுமதித்ததும் உள் நாட்டு நிலைகளில் காலத்திற்கேற்ப செய்யப்பட்ட மாறுதல்கள், அவ்வாறே, சோவியத் சமூகத்தின் வளர்ச்சிக்கும், ஊறு விளைவிக்காத வரையில் மத சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளது. இளைய தலைமுறையில் பெரும்பான்மையோர் அறிவியல் சிந்தனை பெற்ற மத நம்பிக்கையற்றவர்களே, அத்தோடு பகிரங்கப்படுத்தல், வாதப் பிரதி வாதங்கள், விமர்சனங்களுக்கும் இப்போது இடமளிக்கப்பட்டுள்ளது.

தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை, வளர்ச்சி பற்றிய கருத்துகள், பல நடைமுறை அனுபவங்களால் மீண்டும் செழுமைப்பட்டு வருகின்றன.

சோவியத் சமூகத்தில் தீர்க்கப்படாத பிரச்சினைகளும் முரணான போக்குகளும் இல்லாமல் இல்லை, ஆயினும் இவற்றைக் கொண்டே அந்நாட்டில் திரிபுவாதம் முதலாளித்துவ மீட்பு நடத்துவதாகக் கூறுவதும், கட்சிக்கும், அரசுக்கும் இடையிலுள்ள உறவினால் அதிகாரத்துவ அமைப்பொன்று வளர்ந்து ஆதிக்கம் பெற்று விட்டதாகக் கூறுவதும் அறிவியல் முறைக்குப் பொருந்துவதாக இருக்க முடியாது. 70 ஆண்டு கால சோசலிச வளர்ச்சியின் வரலாற்றுத் தேவையாக எழுந்துள்ள இப்புதிய நிலையை சரியான கண்ணோட்டத்தில் பகுத்தாய்ந்து அதன் மூலம், உலகளாவிய மானுட விடுதலை என்னும் உன்னத லட்சியம் சாதிக்கப்படும் வேளை வெகுதொலைவில்லை. □

# கவிதைகள்

தமிழில் : இந்திரன்

## இந்திய அறிவு ஜீவிகளின் வாக்குமூலம்

நாங்கள் கோழைகள்
ஒப்புக் கொள்கிறோம்
வானத்திற்கு எங்களைத்
தூக்கிக் கொண்டு போங்கள்.
அங்கிருந்து பாதாளத்துக்குத்
தூக்கி எறியுங்கள்
கைகள், கண்கள், செவிகள்,
உதடுகள் இவை இருந்தாலும்
சரி

அக்கறை இல்லை
எங்களது ஒரே ஒரு வேண்டு
கோள்:

எங்கள் முதுகெலும்பு
உடைந்து போகக் கூடாது
மேலும்
ஊர்ந்து போகும் பழக்கத்தை
எங்களால்
விட்டுவிட முடியாது.

## இனி ...

நீ
மௌனமாய் இராதே!
மெள்ளப் பேசாதே!
இவர்களின் செவிப்பறை
இரும்பாலானது.
நீ
பணிந்து போகாதே!
பயங்கொள்ளாதே!
குதிரையேற்றம் இவர்களது
குதூகல விளையாட்டு
நீ
கண்களைத் தாழ்த்தாதே!
கைகட்டி நிற்காதே!
அடிமை வாணிபம்
ஆரம்பமாகிவிடும்
எழு!
நிலத்திற்கு மேலே
நீலவான் வரையும்
விசுவரூபம் எடு!
இனி ... ...
நீ ... நீயாகு!

— கோமகன்

படிப்பகம்

www.padippakam.com





# மானிஷாவின்

# சாகச அறைகூவல்

- பெண்களிடம் வம்பு செய்யும் ஆண்கள் கோழைகள்.
- அவர்களை துணிச்சலுடன் எதிர்த்து, போரிட வேண்டும்.
- தாழ்வு மனப்பான்மையை விட்டொழித்து துணிந்து செயல்பட வேண்டும்.

மாறுபட்ட வாழ்க்கைக்கோ தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பயிற்சிக்கோ பெண்களை நம் சமுதாயம் ஒருபோதும் தயார் செய்வதில்லை. வீட்டிலோ, வெளியிலோ ஆண்களால் இழைக்கப்படும் அத்துமீறிலேயே உயிர் விட்டுவிட வேண்டும் அல்லது அவமானம் தாங்காமல் தற்கொலை செய்துகொள்ள வேண்டும். இதுதான் காலம் காலமாக பெண்களுக்கான நிலைமை. ஆணாதிக்க இச்சமுதாய மனோபாவம் பெண்களை அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்கிற பசப்பு அணிகலன்களை அணிவித்துக்கொண்டே ஏமாற்றி வருகிறது. பெண்களின் உழைப்பையும், உடலையும் சுரண்டிக் கொள்கிறது.

எங்கிருந்தாலும் பெண்கள் ஆண்களின் ஆதிக்க வசதிக்காக சாவிகொடுத்த பொம்மைகளாக, மூளையை கசக்கிக் கொள்ளாமல் ஆணுக்காக இயங்குவதற்கெனவே கற்பிக்கப்படுகிறார்கள்; வழக்கப்பட்டிருக்கிறார்கள், ஆணாதிக்கப் பசிக்கே இரையாகிப் போகிறார்கள்.

தரும தேவதைகள், அன்னபூரணிகள், கிருகலட்சுமிகள், அழகு தேவதைகள் இந்த அடைமொழிகளின் ஊன்றுகோல்கள் இல்லாமல், பெண்கள் நடக்க முடியாதவாறு பெண்களை ஆணாதிக்க சமுதாயம், பெண்களுக்கு மானுட ஜென்மம் என்கிற நினைப்பு வரவிடாமல் தங்களின் கைப்பொம்மைகளாக முடமாக்கிவிட்டது.

வீரம், விவேகம், மனித ஆற்றல், இவைகள் பெண்களுக்கு முடியாத-வேண்டாத விஷயமாகவே முன்னுரையும்-முடிவுரையும் இன்றுவரை எழுதிக் கொண்டிருக்கும் ஆணாதிக்க சமுதாயம், தன் அத்துமீறலைமிக எளிதாகவும், மிக இயல்பாகவும் செலுத்தி பெண்களை அனுபவிக்கும் ஆக்ரமிக்கும் ஆண்டாண்டுக்கால அத்தியாயம் அசைய தொடங்கிவிட்டது. பெண்கள் ஆண்களுக்கு எந்தவிதத்திலும் சளைத்தவர்களல்ல என்பதற்கான நிரூபணங்கள் நிமிர்ந்து நடைபோட ஆரம்பித்து விட்டன.

இதோ! மானிஷா என்கின்ற வீரப் பெண்ணின் செய்தை நம்மை மெய் சிலிர்க்க வைத்து உள்ளத்தையும், எதிர்காலத்தையும் ஆனந்தம் படைவைக்கிறது.

டெல்லியில் பஸ் பயணம் என்றாலே பெண்களுக்கு கொடுமையிலும் கொடுமை தான். வக்கிரப் புத்தியுள்ள ஆண் அசிங்கங்களின் கேலி, கிண்டல், உரசல், கிள்ளல், மோதல் இவைகளிலிருந்து எந்தப் பெண்களும் தப்பிக்க முடியாது. இது டெல்லியில் போக்குவரத்து உண்டான காலத்திலிருந்தே அன்றாட நிகழ்ச்சி. இந்த நிலையில் ஆகஸ்ட் 14ஆம் தேதி டெல்லி இந்திரா பிரஸ்தா கல்லூரி மாணவி மானிஷா வர்மாவுக்கு பஸ் பயணம் பயங்கரமான அனுபவமாகவும், சவாலை சமாளிக்கும் திருநாளாகவும் அமைந்தது.

மானிஷா கல்லூரிக்குச் செல்ல பஸ்ஸுக்காக காத்துக் கொண்டிருக்கும் போது ரூட் நம்பர் போடாமல் ஒரு பஸ் (டெப்போவுக்கு செல்ல வேண்டியது) வந்து நின்றது. இந்த பஸ் I. P. காலேஜ் சொல்லுமா என்று கண்டக்டரிடம் மானிஷா கேட்டதற்கு, கண்டக்டர் போகும் என்று பொய் சொல்ல மானிஷா பஸ்ஸில் ஏறிவிட்டார்: பஸ்ஸில் டிரைவர் கண்டக்டர் தவிர 3 போக்குவரத்து ஊழியர்கள் மட்டுமே இருந்திருக்கின்றனர். பயணிகளே

படிப்பகம்

www.padippakam.com






யாருமில்லாததால் மானிஷா வுக்கு ஒருவிதமான நெருடல் ஏற்பட்டிருக்கிறது. இருப்பினும் அவர் அசாதாரண சூழ்நிலை யாக கருதிக் கொள்ளவில்லை.

சில நிமிடங்களில் கண்டக் டரிடம் I. P. காலேஜீக்கு டிக் கெட் கேட்டு காசை கொடுக்க கண்டக்டர் மானிஷாவின் கையை இறுகிப் பிடித்திருக் கிறான். அதிர்ச்சியடைந்த மானிஷா கண்டக்டரை தள்ளி விட்டு பின் வாங்கியிருக்கிறார். அப்பொழுது மற்ற மூவரும் அசிங்கமான வார்த்தைகயைப் பேசி மானிஷாவை நெருங்கி யிருக்கின்றனர். . அவர்கள் தன்னை கற்பழிக்கத்தான் முயலுகிறார்கள் என்பதை அறிந்து கொண்ட மானிஷா எதிர்த்து சண்டையிடுவது; சண்டையிட்டு செத்தாலும் பரவாயில்லை என்று முடிவு செய்து, தன் பலம் முழுவதை யும் திரட்டி அவர்கள் மீது மூக் கிலும், முகத்திலும் மற்றும் சில முக்கியமான இடங்களிலும் கடுமையான தாக்குதலை கொடுத்திருக்கிறார்.

அவர்கள் தடுமாறிய நேரத் தைப் பயன்படுத்திக் கொண்டு, வாசற்படியிற் மறைத்துக் கொண்டு நின்றிருந்த கண்டக் டரையும் சேர்த்து இழுத்துக் கொண்டு வெளியே குதித்திருக் கிறார். சமயோசிதமாகவும், சீக்கிரமாகவும் முடிவெடுத்த அவரது அறிவாற்றலும், ' மன தைரியமும்தான் மானிஷாவை அந்த முரடர்களிடமிருந்து காப்பாற்றியது.

"நாம் துணிந்து செயல்பட வேண்டும். பெண்களிடம் வம்பு செய்பவர்கள் கோழைகள். அவர்களை துணிச்சலுடன் எதிர்க்க வேண்டும்; போரிட வேண்டும் என்பதுதான் மானிஷாவின் இன்றைய அறைகூவலாகும்.

பாரதிதாசன்

பேரன்பு கொண்டவரே, பெரியோ ரேயென்
பெற்றதாய் மாரே நல் லிளஞ்சிங் கங்காள்!
நீரோடை நிலங்கிழிக்க நெடும ரங்கள்
நிறைந்துபெரும் காடாக்கப் பெருவி எங்கு

நேரோடி வாழ்ந்திருக்கப் பருக்கைக்கல்லின்
நெடுங்குன் றில் பிலஞ்சேரப் பாம்புக் கூட்டம்
போராடும் பாழ்நிலத்தை யந்த நாளில்
புதுக்கியவர் யாரழகு நகருண் டாக்கி?

சிற்றூறும் வரப்பெடுத்த வயலுமாறு
தேக்கியநல் வாய்க்காலும் வகைப்படுத்தி
நெற்சேர வுழுதுழுது பயன்விளைக்கும்
நியையுழைப்புத் தோள்களெலா மெவரின் றோள்கள்?

கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டி
கருவியெலாஞ் செய்துதந்த கைதான் யார்கை?
பொற்களைக் கடல்முத்தை மணிக்கு லத்தைப்
போயெடுக்க வடக்கியமூச் செவரின் மூச்சு?

அக்கால வுலகிருட்டைத் தலை கீழாக்கி
அழகியதாய் வசதியதாய் செய்து தந்ததார்
இக்கால நால்வருண மன்றி ருந்தா
லிருட்டுக்கு முன்னேற்ற மாவதன்றி

புக்காபய னுண்டாமோ? பொழுது தோறும்
புனலுக்கு மணலுக்குஞ் சேற்றினுக்கும்
கக்கும்விடப் பாம்பினுக்கும் பிலத்தினுக்கும்
கடும்பசிக்கும் மிடையரு நோய்களுக்கும்

பலியாகிக் கால்கைக ளுடல்கள் சிந்தும்
பச்சைரத்தம் பரிமாறி யிந்த நாட்டைச்
சலியாத வருவாயு முடையதாகத்
தந்ததெவர்? அவரெல்லா மிந்த நேரம்

எலியாக முயலாக விருக்கின்றார்கள்!
ஏமாந்த காலத்தி லேற்றங் கொண்டோன்
புலிவேடம் போடுகின்றான் பொது மக்கட்குப்
புல்லளவு மதிப்பேனுந் தருகின்றானா?

படிப்பகம்

www.padippakam.com



## பெரியார் புரட்சி மொழிகள்

- மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு.
- பகுத்தறிவு என்பது மனிதனுக்கு உயிர்நாடி.
- மூட நம்பிக்கையும் குருட்டுப் பழக்கமும் சமூகத்தின் முதல் பகைகள்.
- விதியை நம்பி மதியை இழக்காதே.
- மக்களின் ஒழுக்கத்தையும் மதியையும் கொடுப்பது மது.
- மனிதப் பண்பை வளர்ப்பதே என் வாழ்நாள் பணி.
- பிறருக்குத் தொல்லை தராத வாழ்வே ஒழுக்க வாழ்வு.
- பக்தி இல்லாவிட்டால் இழப்பில்லை. ஒழுக்கம் இல்லாவிட்டால், எல்லாம் பாழ்.
- தீண்டாமை ஒழியவேண்டுமானால் சாதி ஒழிய வேண்டும்.
- கல்வி அறிவும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத் தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.
- பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு அளவுக்கு மீறிய நாணயமும், கட்டுப்பாடும், உறுதியும், தியாக உணர்வும் வேண்டும்.
- ஒருநாடு சுபிட்சத்துடன் வாழ வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம்.
- ஒழுக்கக் குறைவுக்கும் மூட நம்பிக்கைக்கும் எப்படிப்பட்ட கலையும் பயன்பட்டு விடக்கூடாது.
- வாழ்க்கை அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக் கூடாது. மற்றவர் நலனுக்கும் என்று கருத வேண்டும்.
- ஒருவன் தன்னிடம் பிறர் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென எதிர் பார்க்கிறானோ, அப்படி எல்லாரிடமும் தான் நடந்து கொள்வதே ஒழுக்கமாகும்.
- பிறருக்கு ஒழுக்கத்தைப் பற்றிச் சொல்வதைவிட, தன்னிடத்து அது எவ்வளவு இருக்கிறது என்று ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும்.
- என்னை பொறுத்தமட்டில் நான் ஒழுக்கத்துடன் நடந்தால், உண்மையை ஒளிக்காமல் எதையும் நேர்மையுடன் கடைப்பிடித்தால், அதற்குத் தனி சக்தி உண்டு என்பதை நம்புகிறவன்.
- எனது சீர்திருத்தம் என்பதெல்லாம் பகுத்தறிவைக் கொண்டு, ஆராய்ச்சி செய்து, சரி என்று பட்டப்படி நட என்பதேயாகும்.
- மற்றவர்களிடம் பழகும் விதத்தையும், ஒழுக்கத்தையும் சிறு வயதிலேயே நன்றாக ஒருவன் கற்றுக் கொண்டானானால், அவனே வாழ்க்கையில் பெரிய மனிதன் ஆவான்.

தொகுப்பு:

**ம. வே. அருளாளன்**

---

பொபதி ஹிராண்டானி/ சிந்தி

# கணவன்

**இந்திரன்/தமிழ்**

இந்தவீடு என்னுடையது
நான் உன்னைத் தொட்டேன்
முத்தமிட்டேன்
முகர்ந்தேன்; அனுபவித்தேன்
இதனாலேயே நான் உன்னை
இங்கு வைத்திருக்கிறேன்.

இந்த வீட்டிற்குப் பளிங்குத்
தரை உண்டு.
மேசை, நாற்காலிகள்
போடப் பட்டுள்ளன.
மேலே கூரையும்
பக்கத்தில் சுவர்களும்
அருகில் சமையல் அறை
அங்கே படுக்கை அறை
நீ எனக்காக சமையல்
செய்கிறாய்
அதற்காக என்னிடமிருந்து
வேளா வேளை
உணவு பெறுகிறாய்

இந்தவீட்டில்ஆரோக்கியமான
குழந்தைகள் உள்ளனர்.
அவர்கள் என்
இரத்தத்தின் வாரிசுகள்
அவர்கள் என் சொத்தைப்
பயன்படுத்துவார்கள்
என் பெயரை புனிதமாக
மதிப்பார்கள்
என் வம்சத்தை
நிலை நிறுத்துவார்கள்
என்உயிரை அனுசரனையுடன்
வழியனுப்புவதின் மூலமாக
இந்த உலகில் இல்லாவிடினும்
மறு உலகிற்கான உணவை
எனக்குக் கொடுப்பார்கள்

நீ என் குழந்தைககளின்
தாயாக இருக்கிறாய்
இதனாலேயே என் மனைவி
எனும் பதவியை அனுபவிக்கிறாய்
நான் இவர்களின்
தந்தை எனும் நிலையை
மறுப்பே ஏனெனில்
நீ தாய்மையை இழந்து விடுவாய்
நீ எனக்கு சொந்தமானவள்
முழுமையாகவும் உண்மையாகவும்
உன்னுடையவை அனைத்தும்
என் சொந்தம்
ஏனெனில் நான் உனது
கணவன்



படிப்பகம்

www.padippakam.com



தனி இதழ் 2 ரூ.
ஆண்டுச் சந்தா 24 ரூ.
அரையாண்டு 15 ரூ.

சங்கமி

தமிழ் மாத வெளியீடு

# செப்டம்பரிலிருந்து வெளி வருகிறது!

அன்பிற்குரியவர்களே !

வணக்கம். புதுமைக்கு கொஞ்சமும் இடம் தராத வகையில் பழமைப்பாசி மனிதர்களை வழுக்கி விட்டு விடுகிறது. சாதி என்னும் அநீதி மனிதத்தை கூறு போட்டு மானுட ஒற்றுமையை மறத்து நிற்கிறது. பெண்ணடிமைத்தனம் எனும் பொல்லாங்கு பெண்களின் மனித நிலையை மறைத்து விட்டது; இயற்கை உணர்வுகளை முறியடித்து விட்டது, மனிதப் போர்வையில் சுயநலக் கழுகுகள் மனித உழைப்பையும், மனித மாண்பையும் சுரண்டி சுரண்டி சூன்யமாக்கியே விட்டார்கள்.

புதுமைகளால் புல்லரிக்கவும், ஒற்றுமையால் உயர்வை அடையவும் ஆண்-பெண் சமத்துவத்தால் மனித நாகரீகம் பேணவும், அனைவருக்குமான வாழ்வை நோக்கி தொடர்ந்து செல்லவும் ஒரு சிறிய ஏற்பாடுதான் ''சங்கமி'' வெளியீடு; ஆசை என்பதைத் தவிர வேறெந்த அஸ்திவாரமும் இல்லாத நிலையில் நண்பர்களின் அரவணைப்பை நம்பியே ''சங்கமி'' வெளி வருகிறது.

அன்பு, அறிவு, ஆக்கம் இவைகளுக்கான வெளியீடே ''சங்கமி''. மனிதர்கள் மீது அன்புள்ளவர்கள், சமுதாய அறிவின் மீது தாகமுள்ளவர்கள், மானுட மேம்பாட்டிற்கான ஈடுபாட்டிலுள்ளவர்கள் அனைவரும் வரவேற்க, வாரியணைக்க வேண்டிய வெளியீடே ''சங்கமி''

வசதி உள்ளவர்கள் வளர்ச்சி நிதி தாருங்கள், வாய்ப்பு உள்ளவர்கள் சந்தாதார் ஆகுங்கள். உங்களை, உங்கள் நண்பர்களை எங்களுடன் சங்கமிக்க வையுங்கள். அங்கும், இங்கும் எங்கும் ''சங்கமி'' வெளியீட்டை அறிமுகப் படுத்துங்கள். நன்றி.

அன்புடன்

***சங்கமி ஆசிரியர் குழு***

---

தொடர்புக்கு

***சங்கமி***

**3, 4-வது குறுக்குத் தெரு, நியூ காலனி, குரோம்பேட்டை சென்னை-600 044**

படிப்பகம்

www.padippakam.com

# சங்கம்

அடுத்த வெளியீடு

☐ கல்பனா சுமதி விவகாரம் ☐

☐ சுற்றுப்புறச் சூழல் ☐

☐ காணிநிலம் டைரக்டர் அருண் மொழியின் பேட்டி ☐

☐ சாதியச் சிக்கல் ☐

☐ புதுப்புனலாய் பூரிக்கும் பாலஸ்தீனப்போராட்டம் ☐

☐ பொது உரிமையா? பொது வுடைமையா? ☐

☐ ஈழத்துச் செய்திகள் ☐

☐ லாங்ஸ்டன் ஹியூஸ் மொலீனா தேன்மொழி ஜெய பாஸ்கர் யமுனா ராஜேந்திரன் கவிதைகள் ☐

☐ நாத்திக அறிஞர் கோரா—அறிமுகம் ☐

இன்னும் பலவற்றுடன் வெளிவருகிறது.


திருஇன்பஎழிலனின்

**வாழ விடுங்கள்**

**[கவிதைத் தொகுப்பு]**

சமூக அநீதிகளுக்கு
தீர்ப்பு சொல்கிறது

தொடர்புக்கு :

**திருஇன்பஎழிலன்**
124, செறுவங்கி
அவ்வை நகர்
குடியாத்தம்-632 602

**சமுதாய வீதியிலே,**
**சமுத்துவக்களம்**
**அமைத்திட**

**சமத்துவ சிந்தனை**

**'வார இதழ்'**
**படியுங்கள்**

**தொடர்புக்கு :**
சமத்துவ சிந்தனை
1υ, கொடிகாத்த குமரன் தெரு
எம். ஜி. ஆர். நகர்
சென்னை-600 078

வெளி வந்து விட்டது ! வாங்கிப் படியுங்கள் !

**கலைப்புயல்**

**(மாதமிருமுறை)**

புது சமுதாயம் படைக்க புத்தொளியாய் - அரசியல், கலை, இலக்கியப் போர் முழக்கமாய் வருகிறது.

**தொடர்புக்கு :**
**ஸ்ரீ பத்மநாபா பப்ளிகேஷன்ஸ்**
W. 9, பட்டினப்பாக்கம்
சென்னை - 28.

**Advt**


படிப்பகம்

www.padippakam.com





# ஆயுதம் தூக்கியது போதும்; இனி அமைதிதான் எங்களுக்கு வேண்டும்

## இலங்கைத் தமிழ் மாணவர் சர்வேஸ்வரனுடன் ஒரு சந்திப்பு

**இரா. தேசிகன் — N. K. இளந்தமிழன்**

● தமிழர்களின் தேசியத்தன்மை பீறிட்டு எழும்பவும், போராட்ட வடிவம் மாறவும், தமிழர்கள் அனைவரும் சாதி மதம், அரசியல் இவைகளைக் கடந்து நின்று தனிநாடே என்று கோஷத்தை எழுப்பவும் முழு காரணங்களாக அமைந்தது 83-ல் நடந்த சிங்கள இன வெறி தாக்குதல்கள்தான். 1986 வரை தமிழ்மக்களின் பெரு விருப்பத்துடனும், பேரார்வத்துடனும், சிங்கள இன வெறி அரசபயங்கர வாதத்தை எதிர்த்து அனைத்துப் போராளி இயக்கங்களும் நடத்திய சாகசங்கள் அனைத்தும் தமிழர் வரலாற்றில் வீரமும், தீரமும் தியாகமும் நிறைந்த பகுதிகளாகும்

● ஒரு பரந்த குறிக்கோளாக அமைப்பு ரீதியாக வேறு பட்டிருந்த எம் போராளிகள். 1984-ல் ஈழ தேசிய விடுதலை முன்னணி பெயரில் பொது எதிரியை வீழ்த்துவதற்காக கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அதில் EPRLF, EROS, TELO ஆகிய தமிழ் அமைப்புகள் ஒருங்கே நின்றன. அடுத்த கட்ட வளர்சசியாக விடுதலைப் புலிகள் அமைப்பினரும் ஈழ தேசிய விடுதலை முன்னணியோடு அய்க்கியபட்டனர், திம்பு பேச்சுவார்த்தை வரை இயக்க உறவுகளும், நடவடிக்கைகளும் தனிநாட்டிற்கானவெற்றி வாய்ப்பையே உறுதி செய்திருந்தது.

● 1986 மே மாதம் தமிழர் வரலாற்றில் ஒரு கொடூரத்தின் உச்ச கட்ட காலமாகும். சகோதரப் படுகொலை, நயவஞ்சகம், தான் தோன்றித்தனம், குறுகிய பதவிவெறி, புகழ் மயக்கம், சர்வாதிகாரம் ஆகியவை விடுதலைப் போராட்ட பெயரில் முத்திரைப் பதிக்க ஆரம்பித்து விட்டது ஒரு நாள் இரவில் TELO இயக்கத்தினர் அதன் தலைவர் சிறிசபாரத்தினத்தோடு 200க்கும் மேற்பட்டோர் புலிப்படையால் அழிக்கப்பட்டு விட்டனர். அடுத்து PLOT மீதான தடையை LTTE விதித்தது. EPRLF மீது தாக்குதலை கட்டவிழ்த்து விட்டது. பல வேறு பட்ட வடிவில் இயக்கங்கள் இருந்தாலும்—அதன் லட்சியம் ஒன்று என்ற நிலையில் இயக்க மோதலில் புலியினர் ஈழப் போராட்டத்தை பின்னடைவுக்கே கொண்டு வந்தனர்.

● புலிகளால் ஏனைய இயக்கங்களின் செயல்பாடு நிறுத்தப்பட்டதால், சிங்கள இனவெறி அரசுக்கு மனோரீதியிலும் ஆயுத ரீதியிலும் பலத்தை அதிகரித்தது, புலிகளை அடித்து யாழைப்பிடிக்க அவர்கள் நடத்திய மூன்றே நாட்களில் யாழ்குடாவின் 3-ல் 1 பகுதி ராணுவத்தினால் கைப்பற்றப்பட்டது. இந்நிலையில் தமிழ்ப் போராளிகள் புலிகளால் மக்களைப் பாதுகாக்க முடியாத' நிலையில் இலங்கை- இந்திய ஒப்பந்தம் வந்தது

● இன்று காலம் இட்டிருக்கிற கட்டளை. ஆயுத வழிதவிர்த்த அரசியல் பாதை, அதை மீற நினைப்பது இங்கிதமல்ல, இன்று இலங்கையில் இனவாத சித்தாந்தம் சிங்களப்பகுதியில் இனவெறியர்களிடமும், தமிழ்ப்பகுதியில் ஏகபோக பிரதிநிதித்துவ சர்வாதிகார கூட்டத்தாரிடமே சிக்கியுள்ளது. இந்த இருதரப்பினரும் ஆட்சிக்கு வந்தால் மேலாதிக்கவாத சர்வாதிகாரமுறை உருவாகுமே தவிர ஜனநாயகம், சோஷலிசம் என்பதற்கு இடம் இருக்காது.

● இன்றுள்ள தமிழ் மக்களுக்கு ஒரு அரசியல் தலைமை வேண்டியிருக்கிறது, ரத்தகளறிக்கு ஒரு முடிவு வேண்டியிருக்கிறது. இலங்கை அரசு, இயக்கங்கள் அமைதிப்படை இவைகளின் ஆயுதங்களையே இந்நாள் வரை பார்த்து பார்த்து பிரமிப்பும் அலைமோதலும், அலைக்கழிப்புக்கும் ஆளான எம்மக்களுக்கு அமைதி வேண்டும். ஆறுதல் வேண்டும்! அதற்கு தற்போது தேர்தல் என்பது அவசியம். இதன் மூலம் தங்கள் அரசியல் தலைமையை, வழி நடத்துபவரை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இயக்கங்களும் மக்களும் கிடைத்த குறைந்த பட்ச ஜனநாயக உரிமையைப் பயன் படுத்தி மேலும் மேலும் மக்களுக்கான பாதையில் முன்னேற வேண்டும். இதைத்தவிர வேறு வழியில்லை.

[யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ் மாணவரான சர்வேஸ்வரன் டெல்லி நேரு பல்கலைக் கழகத்தில் M.A. அரசியல் விஞ்ஞானம் பயின்றவர்-ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ள இருக்கிறார். நேரு. பல்கலைகழகத்தில் மாணவர்களுக்கிடையே இலங்கைத் தமிழருக்கு தக்க ஆதரவை திரட்டி உள்ளார் சொந்தநாட்டில் இருந்தாலும் எந்த நாட்டில் இருந்தாலும், தம் மக்களுக்குரிய கடமையை எங்கிருந்தும் செய்யலாம் என்பதற்கு சர்வேஸ்வரன் நல்ல எடுத்துக் காட்டானவர்.

படிப்பகம்